# திருக்குறள் கதைகள்
# பொருட்பால்
# 931 – 980

## தமிழறிஞர்
## கே.வி.குணசேகரம்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | திருக்குறள் கதைகள் (931 – 980) |
| நூலாசிரியர் | :- | தமிழறிஞர் கே.வி.குணசேகரம் |
| பதிப்பாண்டு | :- | 2010 |
| மொத்தப் பக்கங்கள் | :- | |
| விநியோகம் | :- | லங்கா புத்தகசாலை<br>கு.டு 1.14, டயஸ் பிளேஸ்<br>குணசிங்கபுர,<br>கொழும்பு – 12 |
| தொ.பேசி | :- | 011-2341942 |
| விலை | :- | |

# என்னுரை

திருக்குறள் கதைகள் பொருட்பால் 931 - 980 வரையான 50 குறள்களுக்கான கதைகள் இந்நூலில் உள்ளன. இது வரை 930 குறள்களுக்கான கதைகள் வெளிவந்துவிட்டன. 1330 குறள்களுக்கும் இதுவரை யாரும் தொடர்கதை எழுதவில்லை. ஒரு நாவலாக இதை நான் எழுதிய போதும் தனித்தனியாகவும் வாசிக்கலாம். ஒவ்வொரு குறளுக்கும் பொருள், விளக்கம், கதை எழுதியுள்ளேன். இப்படியும் இதுவரை யாரும் எழுதவில்லை. குறளுக்கு உரையே எழுதியுள்ளனர். நான் குறளுக்குக் கதை எழுதியதால் குறளை யாபேரும் விளங்கிக் கொண்டனர்.

எழுத வாசிக்கத் தெரிந்த ஒருவர் குறளின் அர்த்தத்தையும் கருத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தே கதைகளாக எழுதினேன். எனது எண்ணம் பெருவெற்றி பெற்றது. தரம் ஐந்தில் கற்கும் பத்து வயது மாணவி எனது குறள் கதைகளை வாசித்துவிட்டு வகுப்பில் தன்னுடன் படிக்கும் மாணவர்களுக்கு அக்கதையை விளக்கமாகக் கூறியதை நான் நேரில் கண்டேன். இது எனக்குக் கிடைத்த வெற்றி மட்டுமல்ல குறளுக்குக் கிடைத்த வெற்றியுமாகும். குறளை மனனம் செய்வதாலோ, அதன் கருத்தைக் கூறுவதாலோ பயனில்லை. அதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளல் வேண்டும். அந்தப் புரிந்துணர்வை எனது குறள் கதைகள் நிறைவேற்றியுள்ளன.

இந்த வகையில் இந்து தத்துவ நூல்கள் பலவற்றைக் கதைகளாக்கி வருகிறேன். அவற்றைச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை விருப்புடன் வாசித்து வருகிறார்கள். இந்த வகையில் திருவருட்பயனையும், சிவஞானபோதத்தையும் தற்பொழுது கதைகளாக எழுதியுள்ளோன். இக்கதைகள் இந்து தத்தவத்தை மக்களுக்குப் புரிய வைக்கும் என்று நினைக்கிறேன். நான் படிக்கும் போது என்னால் புரிந்துகொள்ள முடியாதவற்றை இந்து தத்துவ நூல்களைத் திரும்பத்திரும்பப் படித்துப் புரிந்து கொண்டேன். அவற்றை இந்துக்கள் எல்லோரும் புரிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதே எனது விருப்பம். இக்கதைகளிலுள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையேயாகும். யாரையும் குறிப்பிடுவனவல்ல.

நான் எழுதும் நூல்களில் உள்ள எழுத்துப் பிழைகளை நீக்கிச் சீர்செய்து தரும் ஓய்வுபெற்ற அதிபர்களான திரு வா. ஜெயரட்ணம், திரு. தி.கிருஷ்ணகுமார் அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளை நீக்கித் தருவதோடு, தகுந்த ஆலோசனைகளை வழங்கி என்னை உற்சாகப்படுத்தும் ஆசிரியை செல்வி ப.இறைமகளுக்கும், எனது கதைகளை அழகாக கணனி மயப்படுத்தித்தரும் செல்வி. க.தேனமிர்தம் அவர்களுக்கும், இந்நூலை வெளியிடும் கொழும்பு 12இல் அமைந்துள்ள லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்
**கே. வி. குணசேகரம்**

ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம்.

கோப்பாய் மத்தி, கோப்பாய்.

## அணிந்துரை

சில நாட்களுக்கு முன் நான் பிரியாவிடை நிகழ்வில் கலந்துகொண்டேன். அங்கே அவரை அதிபர்களும், ஆசிரியர்களும், பேராசிரியர்களும் அவரது பெருமைகளை கூறியவிதம் எனக்கு வியப்பை அளித்தது. அதனால் அவரது நூலுக்கு நானும் அணிந்துரை எழுதலாம் என்று நினைத்தேன்.

இவர் எழுதிய பல நூல்களைப் படித்துள்ளேன். அனைத்தும் மிகவும் எளிமையான தமிழில் உள்ளன. அதில் உள்ள தத்துவங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கதைகள் கூறப்பட்டுள்ள விதம் எனக்குப் பிரமிப்பைத் தந்தது. இங்கே வள்ளுவருடைய சிறப்புப் பற்றியும், புராண இதிகாச நாயகர்களுடைய சிறப்புப் பற்றியும் வர்ணிக்கப்பட்டுள்ளது. மனித வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்ற கற்பனையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் தான் பலர். இதனால் உலகில் வாழும் மனிதர் தமது மாண்பை மறந்து பல தீய செயல்கள் செய்துகொண்டிருக்கின்றனர். அதை விலக்கி நீதியான வழியில் வாழவேண்டும் என்ற கோட்பாட்டை ஆசிரியரின் ஒவ்வொரு நூலும் சொல்கின்றது.

விஞ்ஞானிகளின் கருத்துக்களைவிட மெய்ஞானிகளின் கருத்துக்களையே மக்கள் அதிகம் நம்புகின்றனர் என்பது ஆசிரியரின் நூலில்

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தர்மமான முறையில் வாழ்பவன் எப்பொழுதும் இன்பமாக வாழ்வான் என்பது அவரது எழுத்துக்களின் அடிப்படையாகும்.

திரு.வ.தில்லைநடராசா
கிராம உத்தியோகத்தர் தரம் 1
மக்கள் காவலன், கடமைவீரன், தொல்புத்திரன்.

## அணிந்துரை

எனது அன்பிற்கும், பெரு மதிப்பிற்குமுரிய நல்லூர்கோட்ட முன்னைனாள் பணிப்பாளர் திரு.கே.வி.குணசேகரம் அவர்கள் அன்பும், அறிவும், ஆற்றலும் மிக்க அறிஞனாக விளங்குகின்றார். எல்லோரிடமும் மிக எளிமையாகப் பழகக்கூடிய இவர் தன்னலமற்ற அற்பணிப்பான ஒரு சேவையாளன். எந்த வகையான பிரச்சினைகளாக இருந்தாலும் பொருத்தமான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் தீர்வு கண்டுவிடுவார். இவரின் சேவைக்காலம் பொற்காலமாகவே கருதப்படுகிறது. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் நல்லூர்க் கல்விக் கோட்டத்தை அகில இலங்கை ரீதியாக முதலிடம் அடையச் செய்தவர். நூற்றுக் கணக்கான புத்தகங்களை எழுதி வெளியிட்ட இவர் பரபரப்பு எதுவுமின்றி மிக அமைதியாக வாழ்ந்து கொண்டிருப்பது இவரை ஒரு ஞானியாகக் காட்டுகின்றது. இவரது எழுத்துக்கள் தரம் ஒன்று மாணவர்களிலிருந்து வயது சென்ற முதியவர் வரை கவரக்கூடியன. பாடசாலையையும் ஆசிரியர்களையும், மாணவர்களையும், கல்வி நிர்வாகத்தையும் கருவாகக் கொண்டே இவரது கதைகள் யாவும் அமைந்துள்ளன. திருக்குறள், பகவத்கீதை, திருவருட்பயன் போன்ற இந்து தத்துவ

நூல்களுக்கான கதைகள் கூட மேற்குறிப்பிடப்பட்ட பாத்திரங்களை அடிப்படையாக வைத்து நீதியைப் போதிப்பனவாகவே உள்ளன. இவரது எழுத்துப்பணி தொடரவேண்டும், நோய்நொடியின்றி பல்லாண்டு காலம் வாழவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. க. வடிவேல்
அதிபர் தரம் 1
யா ∴ காசிப்பிள்ளை வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.

## தூண்டில் முள்

நவராசா சிரித்தான்; "கெங்காவினுடைய கதையை நம்பி நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதிக்கு நேர்த்தி வைக்காதையும். முன்பு கெங்கா குடிக்க மாட்டன் என்று சொன்னான். அதை நம்பி நான் நேர்த்தி வைத்தேன். ஒரு மாதம் குடிக்காமல் இருந்தான். நான் நேர்த்தியை முடித்த சில நாட்களுக்குப் பின் குடிக்கத் தொடங்கி விட்டான்." என்றான் நவராசா.

"எனது சாட்டில் மகா கணபதிக்கு ஓர் அபிஷேகம் செய்யட்டன். நீ ஏன் தடுக்கிறாய்?" என்று சொன்னான் கெங்காதரன்.

"நீ குடிப்பதை விட்டால் அபிஷேகமல்ல சங்காபிஷேகமே செய்வன். குடிமட்டுமே உன்னிடம் இருக்கு. நேற்றுச் சூதாடப் போனதாகவும் கேள்விப்பட்டன். இதெல்லாவற்றையும் எங்கே போய்ப் பழகினனி…?" என்றவாறு மோட்டார் வண்டியை இயக்கினான் நவராசா.

சிறிது தூரம் வந்ததும் கெங்காதரன் சொன்னான்; “துர்க்காவுக்கு முன்னாலை நான் சூதாடப் போனதைச் சொல்கிறாய். அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்”

“உன்னைப் பற்றி என்ன நினைக்க இருக்கு. யசோதினி எனது வீட்டுக்கு வந்து நீ செய்வதெல்லாவற்றையும் சொல்லி அழுவாள். அதனால் துர்க்காவுக்கு எல்லாம் தெரியும். உலகத்தில் “கெட்டுப் போவேன் பந்தயம் பிடி” என்று சொல்பவர்கள் செய்யும் பாதகமான செயல்களெல்லாவற்றையும் நீ செய்கிறாய். சிலர் குடிப்பார்கள்; சிலர் சூதாடுவார்கள்; சிலர் இருமனம் கொண்ட விலை மாதர்களிடம் செல்வார்கள். இம்மூன்றும் பொருளை அள்ளிச் செல்லும். ஆனால் நீ தவிர்க்க வேண்டிய மூன்றையும் விருப்புடன் கைக்கொள்கிறாய். அதனால் உனது உடல் மனம் பொருள் மட்டுமல்ல உனது குடும்பத்தின் மானம் மரியாதை நல்வாழ்வெல்லாம் இல்லாமற் போய்விட்டது. நேற்று அரசடியில் வழமையாகச் சூதாடும் இடத்திற்குச் நீ சென்றதாக அறிந்தேன்.” என்று நவராசா கூறும் போது கெங்காதரன் சொன்னான்; “போனனான்தான் சூதாடவில்லை”

“பஞ்சமா பாதகங்களைச் செய்வோர் கூசாமல் பொய் சொல்வார்கள்; சத்தியமும் செய்வார்கள். அதனால் தான் நான் உன்னை மகா கணபதி ஆலயத்திற்கு அழைத்துச் சென்று சத்தியம் பண்ணுமாறு கேட்பதில்லை. நீ நேற்றுச் சூதாடி ஆயிரத்து இருநூறு ரூபாவை இழக்கவில்லையா…? என்னுடைய முகத்தைப்

பார்த்துச் சொல்லு'' என்றான் நவராசா. கெங்காதரன் எதுவும் பேசாமல் இருந்தான்

''உன்னைப் பற்றிய தகவல்கள் எல்லாம் எனக்கு உடனுக்குடன் கிடைத்து விடும். காலையில் நீ கோயிலில் இருந்தனி. உனது சூதாட்ட நண்பர்களில் ஒருவனான தனஞ்செயன் கோயிலடிக்கு வந்து உன்னை அழைத்துச் செல்லவில்லையா...? வசந்தினியில் மோகங் கொண்டு அவளே கதியென்று அவளின் வீட்லிருந்தாய்; அளவுக்கதிகமாகக் குடித்தாய்; சூதாடுகிறாய். இதனால் உனது செல்வம் தினமும் எவ்வளவு அழிகிறது என்று நினைத்துப் பார்த்தாயா? வசந்தினிக்கு சங்கிலி வாங்கிக் கொடுத்தாய். அவள் நல்ல நாளில் கற்பூரம் கொழுத்தி சுவாமி படத்திற்கு முன்னால்தனது கழுத்தில் அதைத் தாலி மாதிரி கட்டச் சொன்னாள். அதில் உருகிப் போனாய். அவளை நம்பி எவ்வளவு செலவு செய்தாய். அவள் உன்னை வெறுத்ததினால் குடிகுடியென்று குடித்தாய். அவளுடன் தொடாபு கொள்ள முன்பே உனக்குச் சூதாடும் பழக்கம் உண்டு. அடுத்தடுத்து வெற்றி கிடைத்தாலும் ஒருபோதும் சூதாடக் கூடாது. அந்த வெற்றி தூண்டில் முள்ளை உணவுப் பொருள் என்று நினைத்து மீன் விழுங்குவதைப் போன்றது.'' என்றான் நவராசா.

கெங்காதரன் பேசாமல் இருந்தான். நவராசா மோட்டார் வண்டியைக் கெங்காதரனது வீட்டுப் படலையில் நிறுத்தினான். உள்ளேயிருந்து யசோதினி வந்தாள்.

“இன்று இவர் குடிக்கவில்லை என்று சொல்கிறார். ஆனால் சிறிது நேரத்தில் அவர் குடித்தாரா இல்லையா என்பது அவரின் வாயாலே வெளிப்பட்டு விடும். மகா கணபதி வல்லமை உள்ளவர். பொய்ச்சத்தியம் பண்ணினால் தப்பாது தண்டனை தருவார். பின்னேரம் தனஞ்செயன் வந்து இவரை அழைத்துச் சென்றவன். அவனும் குடிகாரன். அத்துடன் சூதாடுபவன்.” பெருமூச்சு விட்டாள் யசோதினி.

“இன்று கெங்கா குடிக்கவில்லை. இனிக் குடிக்க மாட்டான். அவனை ஏசாது அன்பாகப் பராமரியுங்கள். தீய செயல்கள் பலவற்றைச் செய்பவர்களை உடனடியாகத் திருத்த முடியாது. படிப்படியாகத்தான் திருத்துல் வேண்டும். பயப்படாதைங்கோ கெங்காதரன் திருந்துவான்.” என்றான் நவராசா.

“அப்படித்திருந்தினால் எமது குடும்பம் தழைத்து விடும். மாமாவிடம் ஏராளமான சொத்திருக்கு. இவரின் நடத்தைகள் மிகவும் மோசமானதால் அவர் கலைப்படுகிறார்” என்றாள் யசோதினி.

“நான் வருகிறேன்.” என்று புறப்பட்டான் நவராசா. கெங்காதரன் வீட்டுக்குள்ச் சென்றான். யசோதினி நாலைந்து கறிகளுடன் வாழையிலையில் சோற்றைப் போட்டாள். கெங்காதரன் நிமிர்ந்து பார்த்தான். அவள் மிகவும் மெலிந்திருந்தாள். முகத்தில் எலும்புகள் தள்ளிக் கொண்டிருந்தன.

---

**931. வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று.**

---

வெற்றி கிடைத்தாலும் ஒரு போதும் சூதாடுவதை விரும்பக் கூடாது. அந்த வெற்றி தூண்டிலை இரை என்று நினைத்து மீன் விழுங்குவதைப் போன்றது.

## ஒன்றுக்கு நூறு

யசோதினி நல்ல அழகி. ஏழையானாலும் கற்றவள். அவளைக் காதலிப்பதற்குப் பலர் போட்டியிட்டனர். கெங்காதரன் அவளின் அயல் வீட்டுக் காரன். கெங்காதரனின் தகப்பனார் இரத்தினசிங்கம் பெரியவர்த்தகர். அதனால் கெங்காதரன் எப்பொழுதும் தன்னை மிகவும் நன்றாக அலங்கரித்திருப்பான். நீளக் காற்சட்டையும் மினுக்கிய சட்டையும் அணிந்திருப்பான். அத்துடன் யசோதினியின் குடும்பத்தினருடன் கெங்காதரனது குடும்பம் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகி வந்தது. கெங்காதரன் யசோதினியின் வீட்டுக்கு வந்தால் யசோதினி ஒளித்து விடுவாள். அவனது கண்கள் ஆவலுடன் அவளைத் தேடும். ஆனால் அவளைக் காணாது. வழியில் அவளைக் கண்டால் அவன் கேலி செய்வான். அவள் உதட்டுக்குள் சிரிப்பாள். அவனது அழகும் தோற்றமும் அவளையும் கவர்ந்தது.

யசோதினி மீது அளவற்ற பாசம் வைத்திருந்தார் இரத்தினசிங்கம். ஏழையானலும் நல்ல பெண். “குடும்பத்திற்கேற்ற திருமகள்” என்று

நினைப்பார். அவரது மனதுள் அவளைக் கெங்காதரனுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அதை ஒரு நாள் தனது மனைவியான தாட்சாயினிக்குச் சொன்னார்; “நான் எப்பவோ நினைத்து விட்டேன். நீங்கள் என்ன சொல்வீர்களோ எனப் பயந்தேன். உங்களது சகோதரிக்கு ஒரு பெண் இருக்கிறாள்” என்றாள்.

“ம். அவள் இவனுக்குச் சரிவரமாட்டாள். இவனும் செலவாளி. அவளும் அப்படி. இரண்டு பேரும் ஒரே மாதிரியாக இருந்தால் குடும்பம் உருப்படாது. இவன் சூதாடப் பழகி விட்டான். நல்ல ஒரு குடும்பப் பெண்ணால் தான் அவனைத் திருத்த முடியும்” என்றார். ஒரு நாள் யசோதினியைக் கேட்டார். அவள் வெட்கத்துடன் ஓடி விட்டாள்.

யசோதினியைத் தனக்குத்திருமணம் செய்ய இரத்தினசிங்கம் நினைத்திருந்ததை தாய் மூலம் அறிந்த கெங்காதரன் மிகவும் மகிழ்ந்தான். அவன் ஒருநாள் யசோதினியின் வீட்டிற்குச் சென்ற போது அவள் தனியே நின்றாள். அவனைக் கண்டதும் அவளுக்கு வெட்கம் அதிகரித்தது. மெல்ல நழுவ நினைத்தாள்.

“இரு வீட்டாரும் எமக்குத் திருமணம் செய்து வைப்பதாகத் தீர்மானித்து விட்டனர். பிறகேன் பயப்படுகிறீர்?” என்றவாறு அவளைப் பார்த்தான்; “டேய் கெங்கா, யசோதினியை எனக்குப் பிடித்து விட்டது. அவளின் முகத்தில் திருமகள் குடியிருக்கிறாள். அவளின் பற்கள் முத்துக்களை அடுக்கிய மாதிரி உள்ளன. அவளின் கண்களைப்

பார். அதைப் பார்த்துக் கொண்டிருந்தால் பசியே வராது. ஒவ்வொரு அங்கமும் சிற்பி அளவெடுத்துச் செதுக்கிய மாதிரி இருக்கு. அவளை நான் அடைந்தால் அவளை இராசாத்தி மாதிரி வைத்திருப்பேன். நான் எவ்வளவோ முயற்சி செய்தும் சரிவரவில்லை'' என்று முருகேசன் சொன்னது அவனுக்கு நினைவில் வந்தது.

சோற்றை வாழையிலையில் போட்டு விட்டு அவனுக்கருகில் நின்ற யசோதினியைப் பார்த்தான். அவனது இதயம் துடித்தது. முருகேசன் சொன்ன அழகு உருக்குலைந்து எலும்புக் கூடாக நின்றாள்.

முதல் நாள் அவளை அவன் சந்தித்த போது கேட்டான்; ''எமது பெற்றோருக்கு இத்திருமணத்தில் விருப்பமிருக்கு. உனக்கு என்னில் விருப்பமிருக்கா....?''

''இல்லை... எனக்கு விருப்பமில்லை...?'' என்றாள் யசோதினி.

''அப்ப ஏன் ஒப்புக் கொண்டனீர்''

''என்னை உங்கள் தந்தை கேட்டார். நான் பதில் சொல்லவில்லை. எனது பெற்றோரைக் கேட்ட அவர்கள் சம்மதித்து விட்டார்கள். நான் என்ன செய்ய முடியும்....?''

''நீ யாரையாவது காதலிக்கிறாயா....? உண்மையைச் சொல்...''

“இல்லை”

“அப்ப ஏன் என்னை விரும்பவில்லை?”

“நீங்கள் சூதாடுவதாகக் கேள்விப் பட்டேன். ஒரு பொருளைப் பெற்று, அதே சமயம் நூறு பொருளை இழக்கும் சூதாடிகளின் வாழ்க்கை இன்பமாகவோ சிறப்பாகவோ இருக்காது. எனது தந்தை சூதாடுபவர். அதனால் நாம் படும் துன்பங்கள் கணக்கற்றவை. நீங்கள் சூதாடமாட்டேன் என்று சொன்னால் நான் உங்களைத் திருமணம் செய்கிறேன். இல்லாவிட்டால் கன்னியாகவே வாழலாம்.”

“நான் இனிமேல் சூதாடமாட்டேன். இது மகா கணபதி மீது சத்தியம்” என்று கூறி அவளது கையைப் பிடித்து அதை உறுதி செய்தான்.

அவன்தனது கையைப் பிடிப்பான் என எதிர்பாராத யசோதினி குழறி விட்டாள். அதை நினைத்துப் பார்த்தான். எவ்வளவோ கனவுகளோடும் கற்பனைகளோடும் தன்னைத் திருமணம் செய்த யசோதினி அவையெல்லாம் அழிந்தமையால் உருக்குலைந்து நிற்பதைப் பார்க்க அவனுக்கு வேதனையாக இருந்தது. அதனால் சோற்றை உண்ணாமல் எழுந்தான்.

“சாப்பிடுங்கோ குழைத்துத் தருகிறேன்” என்றாள் யசோதினி.

---

**932.ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்**
**நன்றுஎய்தி வாழ்வதோர் ஆறு.**

---

ஒரு பொருளைப் பெறுவதற்காக நூறு பொருளை இழக்கும் சூதாடிகளுக்கு, நன்மை பெற்று வாழும் சிறப்பான வாழ்க்கை உண்டாகாது.

## உருண்டோடும்

யசோதினியின் முகத்தைப் பார்த்ததும் கெங்காதரனின் கண்கள் கசிந்தன. அவள் நல்ல அழகி. கன்னியாக அவள் இருக்கும் போது அவளின் கடைக் கண் பார்வைக்காகப் பலர் அலைந்தனர். அவளது தகப்பனார் காதலித்துத் தான் அவளது தாயாரைத் திருமணஞ் செய்திருந்தார். இளைஞராக அவர் இருந்த போது அவர் தன்னைக் காதலித்த விதம் பற்றியும் பின் அவர் தன்னை ஏமாற்றிய விதங்கள் பற்றியும் அவளது தாயார் யசோதினிக்குக் கூறியமையால் அவளுக்குக் காதல் மீது அளவுக்கதிகமான வெறுப்பிருந்தது. அத்துடன் அவளது மூத்த சகோதரன் பட்டணத்தில் படிக்கும் போது ஒரு பெண்ணைக் காதலித்து அவளுடன் சென்று விட்டான். ஒரு வருடத்தின் பின் அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. ஆனால் அந்தப் பெண் தனது பிள்ளையை விட்டு விட்டு அவனது நண்பனுடன் சென்று விட்டாள். அதனால் அந்தக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பும் இப்போது அவர்களுக்குப் வந்து விட்டது. அதனால் யசோதினி தன்னைச் சுற்றி வட்டமிட்ட இளைஞர்கள் எல்லோரையும் வெறுத்தாள். தனது பெற்றோரை விட அவள் கெங்காதரனின் பெற்றோரில் அதிக பாசம்

வைத்திருந்தாள். அதற்குக் காரணம் இரத்தினசிங்கம் குடிப்பதில்லை; சூதாடுவதில்லை. தனது மனைவியை அவர் பொன்போலப் பாதுகாத்து வந்தார். அவளின் மீது அளவுக்கதிகமான அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். ஆனால் யசோதினியின் பெற்றோருக்கிடையில் தினமும் ஆயிரம் தடவைகள் போர் நடக்கும். மனைவியின் மீதும் குடும்பத்தின் மீதும் அளவுக்கதிகமான பற்று வைத்திருந்த இரத்தினசிங்கத்தை அவளுக்குப் பிடித்தமையால் தான் அவள் இத் திருமணத்திற்குச் சம்மதித்தாள்.

திருமணமான புதிதில் கெங்காதரன் வார்த்தைகளால் கூட அவளைத் துன்புறுத்தவில்லை. அவளின் மீது அளவுக்கதிகமான பாசத்தை வைத்திருந்தான். அதனால் அவன் பல குற்றங்களைச் செய்த போதும் அவளால் அவனை வெறுத்தொதுக்க முடியவில்லை.

‘‘யசோ, ஏதோ கிரகக் கோளாறினால் போலும் அவன் உன்னை விட்டு விட்டு விலைமாதான வசந்தினியே கதியென்று கிடக்கிறான். ஒழுங்கான நல்ல பெண்ணால் எத்தகைய கொடுமையான கணவனையும் திருத்த முடியும். நான் உன்மீது கொண்ட பாசத்தால் உனக்குக் கொடுமையிழைத்து விட்டேன். சூதாடினான். அதைத் திருத்தலாமென்று பார்த்தால் விலைமாதரிடம் செல்கிறான். குடிக்கிறான். இதையெல்லாம் எங்கு பழகினானோ தெரியாது. எமது பரம்பரையில் இல்லாத பழக்கங்கள் அம்மா அவை. அவன் ஒரு நாள்த்திருந்துவான்; அதுவரை பொறுத்திரம்மா. இவனை நம்பாததால் தான் நான் பெரும்பாலான சொத்துக்களை உனது பெயரில்

எழுதி வைத்துள்ளேன். வியாபார நிறுவனத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைத் தான் அவன் அழிக்கிறான். அவன் திருந்தாவிட்டாலும் குடித்துச் சாகட்டும். ஆனால் அவன் உயிரோடு இருக்கும் வரை நீ அவனை விட்டுப் பிரிந்து விடாதே…'' என்று இரத்தினசிங்கம் கெஞ்சியதால் யசோதினி அவனை வெறுக்காமல் இருந்தாள்.

யசோதினி குழைத்துக் கொடுத்த சோற்றைக் கையில் வாங்கி உண்டான் கெங்காதரன். பலகறிகள் சேர்த்துக் குழைத்ததால் அச்சோற்றுத் திரழ் அமுதாக இனித்தது. அதனால் அவள் குழைத்துக் கொடுத்த முழுச் சோற்றையும் உண்டான் கெங்காதரன்; ‘‘இப்போ எப்படி உண்டீர்கள். இன்னும் கொஞ்சம் குழைத்துத் தரட்டா'' என்று அன்பொழுகக் கேட்டாள் யசோதினி.

‘‘ம்'' என்றான். அவனது கண்களால் கண்ணீர் ஒழுகியது.

‘‘இவ்வளவு பாசமுள்ள மனைவியை ஏன் நான் வெறுத்து ஒதுக்கினேன்? இவளில் என்ன குறையைக் கண்டு இவளை வெறுத்து வசந்தினியிடம் சென்றேன்? அவள் அரைகுறையான ஆடைகளை அணிவாள். மார்புப் பகுதியின் பெரும்பகுதியும் முதுகின் பெரும்பகுதியும் வயிறும் தெரியும். அவளின் உழைப்பின் மூலதனம் அதுதானே. அவளின் அங்கங்களின் பொலிவைவிட யசோதினியின் அங்கங்கள் பொலிவானவை. அத்துடன் அவளின் மயக்கு வார்த்தைகளும் வேசித்தனமான சொற்களும் தான் எனக்கு

உற்சாகத்தைக் கொடுத்தது. ஒரு குலமகள் அப்படி நடக்கமாட்டாள்'' என்று நினைத்தான் கெங்காதரன். அப்போது சோற்றைக் குழைத்தக் கொண்டு வந்த யசோதினி உருண்டையாகத் திரட்டி கெங்காதரனின் கையில் கொடுத்து விட்டுச் சொன்னாள்; ''ஒருவன் உருளுகின்ற கருவியை உருட்டி ஓயாமல் சூதாடிக் கொண்டிருப்பானேயானால் அவனுடைய பொருள்கள் யாவும் காலகதியில் உருண்டோடிப் பகைவரைச் சென்றடையும்'' என்று எனது தகப்பனாரின் தந்தை எனது தகப்பானாருக்குக் கூறுவார். அதனால் தயவு செய்து நீங்கள் சூதாடாதீர்கள். இன்றும் நீங்கள் சூதாடச் சென்றீர்கள்'' என்றாள் யசோதினி. அவளது கன்னங்களால் கண்ணீர் வழிந்தது

**933. உருள்ஆயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஓய்ப் புறமே படும்.**

ஒருவன் உருளுகின்ற சூதாட்டக் கருவியை உருட்டி இடைவிடாமல் சூதாடினால், அவனுடைய பொருள் யாவும் உருண்டோடிச் சென்று பகைவரை அடையும்.

## கொடிய வறுமை

''நான் குடியை விட்டு விட்டேன்; வசந்தினியிடமும் செல்வதில்லை; சூதாட்டத்தையும் விட்டு விடுகிறேன்'' கெங்காதரன் கூறிக் கொண்டிருக்கும் போது யசோதினி விக்கி விக்கி அழுதாள். அவளால் வேதனையைத் தாங்க முடியவில்லை. அவளது அழுகைச் சத்தம் கேட்டு இரத்தினசிங்கமும் தாட்சாயினியும் அங்கே வந்தனர்.

இரத்தினசிங்கத்திற்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது; ‘‘டேய், நீ ஏனடா நாம் சாகிற வயதிலே வேதனையைத் தருகிறாய். நீ வாழத் தெரியாதவன்; சூதாடி என்பதால் தான் நல்ல பண்புடன் வாழ்ந்த யசோதினியை உனக்குக் கட்டிவைத்தேன். அவள் குலவிளக்கு. அவள் என்னத்தில் உனக்குக் குறை வைத்தவள். திருமகளாக வீற்றிருக்கும் அவளைத் துன்புறுத்தினால் உன்னுடைய வாழ்வு நாசமாகிப் போம். குடித்து விட்டு நீ வரும் போது வீதியில் வாகனமேதாவது மோதி உன்னைக் கொல்கிறது இல்லையே. காலையில் கோயிலுக்குப் போனாய்; சுவாமியாரரைத் தரிசித்து விட்டுக் குடிக்கமாட்டேன் எனச் சத்தியஞ் செய்தாய். இப்ப குடிச்சிட்டு வந்து அவளுக்கு என்ன செய்தாய்? அவள் ஏன் அழுகிறாள்? அவள் அழுதால் என்னுடைய நெஞ்சு வெடித்து விடும்’’ விம்மினார் இரத்தினசிங்கம்.

‘‘பெற்ற தகப்பன் பிள்ளைக்குச் சா வரவேண்டுமென்று எண்ணுவதை நான் இப்போது தான் காண்கிறேன். மகா கணபதிக்கு நேர்த்தி வைத்துப் பிறந்த நீ பஞ்சமா பாதகங்களை ஏன் செய்கிறாய்? நீ குடிக்கப் போகாவிட்டாலும் யாரோ ஒருவன் தேடி வீட்டுக்கு வந்து விடுகிறான். உன்னை உருப்பட விடுறார்களில்லையே..’’ அழுதாள் தாட்சாயணி.

‘‘அவர் குடிக்கவில்லை மாமா. அவரோடு கதைக்கும் போது எனக்கு அழுகை வந்து விட்டது. அதனால் தான் அழுதேன்’’ என்றாள் யசோதினி.

“அப்படியா…? நீ சொல்வதைக் கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது. கெங்கா, பஞ்சமா பாதகங்களை விட்டுடடா. எமது பரம்பரையில் இல்லா பழக்கங்களை நீ பழகியிருக்கிறாய். அதனால் குடும்ப மானம் மட்டுமா போகிறது. உன்னுடைய பிள்ளைகளின் நல்வாழ்வுமல்லவா அழிகிறது. இனியாவது திருந்தடா…. நீ திருந்தினால் தான் மூத்தவளின் திருணமணம் நடைபெறும். மூத்தவளின் திருமணம் நடக்காவிட்டால் அவள் செத்துப் போவாள்” அழுதார் இரத்தினசிங்கம்.

“நான் இனிக் குடிக்க மாட்டன் அப்பா. முன்பு போலச் சத்தியம் செய்து விட்டுச் சத்தியம் தவற மாட்டன்” என்றான் கெங்காதரன்.

“நீ சாப்பிடுவதைப் பார்க்க எவ்வளவு சந்தோசமாக இருக்கு. நீ எவ்வளவு கொடுமைகளை யசோதினிக்குச் செய்திருப்பாய். இருந்தும் அவள் உன் மீதுள்ள பாசத்தைக் குறைத்துள்ளாளா..? எந்தப் பிரச்சினையுமில்லாமல் வாழும் என்னில் கூட உனது அம்மா இவ்வளவு அன்பு கொண்டதில்லை மகராசி…” என்று அழுதபடி அவ்விடத்தை விட்டுச் சென்றார் இரத்தினசிங்கம். அவரின் பின்னால் தாட்சாயினியும் சென்றாள்.

“சூதாட்டத்தைத் தயவு செய்து கை விடுங்கோ. எனது தந்தையார் சூதாடுவதால் தான் எமது குடும்பம் கொடிய வறுமைக்குட்பட்டது; கல்வியறிவு இல்லாமற் போனது; எனது மூத்த சகோதரன் சீரழிக்கக் காரணமாக இருந்தது அப்பாவினுடைய சூதாட்டம் தான். சூதாட்டம்

ஒருவனுக்கு இழிவுகள் பலவற்றையும் உண்டாக்கிக் குடும்பத்தின் சிறப்பை அழிக்கும். குடும்பத்திற்குக் கொடிய வறுமையை உண்டாக்குவது சூதாட்டம் தான். அப்பா உழைக்கும் பணம் முழுவதை சூதாடி அழிந்தார். அம்மாவுடைய நகைநட்டுகளையும் எம்முடைய நகை நட்டுக்களையும் அப்பா சூதாடி அழித்தார். எனக்கு ஒரு தம்பி இருந்தான். அவனுக்கு ஒரு முறை கடுமையான நோய் வந்து விட்டது. தனியார் வைத்திய சாலையில் சேர்த்தோம். அவனுக்கு ஓர் ஊசிமருந்து தேவைப்பட்டது. அம்மா தனது காதில் இருந்த தோட்டைக் கழற்றிக் கொடுத்தா. அப்பா அதை வைத்துச் சூதாடித் தோற்று விட்டார். மருந்து இல்லாததால் எனது தம்பி இறந்து விட்டான். அன்றில் இருந்து அம்மா காதில் தோடு போடுவதில்லை. அப்பாவுடன் கதைப்பதும் இல்லை. அப்பாவின் சூதாட்ட வெறிதான் தம்பியின் உயிரைப் பறித்தது. அதனால் தயவு செய்து சூதாடாதைங்கோ...'' அழுதாள் யசோதினி.

கெங்காதரன் பேசாமல் நின்றான். அதனால் யசோதினியின் அழுகை அதிகரித்தது. விம்மி விம்மி அழுதாள். 'அவளின் அழுகைச் சத்தத்தைக் கேட்டு மீண்டும் தனது பெற்றோர் வந்து விடுவார்களோ என்ற பயம் கெங்காதரனுக்கு உண்டானது.

``அழாதை யசோ'' என்று கூறியபடி அவளது கண்களால் வழிந்த கண்ணீரைத் துடைத்தான். அவள் உணர்ச்சி மிகுதியால் அவனைக் கட்டிப் பிடித்து அழுதாள்.

**934. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவது ஒன்று இல்.**

ஒருவனுக்கு, துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்கி, அவனது புகழைக் கெடுக்கின்ற சூதைப்போல வறுமை தருவது வேறொன்றுமில்லை.

## ஒன்றுமில்லாதவர்

“யசோ அழாதை, உன்னுடைய பெருமையை உணராமையால் தானம்மா நான் பேயாக மாறி அலைந்தேன். அதனால் எமதும். எமது குடும்பத்தின் மானம் போய் விட்டது. நான் உணர்ச்சி மேலீட்டால் நல்லவற்றை உணராது வாழ்ந்து விட்டேன். அழாதே.... இனி அழக் கூடாது.” இறுக அணைத்து அவளது முதுகை வருடினான் கெங்காதரன்.

யசோதினி கரைந்து போனாள். இரண்டு மூன்று வருட காலமாக அவன் அவளைப் பாசத்துடன் அணைத்து அவளது முதுகை வருடியதில்லை. பல காலத்திற்குப் பின், யசோதினியின் பாசம் மிகுந்த அணைப்பு அவனுக்குப் பரவசத்தைக் கொடுத்தது; “யசோதினி எவ்வளவு நல்லவள். வசந்தினி பேய். தனது தேவைக்காக மட்டும் நான் கொடுக்கும் பொருளுக்கேற்பவே அனைத்துச் சுகங்களையும் தருவாள். அத்துடன் அவன் ஆசை மிகுதியோடு அவளுக்கு அருகிற் செல்லும் போதெல்லாம் அவனை ஏசுவாள்; “நேரங்காலம் தெரியாமல்

உனக்குச் சுகம் தேவைப்படுகிறது. இப்போ எனக்குத் தேவையானவர் ஒருவர் வரவுள்ளார் போய் நாளைக்கு வா'' என்று கூறியபடி அவனது சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பார்ப்பாள். அதில் பணம் அதிகமாக இருந்தால் அதை எடுத்து விட்டு அவனை மகிழ்வுடன் முத்தமிடுவாள்; அன்பாகக் கதைப்பாள். அதன் பின் அவள் தேவையானவர்களைப் பற்றிக் கதைக்க மாட்டாள். அன்று வசந்தினியின் அணைப்பு முன்பு எப்போதையும் விட இனிமையாக இருக்கும்.

ஒரு நாள் அவனது மூத்த மகள் இந்துஜா கேட்டாள்; ''அப்பா, ஒரு மகள் அல்ல ஒரு பெண்கூடக் கேட்கக் கூடாத கேள்வியை நான் கேட்கப் போகிறேன். நான் திருமண வயதை அடைந்த பின்பும் உங்களுக்கு 'அந்த எண்ணம்' வருகிறது. அம்மா தரும் சுகம் போதாதென்று வசந்தினியிடம் செல்கிறீர்களா...? இல்லை அம்மா கிழவியாகிவிட்டாள் என்று செல்கிறீர்களா? அம்மாவின் வயது தானே அவளுக்கும். உங்களால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் இன்னொரு திருமணத்தைச்செய்து மதிப்புடன் வாழுங்கள். உங்களுக்கு வந்த இந்த நினைவு அம்மாவுக்கும் வந்தால் எப்படி இருக்கும்? நீங்கள் மனிதனாக வாழ்ந்தால் தானே இவையாவம் புரியும். பகல் முழுக்கக் குடி, சூதாட்டம் இரவு வேளைகளில் விபச்சாரம். இந்த வயதில் இப்படி நடக்க உங்களுக்கு வெட்கமாக இல்லையா? உங்களுக்கு வெட்கமிருந்தால் துணியில்லாமல் வீதியில் விழுந்து கிடப்பீர்களா...? நீங்கள் துணியில் லாமல் திரிந்ததால் தங்கையால் பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை. எம்மால்

வாழ முடியாமல் இருக்கு. வீட்டை விட்டு வெளியே செல்ல முடியவில்லை. எங்களைக் கொல்லுங்கோ. இல்லாவிட்டால் நீங்கள் சாவுங்கோ.''

இந்துஜாவின் வார்த்தைகளை அவன் அன்று மதிக்கவில்லை. இன்று அதை நினைத்துப் பார்த்தால் அவள் சொன்னது போலச் சாகத்தான் வேண்டும். நான் எவ்வளவு கேவலமாக வாழ்ந்து விட்டேன். தெய்வதைப் போல மதிக்க வேண்டிய என்னை அவள் நாயைப் போலக் கூட மதிக்கவில்லை. இனிமேலும் நான் தவறு செய்தால் அவள் அடித்துக் கொன்றும் விடுவாள்'' என்று நினைத்தான் கெங்காதரன்.

“குடியை நீங்கள் விட்டு விட்டதாகச் சொல்கிறீர்கள். அதை நான் நம்புகிறேன். ஆனால் இன்றும் சூதாடச் சென்றுள்ளீர்கள். நீங்கள் கோயிலில் இருந்த போது தனஞ்செயன் வந்து உங்களை அழைத்துச் சென்றதாக அறிந்தேன். தயவு செய்து சூதாடுவதையும் விட்டுவிடுங்கள். சூதாட்டக் கருவியையும் சூதாடும் இடத்தையும் சூதாடுவதையும் கைவிடாதவர்கள். எல்லாப் பொருட்களை உடையவராக இருந்தாலும் ஒன்றுமில்லாதவரே ஆவர். அப்பாவிடம் எல்லாச் செல்வங்களும் இருந்தன. நல்ல வருமானமும் வந்தது. அம்மா ஏராளமான சொத்துக்களோடு வாழ்ந்தவர். ஆனால் எல்லாம் இருந்தும் அப்பா சூதாட்டத்தில் ஈடுபட்டதால் ஒன்றுமில்லாதவராகிப் போனார். உங்களுக்கு நிறையச் சொத்திருக்கு; போதிய வருமானம் இருக்கு; பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் சூதாட்டக் கருவியையும் சூதாடும் இடத்தையும் சூதாடும்

செயலையும் கைவிடாததால் ஒழுங்காகச் சாப்பிடுகிறீர்கள் இல்லை. நல்ல உடைகளை உடுத்துகிறீர்களில்லை எல்லாம் இருந்தும் ஒன்று மில்லாதவர் போலத்தானே வாழ்கிறீர்கள். இன்று சாப்பிட்டதைப் போல நீங்கள் சாப்பிட்டதை நான் வெகுநாட்களாகக் காணவில்லை'' விம்மினாள் யசோதினி.

''இனிமேல் என்னுடன் கோயிலுக்கு நீயும் வா. நீ இருந்தால் என்னைத் தேடி யாரும் வரமாட்டார்கள். அவர்களைக் கண்டால்தான் எனக்கு அந்த நினைவுகள் வருகின்றன. நீ வருபவர்களைக் கண்டித்து அனுப்பு'' என்றான் கெங்காதரன்.

''சரி'' என்றாள் யசோதினி.

**935. கவறும் கழகமும் கையும் தருக்கி**
**இவறியார் இல்லாகி யார்.**

சூதாடும் கருவியையும், சூதாடும் இடத்தையும், சூதாடும் செயலையும் கைவிடாதவர், எல்லாப் பொருள்களையும் உடையவராக இருந்தாலும் ஈற்றில் ஒன்றுமில்லாதவராகி விடுவார்.

## விழுங்கப்பட்டவர்

''இவ்வளவு காலமும் இல்லாத அளவிற்கு நான் சாப்பிட்டேன். அதற்குக் காரணம் நீ உணவைக் குழைத்து அக்கறையுடன் தந்ததுதான். சூதாடவேண்டுமென்ற நினைவில்விழுங்கப்பட்ட நான்

எல்லாவற்றையும் மறந்து சூதிலேயே கண்ணாய் இருந்தேன். கிடைக்கும் உணவைக் கூட விற்றுச் சூதாட வேண்டுமென்ற நினைவு வருமே தவிர, அதை உண்ண வேண்டுமென்ற நினைவு வராது. இன்று மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றான் கெங்காதரன்.

''அப்பா, சூதாடும் காலத்தில் வீட்டில் உள்ள எல்லாப் பொருட்களையும் கொண்டு சென்று வைத்துச் சூதாடிவிடுவார். சமைக்கும் அரிசியைக் கூட எடுத்து ஒளித்து வைத்தல் வேண்டும். ஒளித்து வைத்தாலும் அதைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு சென்று சூதாடி விடுவார். ஒரு சூதாடிக்கு வாழ்க்கைப்பட்டதால் அம்மாவும், அவருக்குப் பிள்ளைகளாகப் பிறந்த நாமும் எத்தனையோ நாட்கள் சாப்பாடின்றிப் பசியுடன் படுத்திருக்கிறோம். சூதென்று சொல்லப்படும் மூதேவி அப்பாவை விழுங்கி விட்டதால், அப்பாவுடன் சேர்ந்து நாமும் உண்ண வழியில்லாமல் துன்பப்பட்டோம். காலப் போக்கில் அப்பா சூதாட்டத்தால் பித்துப்பிடித்துப் போனார்'' அழுதாள் யசோதினி.

''சூதாடத் தெடங்கினால் பொழுது போவதே தெரியாது. சூதாடும் போது சூதாடுபவர்களை அச் சூது விழுங்கிவிடுகிறது. அதனால் பசிதாகம் எதுவும் தெரியாது. அப்படித்தான் நானும் இருந்தேன்'' என்றான் கெங்காதரன்.

“குடியைவிட்டுவிட்டதாகச் சத்தியம் செய்தது போல “சூதாட மாட்டேன்” என்றும் சத்தியம் செய்து தாருங்கள்” என்று கேட்டாள் யசோதினி.

கெங்காதரன் சிரித்தான். “ஏன் சிரிக்கிறீர்கள்?” என்று கேட்டாள் யசோதினி.

“நான் முன்பு சத்தியம் செய்யும் போது அதை நீ அலட்சியம் செய்வாய். பலமுறை நான் சத்தியம் செய்துவிட்டு அதை மீறியமையால் தான் நீ அப்படி நடந்து கொண்டாய். இப்போது சத்தியம் செய்யும்படி கேட்கிறாய். அதுதான் சிரித்தேன்” என்றான் கெங்காதரன்.

“ஏதோ ஓர் அற்பநம்பிக்கை. பலவருட காலத்தின் பின் இன்று தான் நீங்கள் கள்ளுக் குடியாமல் இருக்கிறீர்கள். பல முறை சத்தியஞ் செய்து விட்டுக் கள்ளைக் குடித்துவிட்டு வந்தும் குடிக்கவில்லை என்று சத்தியஞ் செய்வீர்கள். சிறிது நேரத்தில் நீங்கள் குடித்த கள் தனது வேலையைக் காட்டும். அதனால் எம்முடன் சண்டை வருவீர்கள். ஆனால் இன்று எந்தவிதமான ஆரவாரமுமின்றி இருக்கிறீர்கள். அதனால் தான் சத்தியம் கேட்டேன்” என்றால் யசோதினி.

அப்போது “கெங்காதரன் கெங்காதரன்” என்று யரோ அழைக்கும் சத்தம் கேட்டது.

“தனஞ்செயன் போலத் தெரிகிறது. நான் இல்லை என்று சொல்” என்று கூறிவிட்டு உள்ளே சென்று மறைந்தான் கெங்காதரன். யசோதினிக்கு அவனது செயல் ஆச்சரியத்தைக் கொடுத்தது. மற்ற நாட்களென்றால் யாராவது கூப்பிட்டால் உடனே சென்று விடுவான் தனஞ்சயனென்றால் தாமதிக்காது சென்றுவிடுவான்.

இரத்தின சிங்கமும் யசோதினியும் வெளியே வந்தனர். முற்றத்தில் தனஞ்செயன் நின்றான் “கெங்கா நிற்கிறானா...?” என்று கேட்டான்.

“இல்லை, அவர் இன்னும் வீட்டுக்கு வரவில்லை”.

“சரி” என்று கூறிவிட்டுத் திரும்பினான் தனஞ்செயன்.

“ஏன் அவனைத் தேடிவந்தாய்? நான்கு மணிக்கு நீதானே அவரை அழைத்துச் சென்றாய்”. என்று கேட்டாள் யசோதினி.

“அழைத்துச் சென்றனான்தான். அவன் ஆயிரக்கணக்கில் தோற்றுவிட்டு வந்துவிட்டான். எனக்குப் பசிக்கிறது. பசியின் கொடுமையைத்தாங்க முடியவில்லை. அவனிருந்தால் அவனிடம் ஏதாவது

வாங்கி உண்ணலாமென்று வந்தேன்'' என்றான் தனஞ்செயன்.

''சூதாட உன்னிடம் பணம் இருக்கிறது. உணவிற்கா பணம் இல்லை. இருந்த பணம் முழுவதையும் சூதாடித் தோற்றுவிட்டு உணவுக்காகப் பிறரிடம் கைநீட்ட உனக்கு வெட்கமாக இல்லையா? உனது தகப்பன் பெரும் வர்த்தகர். அவர் சம்பாதித்த சொத்துக்களையெல்லாம் இழந்துவிட்டு இப்போ பிச்சை எடுக்கிறாய்'' என்றார் இரத்தின சிங்கம்.

''பசியென்று வருந்திக்கேட்கின்றவனை ஏசாதீர்கள். அது எமக்குப் பாவம்'' என்றாள் யசோதினி.

''நான் பாவம் பழி பார்த்துத் தான் இன்று இந்த நிலையில் இருக்கிறேன். இவனை அடித்துத் துரத்த வேண்டும். சூதாடிகளுக்கு உணவு கொடுப்பதும் பாவம்'' என்றார் இரத்தினசிங்கம்.

''சூது என்று சொல்லப்படும் மூதேவியால் விழுங்கப்பட்டவர்கள், வயிறு நிறைய உண்ணக்கூட வழியற்றவராகிப் பல துன்பங்களுக்கு ஆளாகி வேதனைப்படுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதுதான் இப்போது தனஞ்செயனின் வாழ்க்கையில் நடந்துள்ளது. இவன் காலப்போக்கில் சாப்பாட்டில்லாமலே இறந்து போவான்''. என்றாள்

யசோதினி. இரத்தினசிங்கம் அதன்பின் எதுவும் பேசவில்லை.

---

**936. அகடுஆரார் அல்லல் உழப்பர் சூதுஎன்னும்**
**முகடியால் மூடப்பட் டார்.**

---

சூது என்று சொல்லப்படுகின்ற மூதேவியால் விழுங்கப்பட்டவர், வயிறு நிறைய உண்ண முடியாதவராகிப் பல துன்பங்களுக்குட்பட்டு வருந்துவர்.

## இழப்பவை

அன்று இரவு வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டுச் சென்ற தனஞ்சயன் மறுநாள்க் காலை விடியுமுன் கெங்காதரனின் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டதும் அளவுக்க திகமான கோபம் கொண்ட இரத்தினசிங்கம் அவனை ஏசினார்; “இரவு வயிறு முட்டச் சாப்பிட்டு விட்டுப் போனனீ. இப்ப ஏன் வந்திருக்கிறாய்? ஒழுங்காக வாழ்ந்த என்னுடைய மகனைக் கெடுத்தது நீதான். உன்னுடைய தகப்பனார் பெரும் சூதாடி. சொத்துக்களையெல்லாம் அழித்து விட்டுச் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் செத்தவர். நீயும் அடிப்படித்தான் சாகப் போகிறாய். உன்ரை கோலத்தைப் பார்த்தால் பத்து நாட்களாக உணவைக் காணதவன் போல உள்ளது. யசோதினி சொன்னது போல உன்னைச் சூது விழுங்கி விட்டது. இனி உனக்குச் சாப்பாடு கிடைக்காது.

இப்ப ஏன் இங்கு வந்தனி? கெங்காதரனைச் சூதாட அழைத்துச் செல்லப் போகிறாயா”? உன்னால் தான் அவன் கெட்டழிந்தவன். நீ அவனுடன் சேராவிட்டால் அவனுக்குச் சூதாடும் எண்ணமே வராது. உங்களைப் போன்ற நன்கு சூதாடிகள் இருந்தால் உலகமே கெட்டழிந்து விடும்” என்றார்.

வெளியே சத்தம் கேட்டு யசோதினி வந்தாள். வாசலில் தனஞ்செயனை மாமனார் ஏசிக்கொண்டிருப்பதைக் கண்டாள். அவன் தனது கணவனை அழைத்துச் செல்லவே வந்திருக்கிறானென நினைத்தாள். முதல் நாளும் அவன் கோயிலடிக்குச்சென்று அழைத்துச் சென்றதை நினைத்தாள்.

“விடியுமுன் உனக்குச் சூதாடும் எண்ணம் வந்து விட்டதா..? விடிந்ததில் இருந்து நடுச் சாமம் வரை சூதாடும் இடத்தில் நீங்கள் பொழுதைக் கழித்தால் உங்கள் குடும்பத்தினரின் பாடு என்ன”? சூதாடுற நீங்கள் ஏன் கல்யாணங் கட்டிப் பிள்ளை குட்டிகளைப் பெத்தீர்கள்...?” என்றாள் யசோதினி.

“கொப்பர் சூதாடும் இடத்தில் காலத்தைக் கழித்துப் பரம்பரைச் சொத்தெல்லா வற்றையும் இழந்தார். அதோடை, உங்களின் குடும்பத்தை எவரும் மதிப்பதில்லை. இப்ப நீ அதே போல வந்திட்டாய். உன்னையும் ஒருவரும் மதிப்பதில்லை. கெங்காவும் இப்ப வீடுவாசலை விட்டு விட்டு சூதாடுற இடத்திலேயே தங்கி விடுகிறான். நேற்று

மாலை நீ கூட்டிக் கொண்டு போனனீ.. விடிந்தும் வரவில்லை. இராத்திரி பசியென்று வந்தாய். எனக்கென்றால் உனக்கு உணவு தரவிருப்பமில்லை. யசோ தான் தந்தவள். இப்ப ஏன் வந்தனீ? உள்ளே வரவேண்டாம் போ'' என்று கத்தினார் இரத்தினசிங்கம்.

தனஞ்சயன் துக்கத்துடன் திரும்பி நடந்தான். ''கெங்காதரன் வீட்டுக்கு வராவிட்டால் எங்கே சென்றிருப்பான்? இப்போ அவனை வசந்தினியும் அண்டுவதில்லை. அவனிடம் பணம் இல்லாததால் அவனைத் துரத்தி விட்டாள். நவராசாவின் வீட்டிற்குச் சென்றிருப்பானோ? அங்கு சென்றால் நவராசா ஏசுவான்'' என்று நினைத்தபடி நடந்தான் தனஞ்சயன்.

தனஞ்சயன் சென்ற பின் கெங்காதரன் வெளியே வந்தான்; ''நான் திருந்தலாமென்று நினைத்தாலும் விடுகிறார்களில்லை. இனியாராவது என்னைத் தேடி வந்தால் இல்லையென்று சொல்விடு. அவர்களது முகத்தைக் கண்டதும் எனது மனம் மாறிவிடும். வா, மகா கணபதி கோயிலுக்குச் சென்று வருவோம்'' என்றான் கெங்காதரன்.

''யசோ, நீ போட்டு வா பிள்ளை. நான் வீட்டு வேலைகளைக் கவனிக்கிறேன். அவனைத்தனிய விட்டால் நேற்றுப் போல யாராவது கூட்டிச் சென்று விடுவார்கள்'' என்றாள் தாட்சாயிணி.

யசோதினியும் கெங்காதரனும் மகா கணபதி ஆலயத்திற்கு வந்தனர். தணிகாசலம் அவர்களைப் பார்த்து விட்டுச் சிரித்தார்; “கனகாலத்திற்குப் பிறகு சோடியாய்க் கோயிலுக்கு வந்திருக்கிறியள். ஏதாவது விஷேசமா..?” என்று கேட்டார்.

“இல்லை” சிரித்தாள் யசோதினி.

“நான் நம்ப மாட்டன். வாலிப மிடுக்கிலை பல அநியாயங்களைச் சிலபேர் ஆராயாமல் செய்வினை. அதனால் கஷ்டம், நோய், பிரச்சினைகள் வந்தபின் தான் அவர்களுக்குக் கடவுள் மீது பக்தி வரும்; உறவினர் மீது அன்பு வரும்; மனைவி பிள்ளைகள் மீது அக்கறை உண்டாகும். பலமுள்ள போதும் மனைவியுடன் கோயிலுக்கு வருவார்கள்; பலவீனமடைந்த போதும் மனைவியுடன் கோயிலுக்கு வருவார்கள். கோயிலுக்கு வரும் போது தவறாது மனைவியை அழைத்து வருபவன் நியாயமானவன்; தீமைகள் செய்யாதவன் இன்று, கெங்கா உன்னைக் கோயிலுக்கு அழைத்து வந்திருக்கிறா னென்றால் அது உன் மீதுள்ள அன்பினாலல்ல, தனக்குத் தீமை வந்து விடும் என்ற பயத்தினால் தான்” என்றார் தணிகாசலம்.

“ஏதோ தீமை வந்த பின்னாவது என்னுடன் வந்து சேர்ந்தாரே. அதுவே போதும்” என்றாள் யசோதினி.

“உன்னை மாதிரிப் பெண்கள் நினைக்கிறதால் தான் இவனைப் போன்ற ஆண்கள் கெட்டுப் போகிறார்கள். ஆண்கள் கெட்டுப் போவதற்கு உன்னைப் போன்ற பெண்கள்தான் காரணம். சரிசரி போய்ச் சுவாமியை நன்றாகக் கும்பிடு. இவன் பூரணமாகத் திருந்திவிட்டானென்று நம்பாதே. சூதாடுபவர்கள் இலேசில் திருந்தமாட்டார்கள். திருந்தியதைப் போல நடித்து ஏமாற்றுவார்கள். கவனமாக இரு” என்றார் தணிகாசலம்.

**937. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்**
**கழகத்துக் காலை புகின்.**

சூதாடும் இடத்தில் ஒருவன் தனது காலத்தைக் கழிப்பானானால், அது அவனது மூதாதைர் தேடி வைத்த செல்வத்தையும் நற்பண்புகளையும் கெடுக்கும்.

## பல்வகைத் துன்பங்கள்

அர்ச்சனைத் தட்டுடன் யசோதினி கோயிலின் உள்ளே சென்றாள். அதைக் கண்ட தணிகாலசம் சொன்னார்; “கெங்கா, யசோதினியைப் போல ஒரு பெண்ணை மனைவியாக அடைய நீ கொடுத்து வைத்திருத்தல் வேண்டும்; அத்துடன் பெரும் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும். உன்னையே

தெய்வமாக நினைத்து, நீ செய்யும் தீமைகளையெல்லாம் பூமியைப் போலப் பொறுத்து, தாயைப் போல உன்மீதும் உனது குடும்பத்தின் மீதும் அளவில்லாத பாசத்தைப் பொழிகின்ற யசோதினிக்குத் தீமை செய்ய உனக்கு எப்படி மனம் வந்தது? எத்தனை முறை நீ அவளைப் பொய் சொல்லி ஏமாற்றி யிருப்பாய். பாவம் அவள்; நீ ஏமாற்றியது போதும்; இனியாவது அவளை ஏமாற்றாது ஒழுங்காக வாழப்பார். நீ பொய் சொல்லி ஏமாற்ற ஏமாற்ற அதைக் கருத்திற் கொள்ளாது, நீ தனது கணவன் என்று நினைத்து எப்போதும் ஏமாறும் அவளைத் தயவு செய்து இனியும் ஏமாற்றாதே. அவள் அதைத் தாங்கமாட்டாள்''என்று சொல்லிவிட்டு கோயிலின் உள்ளே சென்றார் தணிகாசலம்.

சில நாட்களுக்கு முன் அவன் நவராசாவை ஏமாற்றியதை நினைத்துப் பார்த்தான். அன்று வசந்தினி அவனிடம் பத்தாயிரம் ரூபா தருமாறு கேட்டு அடம்பிடித்தாள். அவனிடம் ஐயாயிரம் ரூபா இருந்தது. அன்று அயலூரிலிருந்து பெரிய பணக்காரர்கள் சிலர் சூதாட அரசடிக்கு வருவதாக அறிவித்திருந்தனர். அவர்கள் வந்தால் தான் சூதாட்டம் களை கட்டும். அதனால் அன்று கட்டாயம் சூதாட வேண்டும் என்பதற்காக வியாபார நிலையத்தில் இருந்த ஐயாயிரம் ரூபாவை எடுத்துத் தனது சட்டைப் பையில் வைத்தான். அதைக் கண்ட அங்கு சேலை செய்யும் சிப்பந்தி; ''ஐயா, முதலாளி தணிகாசலமண்ணைக்குக் கொடுக்கச் சொல்லிச் சொன்னவர்'' என்றான்.

“என்னிடமும் சொன்னவர். நான் என்னிடமிருந்த பணத்தை தணிகாசலத்தை வழியில் கண்ட போது கொடுத்து விட்டேன். அதை எடுக்கிறேன்” என்றான். சிப்பந்திக்குச் சந்தேகமாக இருந்த போதும் அவனால் எதையும் கூற முடியவில்லை. அந்தப் பணத்தை மறைத்து வைத்துக் கொண்டு தன்னிடம் பணம் இல்லையென்றான்” கெங்காதரன்

“எனக்கு அவசரமாகத் தேவை. கட்டாயம் தா. இல்லாவிட்டால் இனிமேல் இங்கு வரவேண்டாம்” என்றாள் வசந்தினி.

கெங்காதரன் தனது கைத்தொலைபேசியை எடுத்து நவராசாவோடு தொடர்பு கொண்டு விட்டு வசந்தினியிடம் கொடுத்துத்தான் முன் கூறியதைப் போலக் கதைக்கச் சொன்னான்.

“நான் யசோதினி பேசுகிறேன். நீங்கள் நவராசா தானே”.

“ஓம் என்ன”? பரபரப்பாக இருக்கிறீர்கள். கெங்காவுக்கு ஏதாவது” அவதிப்பட்டான் நவராசா.

“கெங்காவுக்கு ஒன்றுமில்லை. மாமாவுக்கு நெஞ்சுவலி. வைத்தியசாலைக்கு கொண்டுபோக

வேண்டும். அவர் உள்ள நிலையில் அவரிடம் பணத்தை எப்படிக் கேட்பது? பத்தாயிரம் ரூபா தாருங்கோ. அவரை அனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டு தொலைபேசியை நிறுத்தினாள் வசந்தினி.

நவராசாவின் வீட்டுக்கு அழுவாரைப் போலச் சென்றான் கெங்காதரன். அவனது நடிப்பைக் கண்ட நவராசா எதுவும் கேட்காமல் கெங்காதரனுக்குப் பணத்தைக் கொடுத்தான். பின் அவன் யசோதினியின் வீட்டுக்கு இரத்தினசிங்கத்தைப் பார்க்கத் தோடம்பழங்களுடன் வந்த போது தான் வசந்தினியும் கெங்காதரனும் பொய் சொல்லித் தன்னை ஏமாற்றியது தெரியவந்தது.

மறுநாள் கெங்காதரன் நவராசாவிடம் வாங்கிய பணத்தைக் கொடுக்கச் சென்றான்; ‘‘நீ என்னுடன் கதைக்காதை. நீ சூதாடி என்று தெரிந்தும் நம்பிக்கையுடன் பழகிய என்னைத் திட்டமிட்டு ஏமாற்றியிருக்கிறாய். சூது பொருட்களை மட்டும் அழிப்பதில்லை. அவனைத் தீயவனாக மாற்றும்; திருடனாக மாற்றும்; பொய்யனாக மாற்றும். நீ அருளுள்ளவனாக இருந்திருந்தால் உனது தந்தைக்கு நெஞ்சு வலி என்று விபச்சாரி யொருத்தியைக் கொண்டு பொய் கூற வைத்திருப்பாயா? அதனால் உனது தந்தையும் தாயும் மனைவியும் எவ்வளவு துன்பத்தை அனுபவித்தார்கள் என்று உனக்குத் தெரியாது. சீ, உன்னைப் போல ஒரு மனிதனை நான் காணவில்லை. சூதாடுவதற்காகப் பல திருகுதாளங்களைச் செய்த உன்னை என்னால் இனியும் நம்ப முடியாது. எந்தச் சந்தர்ப்பர்த்திலும்

உனக்கு நான் பணம் தரமாட்டேன். விபச்சாரியை உனது மனைவியைப் போலப் பேசச் சொல்ல உனக்கு எவ்வளவு துணிவு இருத்தல் வேண்டும். பாவம் யசோதினி. நீ இவ்வளவற்றைச் செய்த பின்பும் உன்னுடன் கூடிவாழ விரும்புகிறாள்'' என்றான் நவராசா.

நவராசா சொன்னது அவனது காதில் ஒலித்தது; ''வசந்தினி எப்போதும் தனது விஷயத்திலேயே கண்காக இருப்பாள். ஆனால் யசோதினி அப்படியல்ல. அவள் பாவம். இனி அவளை ஏமாற்றக் கூடாது. அப்பனே! மகா கணபதியே! என்னை நல்ல முறையில் இனியாவது வாழவிடு'' என்று பிரார்த்தித்தான் கெங்காதரன்.

**938. பொருள் கெடுத்துப் பொய்மேல் கொளீஇ அருள்கெடுத்து அல்லல் உழப்பிக்கும் சூது.**

சூது, உள்ள பொருள்களையும் அழித்துப் பொய் சொல்லும் நிலைக்கு ஆளாக்கி, அருளையும் கெடுத்துப் பல வகையான துன்பத்தைக் கொடுத்து வருத்தும்.

## எதையும் அடைய முடியாதவன்

கெங்காதரனின் தோளில் யரோ கையை வைத்தார்கள். நினைவுகளில் இருந்து விடுபட்ட கெங்காதரன் திரும்பிப் பார்த்தான். பின்னால் தனஞ்சயன் சிரித்துக் கொண்டு நின்றான்; ''இன்று நீர்வேலியில் இருந்து ஐந்து பேர் சூதாட

வருகிறார்களாம். உன்னை அரசடிக்கு வரும்படி சிங்கராசா சொன்னான்'' என்றான்.

கெங்காதரன் அவனைத் திரும்பிப் பாராது கோயிலினுள் ஓடிச் சென்றான். அவன் ஓடி வருவதைக் கண்ட யசோதினி வெளியே பார்த்தாள். அங்கு தனஞ்சயன் நின்றான்.

''யசோ, எனக்குப் பயமாக இருக்கு. எனக்கு அருகிலேயே நில். அவனுடன் கதைத்தால் நான் மனம் மாறிவிடுவேன். படிக்கும் காலத்தில் இவனோடு சேர்ந்து நான் சூதாடும் இடங்களுக்குச் சென்றதால் தான் என்னால் படிக்க முடியாமல் போய் விட்டது. என்னுடன் படித்தவர்களெல்லோரும் இன்று நல்ல நிலையில் இருக்கிறார்கள். நான் படிக்கச் செல்கிறேன் என்று அப்பா செலவு செய்த காசெல்லாம் சூதாடி முடித்தேன். பின்பும் இவனால் தான் சூதாடுகிறேன். நான் போகாவிட்டால் இவன் என்னைத் தேடி வந்து விடுகிறான். யரோ, சூதாட வந்திருக்கிறார்களாம், என்னை வரட்டாம்.'' கலங்கினான் கெங்காதரன்.

''நீங்கள் இருங்கோ. ஏன் பயப்படுகிறீர்கள்?''

''யசோ உனக்கு ஒன்றும் புரியாது. சூதாடப்பழகியதால் இளமையில் எனது கல்வியை இழந்து விட்டேன்; எனது குடும்பமானத்தைக் கெடுத்து விட்டேன்; எனது செயல்களால் புகழுடன் வாழ்ந்த எனது தந்தை வெளியே செல்ல வெட்கப்படுகிறார். அப்பா தேடிவைத்த எவ்வளவு

சொத்தைச் சூதாடி இழந்தேன். சூதாடுவதால் நான் ஒழுங்காக உணவு கூட உண்பதில்லை. சூதாடும் இடத்தில் நான் காலம் கழிப்பதால் நல்ல செயல்கள் எதையம் செய்ததில்லை. அதைவிட எனது மகள் என்னைக் கேட்ட கேள்விக்கு நான் அன்றே செத்திருக்க வேண்டும். இந்த நிலை ஏன் வந்தது. நான் பள்ளிப் பருவத்திலே சூதாட்டத்தைப் பழகியமையால் தானே.'' அழுதான் கெங்காதரன்.

''ஒருவன் தான் செய்தது தவறு என்று நினைத்து வருந்தியழுதால் அவன் திருந்திவிட்டானென்று அர்த்தம். எனது அப்பா ஒருமுறை கூடத் தான் சூதாடுவது தவறு என்று சொன்னதில்லை. அம்மா அவரால் மனக் குழப்பமடைந்த போதும், அவர் திருந்தவில்லை. திருந்த வேண்டாம் தான் செய்வது கொடிய பாவம் என்று கூட நினைக்க வில்லை. அம்மாவின் மன ஆறுதலுக்காகக் கூட அவர் தவறு என்று பொய்யாகக் கூடச் சொல்லவில்லை. ஆனால் நீங்கள் அப்படியல்ல செய்தது தவறு என்று ஒப்புக் கொள்கிறீர்கள். திருந்துவதாகச் சொல்கிறீர்கள். எனக்கு அதுவே போதும்'' என்றாள் யசோதினி.

''நீ நம்பலாம். ஆனால் எனக்குப் பயமாக உள்ளது. எனது நண்பர்கள் என்னைத் திருந்த விடமாட்டார்கள். நான் திருந்தினால் அது தமக்கு நட்டமென்று நினைக்கிறார்கள்''.கெங்காதரனின் குரல் பிசிறியது.

''பயப்படாதைங்கோ; மகா கணபதி மீது நம்பிக்கை வையுங்கோ. அவர் எமது குலதெய்வம். அவரை நம்பி அவரது கோயிலுக்கு வந்து

விட்டால், எந்தத் தீமை வந்தாலும் அவர் எம்மைக் காப்பாற்றுவார். அத்துடன் எமக்கு நல்லவர்களின் தொடர்பிருக்கிறது. சுவாமியைக் கும்பிட்டு விட்டு வாருங்கள். நாம் நவராசாவிடஞ் செல்வோம். நவராசாவின் விட்டில் நீங்கள் இருந்தால் அவனுக்குப் பயந்து யாரும் அங்கு வரமாட்டார்கள்.'' என்றாள் யசோதினி.

''பூசை முடிவடைந்ததும் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு கெங்காதரனும் யசோதனியும் வெளியே வந்தனர். தனஞ்செயன் வெளிமண்டபத்தில் இருந்தான். யசோதியினுடன் கெங்காதரன் வந்ததால் அவனுக்கு கெங்காதரனுடன் கதைப்பதற்குப் பயமாக இருந்தது.

கெங்காதரனும் யசோதினியும் சுவாமியாரின் அருகே சென்று அமர்ந்தனர். சுவாமியார் நிஷ்டையில் இருந்தார். வெகுநேரமாக அவர் விழிக்கவில்லை. கெங்காதரன் திரும்பி மண்டபத்தைப் பார்த்தான். தனஞ்செயன் மண்டபத்தில் இருந்து அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான். முதள் நாள் இரவு அவனுக்குத்தான்; ''உணவு கொடுத்தது தவறு'' என்று நினைத்தாள் யசோதினி.

சுவாமியார் கண்விழித்தார்; ''மகனே, மனதைத் தளரவிடாதே. கடவுள் மீது பக்தி வை. நீ நினைத்ததை அடைய விடா முயற்சி செய். மனம், சொல், செயல் ஆகிய மூன்றையும் ஒன்றாக

இணைத்துச் செயற்படு. செய்ய எண்ணியதை ஒரு போதும் செய்ய முடியாதென்று நினைக்காதே. சொன்னதைச் செய்து காட்டுவதில் உறுதியாக இரு. அப்படியிருந்தால் உன்னை வெல்ல யாராலும் முடியாது'' என்று கூறிவிட்டுக் கண்களை மூடினார் சுவாமியார்.

திடீரென்று ஒரு தைரியம் தனது மனதுள் நுழைந்ததை உணர்ந்தான் கெங்காதரன்.

**939. உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்**
**அடையாவாம் ஆயம் கொளின்.**

ஒருவன் சூதாடுவதை மேற்கொண்டால், அது புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தையும் அவன் அடைய முடியாத நிலையை உண்டாக்கும்.

## ஆசை மிகும்

சுவாமியார் கூறிய பின் அவனுள் ஒரு புத்துணர்வு ஏற்பட்டதைப் போலிருந்தது. எழுந்து மண்டப வாசலுக்கு வந்தான். அவன் கட்டாயம் எழுந்து வருவான் என்பதை உணர்ந்த தனஞ்சயன் அவனைக் கண்டதும் எழுந்தான்; ''சூதாடி ஒருவனால் சூதாடாமல் இருக்க முடியாது. அவன் தன்னைப் பற்றியோ, தனது குடும்பத்தைப் பற்றியோ ஒருபோதும் எண்ணமாட்டான். இன்று எப்படிச் சூதாடுவது, அதற்கு எப்படிப் பொருள் சேர்ப்பது

என்று தான் எண்ணிக் கொண்டே இருப்பான். பொருள் இல்லாவிட்டால் எங்கே களவெடுக்கலாம் என்று நினைப்பான். நானும் அப்படித்தானே நினைக்கிறேன். ஒருவாரகாலமாக எனக்குச் சாப்பிட உணவு கிடைக்கவில்லை. ஆனால் நான் தோட்டங்களாலும் வீடுகளிலும் களவெடுத்துத்தானே சூதாடினேன். சென்ற வாரம் கோயிலுக்கு வந்த வரதராசாவின் மனைவியின் சங்கிலியை அறுத்தேன். இரவான படியால் அகப்படவில்லை. சூதாடச் சூதாட இன்பம் அதிகரிக்கும். பொருளை இழக்க இழக்க வெல்ல வேண்டுமென்ற ஆவலால் மேலும் மேலும் சூதாட வேண்டும் என்ற ஆசையே உண்டாகும்''. என்று நினைத்தவாறு; ''இன்று அயல் கிராமங்களில் இருந்து பலர் வருகிறார்கள். நீயும் வா'' என்றான். தனஞ்சயன்.

''இன்றுள்ள சூழ்நிலையில் என்னால் துன்பங்களைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. நான்தான் தனது உயிர் என்று சொன்ன வசந்தினி, என்னைத் தனது வீட்டுப் பக்கம் வந்தால், ''ஆளை வைத்து அடித்து முறிப்பிப்பேன்'' என்று சொல்லி விட்டாள். குடிப்பதால் பணம் செலவாகிறது என்று குடும்பத்தினர் கூறுகின்றனர். சூதாடுவதால் தினமும் தோல்விதான் உண்டாகிறது. பெருந்தொகையான பொருட்களை இழந்த போதும் சூதாடவேண்டுமென்ற ஆர்வம் மனதுள் எழுகிறது. சென்ற புதன்கிழமை முழுவதும் சூதாடி பல ஆயிரம் ரூபாக்களை இழந்தேன். இருந்த போதும் பல ஆயிரம் ரூபாக்களைக் கடன் வாங்கிச் சூதாடினேன். இருப்பினும் சூதாடக் கூடாது என்ற எண்ணம் எனது மனதில் எழவே இல்லை. இப்போது என்னால்

துன்பங்களைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. வீட்டார் அயலவர் நண்பர்கள் எல்லோரும் என்னைத் திருந்துமாறு புத்திமதிகள் கூறுகிறார்கள். அதனால் நான் வாழ ஆசைப்படுகிறேன். எல்லோரினது துன்பங்களையும் விட உன்னால் தான் துன்பம் அதிகம். உன்னைக் கண்டால் எனக்கு விசர் பிடிக்கிறது. மறந்த கெட்ட நினைவுகள் மனதுள் எழுந்து எக்னைத் தன் வசமாக்குகின்றன. அதனால் இனிமேல் என்னை வந்து சந்திக்காதே. மீறி வந்தாயானால் உன்னைக் கொலை செய்யவும் தயங்கமாட்டேன்'' என்றான் கெங்காதரன்.

''உன்னைப் போலப் பலரை நான் கண்டனான். சூதாடுபவன் திருந்தவே முடியாது. சும்மா சொல்லுவான்; சத்தியம் செய்வான்; இதெல்லாம் எனக்குத் தெரியாதா?'' இப்படியே வருகிறாயா அல்லது மனைவியைக் கூட்டிச் சென்று வீட்டில் விட்டு விட்டு வருகிறாயா?'' என்று கேட்டான் தனஞ்சயன்.

கெங்காதரனுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. நிலத்தில் இருந்த ஒரு பெரிய கல்லைத் தூக்கிக் கொண்டு அவனுக்கு அருகே சென்றான். ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்பதை உணர்ந்த யசோதினி அவனின் அருகே சென்றாள்; ''உங்களுக்கு என்ன வந்தது. கோயிலடியில் சண்டை பிடிக்கப் போகிறீர்களா''? கல்லைக் கீழ்ே போடுங்கோ'' என்றவாறு அவனது கையைப் பிடித்தாள்.

தனஞ்செயன் அப்போதும் சிரித்தான். பின்; ‘‘என்னைக் கல்லால் அடித்து விட்டு நீதான் செலவு செய்தல் வேண்டும். நான் போறன் நீ வா. நீ கட்டாயம் வருவாயென எனக்குத் தெரியும்’’ என்று சொல்லியவாறு நடந்து கொண்டிருந்தான்.

அளவுக்கதிகமான கோபத்தால் அவனுக்கு மூச்சு இரைத்தது; ‘‘யாராவது எதையும் சொல்லட்டும். நீங்கள் ஏன் கோபப்படுகிறீர்கள். அவன் நாலைந்து நாட்களுக்கு வருவான். நீங்கள் போகாவிட்டால் பின் வாரன். வாருங்கோ வீட்டுக்குச் செல்வோம்’’ என்றாள் யசோதினி.

அதைப் பார்த்துக் கொண்டு நின்ற தணிகாசலம் அவனின் அருகே வந்தார்; ‘‘கெங்கா, ஒருவன் திருந்த முயற்சித்தாலும் கூடியிருக்கிறவர்கள் அவனைத் திருந்த விடமாட்டார்கள். உன்னிடம் பலகாலமாக வாங்கி உண்டும், வாங்கிச் சூதாடியும் இன்பமடைந்தவர்கள் உனது மாற்றத்தால் நட்டமடைவார்கள். அதனால் உன்னைக் கெடுக்கவே முயற்சிப்பார்கள். இந்த நேரத்தில் தான் நீ அவதானமாக இருத்தல் வேண்டும். சில நாட்களுக்கு மனதைத் தளரவிடாது உறுதியாக இருக்கப்பழகி விட்டால் பின் அந்த நினைவே வராது. யசோ, கெங்காவைத்திருத்தும் பொறுப்பு உன்னையே சார்ந்தது. கொஞ்ச நாட்களுக்கு எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்து விட்டு அவனைப் பிரியாதிரு. நண்பர்களைச் சந்தித்தனானால் அவனுக்குப் பழைய நினைவுகள் வந்து விடும்’’ என்றார்.

“சரி” என்று தலையாட்டிய யசோதினி, பல நாட்களுக்குப் பின் அவனை ஆசையோடு பார்த்தாள்.

**940. இகழ்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்**
**உழத்தொறூஉம் காதற்று உயிர்.**

பொருள் வைத்துச் சூதாடி அதை இழக்க இழக்க மேலும் மேலும் சூதாடவேண்டு மென்ற ஆசை அதிகரிக்கும். சூதாட்டம் போல, உடல் துன்பப்பட்டு வருந்த வருந்த உயிர் வாழ வேண்டும் என்ற ஆசை மிகுந்து வரும்.

## நோய்க்கான வழி

“பிள்ளை யசோ நெஞ்சு வலிக்குதம்மா. கொஞ்சச் சுடுதண்ணீர்தா” என்றார் இரத்தினசிங்கம்.

அவருக்கு நெஞ்சு வலித்தது. புளித்த ஏப்பம் வெளியே வந்தது. வயிற்றைப் புரட்டியது.

அவருக்கு அருகே வந்த தாட்சாயினி அவர் துடிப்பதைப் பார்த்துக் கவலைப்பட்டாள். அவளது கண்கள் கலங்கின; “எந்த நேரமும் உங்களுக்கு யோசனைதான். இப்போ நீங்கள் சாப்பிடுவதும் குறைவு”

“உன்னுடைய ஆசை மகன் ஊரில் பிரச்சினைப்பட்டுக் கொண்டிருந்தால் மகிழ்ச்சியாய்த் தானே இருக்கும்” என்றார்.

“அவன் இன்று நேற்றே பிரச்சினைப் பர்றான். இருபது இருபத்தைந்து வருடங்களாக அப்படித்தானே நடக்கிறான். அவனை எண்ணிக் கவலைப்படாதைங்கோ என்று சொன்னால் கேட்கிறீர்கள் இல்லை” என்றாள் தாட்சாயினி.

“அவன் வீட்டை விட்டு போய்விட்டா னென்றால் பிரச்சினை இல்லை. கவலைப்படாமல் இருக்கலாம். ஆனால் இவன் எமது வீட்டில் இருந்து கொண்டு செய்யும் அடாவடித்தனங்களால் என்னால் வீதியால் செல்ல முடியவில்லை. இவன் துணியில்லாமல் நேற்று சந்தியிலை கிடந்தவனாம். என்ரை மரியாதையே போய்விட்டது. நான் செத்துப் போனால் கரைச்சல் இல்லை. கண் முன்னால் காண்பதால்தான் கவலையாக இருக்கு; சாப்பிட முடியாமல் இருக்கு” என்றார் இரத்தினசிங்கம்.

“கவலைப்படாதைங்கோ மாமா. நீங்கள் கவலைப்பட்டு உங்களுக்கு ஏதாவது ஆகிவிட்டால் நாம் துணையில்லாமல் போய் விடுவே7ாம்” என்று சுடுநீரைக் கொடுத்து விட்டுக் கண் கலங்கினாள் யசோதினி.

தாட்சாயினி தைலத்தை எடுத்து அவரின் நெஞ்சில் பூசினாள். அவர் ஏப்பமிட்டார்.

“சுடுதண்ணீரைக் குடித்து விட்டு வாருங்கள். வைத்தியரிடம் செல்வோம்” என்றாள் யசோதினி.

“எனக்கு ஒன்றுமில்லை. அப்படி ஏதும் வந்தாலும் நல்லது. நிம்மதியாகப் போய் விடலாம்”

“மாமா, இப்படி ஏன் சொல்கிறீர்கள்? வாருங்கள் மருந்தெடுத்து வருவோம்” என்று கலங்கினாள் யசோதினி. அவள் துக்கப்பட்டால் இரத்தினசிங்கம் தனது துயரத்தை வெளிக்காட்டமாட்டார். ஏற்கனவே பல்வேறு வகையில் துயரப்படும் அவள் தன்னையும் நினைத்துக் கவலைப்படுவாளென நினைப்பார்.

“சரி வா மருந்தெடுக்கப் போவோம்” என்று புறப்பட்டார் இரத்திசிங்கம். கெங்காதரன் மோட்டார் வண்டியைக் கொண்டு வந்தான். அதில் இரத்தினசிங்கத்தை ஏற்றிக் கொண்டு யசோதினி புறப்பட்டாள்.

வைத்தியர் இராசரத்தினம் இரத்தினசிங்கத்தின் கையைப் பிடித்து நாடி பார்த்தார். பின் சொன்னார்; “இரத்த அழுத்தம் இல்லை. பயப்பட வேண்டாம். கண்டபடி யோசிக்காதைங்கோ. கவலைகள்தான் இருதய வருத்தத்திற்கு மூலகாரணி. சந்தோஷமாக இருப்பவனுக்கு ஆயுள் அதிகம். அத்துடன் அவன் பலசாலியாகவும் இருப்பான். நீங்கள் மிகவும் பலவீனப்பட்டுள்ளீர்கள். உணவில் கவனமெடுங்கள். மருத்துவ நூலோார் வாதம், பித்தம், சிலேத்துமம் என்று கூறியுள்ள மூன்றும் அளவுக்கதிகமானாலும் நோய்வரும். குறைந்தாலும் நோய் வரும். உங்களுக்குப் பித்தம் கூடியுள்ளது. தேசிக்காய்

கரைத்துக் குடியுங்கள். இலகுவில் சமிபாடடையாத உணவு வகைகளை உண்ணாதீர்கள். கொழுப்பு, எண்ணெய் வகைகளைச் சில நாட்களுக்குத் தவிருங்கள். உணவை நன்றாக மென்று சாப்பிடுங்கள். கவலைகள் இருந்தால் உணவு சமிபாடு அடையாது. உணவு சமிபாடு அடையாவிட்டால் பல்வேறு விதமான நோய்கள் தாக்கும். நான் தந்த மருந்துகளை நேரந் தவறாது சாப்பிடுங்கள். யசோ, இவர் மருந்து குடிப்பதற்குக் கள்ளம் பண்ணுவார். நீ அருகில் இருந்து நேரத்திற்கு நேரம் மருந்தைக் கொடு. எல்லாம் சரிவரும்'' என்றார் இராசரத்தினம்.

''பெரும் வருத்தமென்று எண்ணிக் கவலையுடன் வந்த யசோதினி அவருக்கு பெரும் வருத்தமில்லை என்பதை அறிந்து மகிழ்ந்தாள். பாதிக்கப்பட்ட நானே கவலைப்படாமல் இருக்கிறேன். நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? கவலைப்படுவதால் பிரச்சினைகள் தீருமென்றால் நானும் கவலைப்படுவேன்'' என்று கூறிச் சிரித்த யசோதினியின் கண்கள் லேசாகக் கலங்குவதை அவதானித்தார் இரத்தினசிங்கம்.

''உன்னைப் போல பாசமுள்ள மருமகள் இருப்பதால் தான் நான் உயிர் வாழ்கிறேன். நான் இனிக் கவலைப்படமாட்டேன்'' என்றார் இரத்தினசிங்கம்.

---

**941. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்றும்.**

---

மருத்துவ நூலோர் வாதம், பித்தம், சிலோத்துமம் என்று கூறியுள்ள மூன்றும் அளவுக்கு அதிகமானாலும், குறைந்தாலும் நோய் உண்டாகும்.

## அவசியமில்லை

இரண்டு தினங்கள் கழிந்தன. கெங்காதரன் வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை. தனஞ்சயன் அன்று காலை வந்தான். அவனைக் கண்ட இரத்தினசிங்கம் சொன்னார்; "உனக்கு வெட்கம், ரோசம், மானம், மரியாதை ஒன்றுமில்லையா...? அன்று கோயிலடியில் கெங்கா உன்னைத் தாக்குவதற்காக வந்தவன். யசோதினி உன்னைக் கண்டபடி ஏசி இந்த வீட்டு முற்றத்தை மிதிக்கக் கூடாதென்றவள். நான் உனக்குப் பல முறை எச்சரித்து விட்டேன். இன்று கடைசி முறையாகச் சொல்கிறேன், இனிமேல் இந்தப் பக்கம் வந்தாயேயானால் உனக்கு அடிப்பன்" என்றார்.

உள்ளே அதைக் கேட்டுக் கொண்டிருந்த அவரது வியாபார நிலையத்தில் வேலை செய்யும் இரத்தினம் கோபத்துடன் வந்து அவனுக்கு அடித்து விட்டு அவனது சட்டையைப் பிடித்து இழுத்துச் சென்று வெளியே விட்டு விட்டுச் சொன்னான்; "இனி இந்தப் பக்கம் வந்தாயானால் கால் அடித்து முறிப்பன்" தனஞ்சயனுக்கு உதறல் எடுத்தது. இரத்தினம் முரடன். அவன் சட்டையில் பிடித்து இழுத்து வந்ததால் அவனது பழைய சட்டை கிழிந்து விட்டது. அது ஒன்றுதான் அவனிடம் இருந்தது. இப்போது அதுவும் போடமுடியாதளவில்

கிழிந்து விட்டது. இனி என்ன செய்வது?'' என்று யோசித்தவாறு நடந்தான் தனஞ்சயன்.

“டேய், இன்றைக்குத்தான் இங்கு வாறது கடைசி நாளாக இருக்க வேண்டும். இனி இங்கு வந்தால் நடப்பதே வேறு” என்றான். அவனுக்குப் பயமாக இருந்தது; “இரத்தினசிங்கம் முரட்டுச் சுபாவம் உடையவர். பணபலம் மிக்கவர். தன்னை ஆள்வைத்து அடிபபிப்பார்” என்று நினைத்தவாறு நடந்தான் தனஞ்சயன்.

காலை ஏழுமணியாகியும் படுக்கையால் எழும்பாது படுத்திருந்த தனது கணவனைப் பாசத்துடன் பார்த்தாள் யசோதினி. முன்பென்றால் அவன் வீட்டுக்கு வருவது குறைவு. வந்தாலும் தங்கமாட்டான். இப்போ ஒருவாரகாலமாக அவன் வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை. அதனால் அவள் அக்கறையுடன் பலவிதமான உணவுகளைச் சமைத்து அவனுக்குக் கொடுத்து வந்தாள். பலநாட்கள் அவன் ஒழுங்காகச் சாப்பிடாமையால் அவன் மெலிந்திருந்தான். அதனால் யசோதினி அவனை வற்புறுத்தி உணவு வகைகளைக் கொடுத்து வந்தாள்.

அவனுக்கு இரண்டு தினங்களாக அடி வயிற்றில் வலி இருந்தது. அதனால் அடிக்கடி அவன் மல கூடத்திற்குச் சென்று வந்தான். அவனால் உணவு வகைகளை உண்ண முடியவில்லை. ஆனால் யசோதினி வற்புறுத்தி அவனுக்கு உணவு வகைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

“சில நாட்களாக ஒழுங்காக உணவை உண்ணாததால் தான் உங்களுக்கு இந்த நோய் வந்தது. நன்றாகச் சாப்பிடுங்கள்” என்பாள்.

“என்னால் சாப்பிட முடியவில்லை. வயிற்றில் ஒரே வலி. என்னால் தாங்க முடியவில்லை” என்றான் கெங்காதரன்.

“இவ்வளவு காலமும் இல்லாத வலி இப்போ எப்படி வந்தது?” என்றாள் யசோதினி.

“முன்பு நோயைப் பற்றி நினைக்க எங்கே நேரமிருந்தது? குடித்து விட்டுச் சூதாடினேன். சூதாடும் போது உலகில் நடப்பவை எதுவும் எனக்குத் தெரியாது. அதில்தான் முழுக்கவனமும் இருக்கும், நோயே தெரியாது” என்றான் கெங்காதரன்.

அவள், அவனை வைத்தியார் இராசரத்தினத்திடம் அழைத்துச் சென்றாள். அவர் அவனின் கையைப் பிடித்து நாடியைப் பார்த்தார். அவனது உடலில் பித்தம் அளவுக் கதிகமாகக் கூடியிருந்தது; ‘‘நேற்று என்ன சாப்பிட்டனீா?” இராசரத்தினம் கேட்டார்

“இப்போ நான் வீட்டைவிட்டு வெளுக்கிடுவதே இல்லை. அதனால் மனைவி எனக்கு விதம் விதமான உணவு வகைகளைச் செய்து பலாத்காரமாக உண்ணப் பண்ணி விட்டாள். அதனால் தான் வயிற்றில் வலி உண்டானது” என்றான் கெங்காதரன்.

“உணவை மருந்து மாதிரி உண்ணல் வேண்டும். முன்னர் உண்ட உணவு சமிபாடடைந்த பின்புதான் அடுத்த வேளைக்கான உணவை உண்ணுதல் வேண்டும். அடுத்ததாக உணவை அளவோடு உண்ண வேண்டும். எப்போதும் குறைவாக உணவை உண்பதும், உண்ணும் உணவுகளைச் சத்தானதாக உண்பதும் முக்கியம். அடிக்கடி உணவை உண்ணக் கூடாது. எல்லா நோய்களுக்கும் உணவுப் பழக்கம் தான் காரணம். அடிக்கடி உணவைக கொடுக்காதே. மனைவிமார் தமது கணவர்மாரின் மீதுள்ள அன்பால் அவர்களுக்கு அளவுக்கதிகமான உணவுவகைகளைக் கொடுக்கின்றனர். அதனால் அவர்கள் பலம் பெறுவார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதனால் நோயாளியாகிறார்கள். உணவு சமிபாடடைந்த பின்பு அளவோடு உணவை உண்டு வந்தால் உடம்பிற்கு மருந்து தேவையில்லை. அளவாக உணவைக் கொடுங்கள். மிருகங்கள் அளவுக்கதிகமாக உண்பதில்லை. அத்துடன் சமிபாடடையு முன்பும் உண்பதில்லை” என்றார் இராசரத்தினம்.

**942. மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்.**

முன்னர் உண்ட உணவு சமிபாடு அடைந்த பின்பு, அடுத்த வேளை உணவை அளவோடு உண்டால் உடம்புக்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

## வாழும்வழி

மோட்டார் வண்டியிலிருந்து இறங்கிய மகனையும் மருமகளையும் பார்த்துப் பூரித்துப் போனார் இரத்தினசிங்கம். அந்த அரிய காட்சியை அவர் கண்டு பல வருடங்களாகி விட்டன. மூன்று நான்கு வருடங்களுக்கு முன்பு கெங்காதரன் அந்த மோட்டார் வண்டியை வைத்துச் சூதாடித் தோற்று விட்டான். அதை அறிந்த இரத்தினசிங்கம் அவன் தோற்ற பணத்தைக் கட்டி அம்மோட்டார் வண்டியை வீட்டில் கொண்டு வந்து பூட்டி வைத்து விட்டார். எப்போதாவது ஒரு நாள் அவர் அம்மோட்டார் வண்டியில் எங்காவது செல்வார். மற்றைய வேளைகளில் அது பூட்டப்பட்ட நிலையிலேயே இருக்கும்.

புதுமணத்தம்பதிகளைப் போலச் சிரித்துக் கதைத்துக் கொண்டு வந்த அவர்களைப் பார்த்து அந்தத் தந்தையின் உள்ளம் மகிழ்ச்சியால் பூரித்துப் பொங்கியது. இப்போது ஒருவாரகாலமாகக் கெங்காதரன் வீட்டை விட்டு எங்கும் செல்வதில்லை. குடும்பத்தினருடன் இருந்து குதூகலித்துக் கொண்டிருந்தான். இப்படி அவன் இருந்ததை அவர் ஒரு நாளும் பார்த்ததில்லை. யசோதினியின் முகம் என்றுமில்லாதவாறு பிரகாசமாக இருந்தது. தினமும் அழுதழுது, துக்கத்தில் மாய்ந்து போயிருந்த யசோதினி, புத்துயிர் பெற்று நடமாடத் தொடங்கி விட்டாள். தலைசீவாது, தனது உடைகளைக் கவனியாது, நகைகள் அணியாது ‘மூதேவி போல’ இருந்த அவள் தலைசீவி, பூச்சூடி, பொட்டு வைத்து அழகான உடைகளை அணிந்திருந்தாள். முன்பென்றால் அவளுக்கு நகைகளை அணியப் பயம். கெங்காதரன் பலாத்காரமாகக் கழற்றப்

பார்ப்பான். இல்லாவிட்டால் களவெடுத்து விடுவான். அதனால் அவள் நகைகளை அணிவதில்லை. அன்று அவள் கழுத்து நிறைய அட்டியல், காசுமாலை, சங்கிலியென பல நகைகளை அணிந்திருந்தாள். இரண்டு கை நிறையக் காப்புக்களை அணிந்திருந்தாள். அவளைப் பார்க்கத் திருமகளைப் போல இருந்து. அதனால் இரத்தினசிங்கம் உற்சாகமாக இருந்தார்.

"வைத்தியர் என்னம்மா சொன்னார்?"

சிரித்தாள் யசோதினி. பூரண மகிழ்வுடன் அவளது முகத்தில் தவழ்ந்த புன்னகைக்கு ஒரு கோடி ரூபா கொடுக்கலாம் என நினைத்தார்; "என்னம்மா நான் ஏதோ கேட்கிறன், நீ சிரிக்கிறாய்"

"ஒரு வருத்தமும் இல்லை மாமா. இவர் என்ரை கையாலை சாப்பிட்டு எவ்வளவு காலம். அதனால் அடிக்கடி வற்புறுத்தி உணவுகளை கொடுத்து விட்டேன். அவை சமிபாடடையவில்லை. வைத்தியர்; "முன்னர் உண்ட உணவு சமிபாடடைந்த பிறகு அளபோடு சத்துள்ள உணவுகளைத் தேடி உண்பதே உடம்பினை நீண்ட காலத்திற்கு வாழவைக்கும் வழியென்றார். அப்படிச் சாப்பிட்டால் உடம்பிற்கு மருந்து அவசியமில்லை என்றும், அவருக்கு அளவுக்கதிகமாகச் சாப்பாட்டைக் கொடுக்க வேண்டாம்" என்றும் சொன்னார்.

"உண்மைதான். நீ, உனது கணவனின் மேலிருந்த பிரியத்தால் விதம் விதமான உணவுகளைத் தயாரிக்க, நானும் தாட்சாயினியும்

ஆசைப்பட்டு அளவுக்கதிகமாக உண்டு விட்டோம். அதனால் இரண்டு பேருக்கும் வயிற்றுக் கோளாறம்மா. இன்றைக்குச் சமைக்காதை” என்றார் இரத்தினசிங்கம்.

“உண்மைதானம்மா. நீ சுவையாகச் சமைத்து எத்தனை நாட்கள். ஏதோ உயிர்வாழ வேண்டுமென்று நினைத்து ஏனோ தானோவென்று தானே இவ்வளவு நாளும் சமைத்தாய். நாம் வேதனையில் இருந்ததால் நாக்குக் கூட மரத்துவிட்டது. இப்ப விதம் விதமாகச் சமைக்கிறாய். அதனால் தான் எங்களுக்கெல்லாம் வருத்தம்” என்றாள் தாட்சாயினி.

மகிழ்வுடன் சிரித்த யசோதினி சொன்னாள்; ‘‘அவர் இன்றைக்கு வியாபார நிலையத்திற்குச் செல்லப் போகிறாராம். மாமா, நீங்கள் இன்று அங்கு போக வேண்டாம். இன்றைக்குச் சமையல் இல்லைத்தானே, நான் அவருடன் போய்விட்டு வருகிறேன்’’ என்றாள்.

“நீ ஏனம்மா அங்கை. அவனோடு நான் போயிட்டு வாறன்” என்றார் இரத்தினசிங்கம்.

‘‘யசோ போயிட்டு வரட்டும். நீங்கள் நில்லுங்கோ’’ என்ற தாட்சாயினி கணவனைப் பார்த்துச் சொன்னாள்; “பலவருட காலமாக அவள் அவனுடன் கூடச் சென்றதில்லை போயிட்டு வரட்டும்’’ என்றாள்.

“சரி சரி” என்று சிரித்தார் இரத்தினசிங்கம்; “எவ்வளவு காலத்திற்குப் பிறகு இன்பமாக இருக்கிறான். இந்த இன்பம் நீடிக்க வேண்டும் என்று மகா கணபதியை வேண்டி விட்டு வருவோம் வா” என்று சொன்னார் இரத்தினசிங்கம்.

“இரண்டு பேரும் முதல் முதலாக வியாபார நிலையத்திற்கு இன்று செல்கிறீர்கள். மகா கணபதியிடம் சென்று வணங்கி விட்டுச் செல்லுங்கள்” என்றாள் தாட்சாயினி.

“நான் நேற்றே பழம்பாக்கு வெற்றிலை கற்பூரமெல்லாம் வாங்கி வைத்து விட்டேன்” என்றாள் யசோதினி.

இரத்தினசிங்கம் பூரிப்புடன் சிரித்தார்; “எல்லாம் திட்டமிட்டுத்தான் செய்கிறாய்” என்றார்.

**943. அற்றால் அளவுஅறிந்து உண்க; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு.**

முன்னர் உண்ட உணவு சமிபாடு அடைந்த பிறகு, அளவோடு நல்ல உணவை அறிந்து உண்பதே நீண்ட காலம் வாழ்வதற்கான வழியாகும்.

### ஏற்ற உணவு

வெள்ளை வேட்டி கட்டி, வெள்ளைச் சட்டை அணிந்து, வெள்ளைச் சால்வையைத் தோளில் போட்டு, நெற்றி நிறைய வீபூதி பூசி, சந்தணப் பொட்டிட்டு, அதற்குள் குங்குமமிட்டு வெள்ளைத்

தேவதூதனைப் போல ஆசத்தில் வந்தமர்ந்த கெங்காதரனை ஊழியர்கள் வியப்புடன் பார்த்தனர். அவர்களுக்கு இரத்தினசிங்கத்தைப் பிடிக்காது. அவர் முன்கோபி; எந்த ஒரு செயலையும் நல்ல முறையில் செய்யாவிட்டால் கண்டிப்பார். ஆனால் கெங்காதரன் அப்படியானவன் அல்லன். ஏதாவது தவறு செய்தாலும், “அடுத்த முறை அத்தவறு நேராமல் பார்த்துக்கொள்” என்பான். ஊழியர்களுடன் தோழமையுடன் பழகுவான். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வான். அதனால் ஊழியர்கள் அவனைப் பெரிதும் விரும்பினர். அவன் பல காலமாக அங்கு வராமையால் கவலைப்பட்டனர். அன்று அவன் வந்ததையிட்டு எல்லோரும் வந்து தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

“ஐயா, இந்த நிறுவனத்தைச் சரியான முறையில் நடத்த வல்லவர் நீங்கள்தான். நீங்கள் இங்கு வருவதையே நாங்கள் விரும்புகிறோம்” என்றான் இரத்தினம்.

தனது கணவன் முகாமைத்துவ நாற்காலியில் அமர்ந்திருக்கும் அழகை மகிழ்வுடன் இரசித்தாள் யசோதினி. அவள் அந்த நிறுவனத்திற்கு வந்த நெடுநேரம் தங்கியதில்லை. ஏதாவது தேவையென்றால் வந்தவுடன் திரும்பிச் சென்று விடுவாள். அன்று முழு நேரமும் தனது கணவனுக்கு அருகில் இருப்பதைப் பெரும் பாக்கியமாக அவள் கருதினாள்.

“இன்று நீங்கள் நல்ல அழகாக மாப்பிளை போல இருக்கிறியள்” என்றான் ஓர் ஊழியன்.

“அப்படியா…” பலமாகச் சிரித்தான் கெங்காதரன்.

ஊழியர்கள் தமது முதலாளி பல நாட்களுக்குப் பின் அங்கு வந்தமையைக் கொண்டாடும் முகமாகச் சிற்றுண்டி வகைகளை கொண்டு வந்து அவனுக்கு கொடுத்தார்கள்.

“காலையில் உண்ட உணவே எனக்குச் சமிபாடு அடையவில்லை. எனது மனைவி நான் நாலைந்து நாட்கள் வீட்டிலிருந்ததால் நல்ல உணவுப் பண்டங்கள் பலவற்றைச் செய்து தந்தாள். அவற்றை உண்டமையால் சமிபாடு அடையவில்லை. அதனால் எனக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டது. அதற்காக நான் மருந்து எடுத்தேன். இன்னும் எனக்கு வயிற்றுக் கோளாறு சுகமாகவில்லை. உங்கள் அன்புக்கு நன்றி. இன்னொரு நாளைக்கு என்னைக் கேட்டு விட்டுக் கொண்டு வாருங்கள். ‘‘முன்பு உண்ட உணவு சமிபாடடைந்த பின்பு, எனக்கு ஒத்துக் கொள்ளக் கூடிய உணவு வகைகளை, அதுவும் பசி ஏற்பட்ட பின்பே உண்ண வேண்டும். என்று வைத்தியர் சொல்லியுள்ளார்’’ வடை எனக்கு ஒத்துக் கொள்ளாது. எண்ணெய்யும் உழுந்தும் இலகுவில் சீரணமாகாது. நான் உரிய நேரத்தில் உணவை உண்ணாமையால் எனது வயிற்றில் புண் ஏற்பட்டு விட்டது. அதனால் எண்ணெயில் பொரித்த உணவு வகைகளையும், காரமான உணவு வகைகளையும் நான் உண்ண மாட்டேன்” என்றான் கெங்காதரன்.

தனது கணவன் பேசுவதைப் புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் யசோதினி. அவளுக்கு

அவனைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. வந்த நேரம் முதல் பொறுப்புணர்ச்சியுடன் தனது கடமைகளைச் செய்து கொண்டிருந்த அவனைப் பார்க்க அவளுக்குப் பெருமையாக இருந்தது.

பதினொரு மணிக்கு; "நான் களைத்துப் போனேன். தேநீர் குடிக்கப் போகிறேன். நீரும் குடிக்கிறீரா?" என்று கேட்டான் கெங்காதரன்.

அவன் அப்படி அக்கறையுடன் கேட்டது யசோதினிக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது; "இவ்வளவு அன்பையும் பாசத்தையும் இவர் சூதாடியதாலும் கள் அருந்தியதாலும்தானே என்மீது காட்டவில்லை" என்று நினைத்தாள்.

இரத்தினம் இரண்டு கோப்பைகளில் சுடச் சுடத் தேநீரைக் கொண்டு வந்து வைத்தான். ஒன்றை எடுத்த கெங்காதரன், அதை யசோதினியிடம் நீட்டினான். அதை அவள் எதிர்பார்க்கவில்லை. அவன் எடுத்த தேநீரைத்தானே குடிக்கப் போகிறான் என்று நினைத்தாள்; "இந்தாரும் குடியும்" என்று அவன் நீட்டிய போது அதிர்ந்து போனாள் யசோதினி. வாழ்நாளில் முதன்முதலாக அவனிடம் அதைப் பெறற்கரிய பொக்கிசமாகப் பெற்றுக் குடித்தாள். அது அமிர்தமாக இனித்தது.

"என்ன சிரிக்கிறீர்?" என்று கேட்டான் கெங்காதரன்.

"ஒன்றுமில்லை"

“இல்லை, ஏதோ இருக்கு. சொன்னீரானால் உம்மைப் போல நானும் சிரிக்கலாம் தானே..”.

மீண்டும் சிரித்தாள் யசோதினி. தேநீர் புரையேறியது. அதனால் அவள் இருமினாள்.

“சாப்பிடும் போதும், ஏதாவது குடிக்கும் போதும் கதைக்கக் கூடாது; சிரிக்கக் கூடாதுஎன்று சொல்வார்கள்” என்றவாறு அவளது உச்சியில் தட்டினான் கெங்காதரன்.

**944. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறுஅல்ல துய்க்க துவரப் பசித்து.**

முன்னர் உண்ட உணவு சமிபாடு அடைந்த பின், தனது உடம்புக்கு ஏற்ற உணவு வகைகளை நன்றாக அறிந்து பசி ஏற்பட்ட பின்னரே உண்ண வேண்டும்.

## நோயில்லாதவர்

“இப்பசரி. இவ்வளவு பலமான சிரிப்பு உமக்கு ஏன் வந்தது?” என்று கேட்டான் கெங்காதரன்.

சிலகணங்கள் யசோதினி அவனை உற்றுப் பார்த்தாள். அவனது கண்களில் குடி கொண்டிருந்த கவர்ச்சி அவளை மெய்மறக்கச் செய்தது.

“சொல்லும்” என்றான் கெங்காதரன்.

“நாம் திருமணம் செய்து இருபத்தைந்து வருடங்களாகி விட்டன. இன்றுவரை ஒரு நாளென்றாலும் எனக்கு நீங்கள் சோறு போட்டுத் தந்தீர்களா…? தேநீர் தந்தீர்களா? இன்று நீங்கள் தேநீர்க் கோப்பையைத் தூக்கும் போது நான், நீங்கள் குடிக்கப் போகிறீர்கள் என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் அதை எனக்குத் தந்தீர்கள். நான் அதை எதிர்பார்க்க வில்லை. அதனால் தான் மகிழ்ந்து சிரித்தேன்” என்றாள் யசோதினி.

“சின்ன வயதிலேயே கெட்ட பழக்கங்களைப் பழகியதால் உம்மோடு கூட இருந்து, உமது பணிவிடைகளின் தன்மையை நான் உணரவில்லை. உம்மைத் திருமணம் செய்த நாளில் இருந்து வியாபார ஸ்தாபனத்திற்குக் காலையில் எழுந்தவுடன் சென்று விடுவேன். பின் சூதாட்டம். இரவு பத்துப் பதினொரு மணிக்கு வீட்டுக்கு வந்து, விடிய ஆறுமணிக்கு வேலைக்குச் செல்வதால் உமது அன்பான பராமரிப்பை உணரவில்லை. கடைசி காலத்தில் தான் உணர்ந்துள்ளேன். இப்பொழுது உம்மை விட்டுப் பிரிய எனக்கு விருப்பமில்லாமல் இருக்கிறது. அதனால்தான் உம்மையும் இங்கு அழைத்து வந்தேன். இனித்தினமும் உம்முடன் தான் நான் இங்குவருவேன்” என்றான் கெங்காதரன்.

மகிழ்வுடன் சிரித்தாள் யசோதினி. அவளுக்கும் அவனுடன் இருக்க வேண்டும் போலவே இருந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சொன்னாள்; “மாமா விரும்ப மாட்டார். வீட்டில் சமையல் வேலைகள் இருக்கு”

“அப்பாவுக்கு வயது போய் விட்டது. ஓய்வாக இருக்கட்டும். இந்துஜாவுக்கும் அம்மாவுக்கும் என்ன வேலை..? இல்லாவிட்டால் நவராசாவைப் போல யாரையாவது ஒழுங்கு செய்து சமைப்பிப்போம்”

“அவர்கள் உங்கள் நாவுக்கேற்றபடி சமைக்க மாட்டார்கள். மாமாவை இங்கு விட்டு விட்டு நீங்கள் வீட்டில் இருங்கோ…”

“இல்லையசோ… நான் இழந்த சொத்தைச் சம்பாதித்தல் வேண்டும். அத்துடன் நீயும் எனக்கு அருகில் இருக்க வேண்டும்” என்றான் கெங்காதரன்.

அதைக் கேட்க அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. முன்பு அவள் ஏதாவது கேட்டாள் எரிந்து விழுவான். கலியாணமான புதிதில் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் சப்பரத் திருவிழாவுக்கு அவளுக்கு அவனுடன் செல்ல விருப்பமாக இருந்தது. அதை அவள் சொன்னாள்.

“எனக்கு வேலை இருக்கு யசோ. நீ யாருடனாவது செல்” என்றான். அவளுக்கு அந்த நினைவு வந்தது. அதனால் அவனைச் சோதிப்பதற்காகச் சொன்னாள்; “நாளைக்கு வெள்ளிக்கிழமை, நான் மாமியுடன் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் போகலாமென நினைக்கிறேன். அதனால் நீங்கள் மட்டும் இங்கு வாருங்கோ” என்றாள்.

“இது என்ன அரச அலுவலகமா…? என்னுடைய சொந்த நிறுவனம். நாங்கள் இரண்டு பேரும் நல்லூர்க் கந்தனைத் தரிசித்து விட்டு இங்கு வருவோம். அதுக்கேன் அம்மாவை?”

அதைக் கேட்டுச் சிலிர்த்துப் போனாள் யசோதினி; “அவனைக் கட்டியணைத்து முத்தம் கொடு” என்று அவளது இதயம் துடித்தது. பலர் அங்கிருக்கிறார்கள் என்ற எண்ணம் அதைத் தடை செய்தது. மகிழ்ச்சியால் மெய்மறந்திருந்த அவளை; “அம்மா சாப்பாடு கொண்டு வந்திருக்கிறேன்” என்று இரத்தினம் கூறிய வார்த்தைகள் நிஜ உலகிற்கு அவளை அழைத்து வந்தது.

மேசையில் தலைவாழை இலையைப் போட்டு விட்டு கறிவகைகளை எடுத்து வைத்தாள் யசோதினி; “கத்தரிக்காய்க் கறி வைக்காதையும். மேல் முழுவதும் அரிக்கிறது. கத்தரிக்காய் கிரந்தி. அரிக்கும். மரவள்ளிக் கிழங்கும் வேண்டாம். சலரோகம் இருக்கு” என்றான் கெங்காதரன்.

“உது எனக்குத் தெரியாதா? தெரிந்ததால் தான் நான் வல்லாரை இலையில் சம்பல் போட சொன்னனான். பாவற்காயில் கறி வைக்கச் சொன்னனான்” என்றாள் யசோதினி.

“குழைத்துத் தாரும் உமது கைபட்டால் சோறு அமிழ்தாகும்”.

“தயிர் விடட்டே”

“வேண்டாம் சளிக்குணமாக இருக்கு. இருமலும் இருக்கு” என்றான் கெங்காதரன்.

“சளியுள்ளவர்கள் தயிர் சாப்பிடக்கூடாது. உடம்புக்கு ஒவ்வாத உணவு வகைகளை ஒதுக்கி, அளவோடு உண்பனின் உடம்பில் தொல்லைகளைத் தரும் நோய்கள் உண்டாகாது'' என்று கூறியபடி சோற்றைக் குழைத்து அவனது கையில் கொடுத்தாள் யசோதினி. அவன் இடது கையால் பொரித்த மிளகாய் ஒன்றை எடுத்துக் கடித்தான்.

**945. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்**
**ஊறுபாடு இல்லை உயிர்க்கு.**

தனக்கு ஒவ்வாத உணவு வகைகளை ஒதுக்கி, அளவுக்கு அதிகமாக உணவை உண்ணாமல் வாழ்கின்றவனுடைய உடம்பில் துன்பத்திற்கிடமான நோய்கள் உண்டாகாது.

**இன்பமுள்ளோர்**

‘‘உங்களுக்குக் குடலில் புண்ணிருக்கிறது. நேற்றுப் பொரித்த மிளகாயை உண்டு விட்டு வயிறு எரிகிறது என்று சொல்லி இரண்டு மூன்று முறை மலகூடத்திற்குச் சென்றனீங்கள்'' என்றவாறு அவனது கையில் இருந்த பொரித்த மிளகாயைப் பறித்தாள் யசோதினி.

‘‘எனக்குப் பொரித்த மிளகாய் என்றால் நல்ல விருப்பம். தாரும்'' கெஞ்சினான் கெங்காதரன்.

“தரமாட்டன். உடம்புக்கு ஒவ்வாதவற்றை உண்ணக் கூடாது” என்றாள் யசோதினி.

கெங்காதரன் மகிழ்வுடன் சிரித்தான். “அவள் என்மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள். இப்படி அம்மா கூட என்னைக் கவனித்ததில்லை” என்று நினைத்தான்.

“பாவமாக இருக்கு ஒருமுறை மட்டும் கடியுங்கோ” என்று அவனிடம் முன்பு பறித்த அந்தப் பொரித்த மிளகாய்த்துண்டைக் கொடுத்தாள் யசோதினி.

“எனக்கு வேண்டாம்”

“இல்லைப் பிடியுங்கோ”

சிரித்தவாறு; “இன்னும் ஒன்று தருவீரானால் தான் வாங்குவன்” என்றான் கெங்காதரன்.

“உங்களுக்கு இடந்தந்தால் கரைச்சல்” என்றவாறு பொரித்த மிளகாயைத் தூர வைத்தாள் யசோதினி.

“சரி, அந்தத் துண்டு மிளகாயையென்றாலும் தாரும்” என்றான் கெங்காதரன். அவள் தூர இருந்த மிளகாய் வைத்த பாத்திரத்தை எடுக்கக் கெங்காதரன் தனது கையை வைத்து நாலைந்து பொரித்த மிளகாய்களை எடுத்தான்.

யசோதினிக்குக் கோபம் வந்து விட்டது. முறாய்த்துப் பார்த்தாள். “இந்தாரும் எனக்கு வேண்டாம்” என்று கூறித் தான் எடுத்த பொரித்த மிளகாய் முழுவதையும் கொடுத்து விட்டுக் கையை நீட்டினான். அவள் அவன் முன்பு கடித்த பாதி மிளகாயைக் கொடுத்தாள்.

“இதில் பார்க்க முன்பு போலவே இருந்திருக்கலாம்” என்றான் கெங்காதரன்

அதைக் கேட்டதும் யசோதினியின் கண்கள் கலங்கின. பொரித்த மிளகாய் இருந்த பாத்திரத்தை எடுத்து அவனுக்கு முன்னால் வைத்தாள்.

“அழுகிறீரா…? என்னை மன்னித்துக் கொள்ளும். நான் இனி அப்படிக் கதைக்க மாட்டன்” என்றவாறு எழுந்தான் கெங்காதரன்.

“இதென்ன சாப்பாடு. நான் சொன்னத்திற்காகக் கோவித்தா எழுந்தீர்கள்” யசோதினி பரபரத்தாள்.

“உம்முடன் இனி நான் கோவிப்பேனா? உமது அன்பை அறியாமல் போலித் தனமாக இவ்வளவு காலமும் வாழ்ந்து விட்டேன். இப்போது தான் குடும்பம் என்றால் என்ன? மனைவி எப்படியானவள்? கணவனின் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் என்பதையெல்லாம் புரிந்து கொண்டேன். இனி நீர் கோவித்தாலும் நான் கோவிக்க மாட்டன். குறைவாகக் நல்ல உணவை உண்பவனிடத்தில் தான் இன்பம் என்றும் நிலைத்திருக்கும். அளவுக்கதிகமாகவும் தனக்கு ஒவ்வாத உணவு வகைகளையும் உண்பவனிடத்தில்

என்றும் துன்பமே நிலைத்திருக்கும். அதனால் தான் நல்ல சத்துள்ள உணவுகளைக் குறைந்தளவு உண்டேன். நீர் தந்த போதும் நான் பொரித்த மிளகாயை உண்ணாததிற்குக் காரணம், அதனை உண்டால் எனக்கு துன்பம் தான் உண்டாகும். நீர் சாப்பிடும். நான் உமக்கருகிலே இருக்கிறேன். நான் குழைத்துத் தரட்டா?'' என்று கெங்காதரன் கேட்டான்.

யசோதினியால் தனது காதுகளை நம்பமுடியவில்லை. தான், ‘‘கனவு காண்கிறேனோ'' என்று நினைத்துத் தனது கையைக் கிள்ளிப் பார்த்தாள்.

‘‘உமக்கு ஒவ்வாத கறிகள் எவை? உம்மோடு இருந்து சாப்பிடாத குறை இப்போது தான் எனக்கு விளங்குகிறது'' என்று கவலைப்பட்டான் கெங்காதரன்.

‘‘நான் எல்லாம் சாப்பிடுவேன்'' என்றாள் யசோதினி.

கெங்காதரன் எல்லாக் கறிகளையும் சேர்த்துக் குழைத்துவிட்டு தயிர் விட்டான். பின் திரும்பவும் குழைத்து விட்டு உருண்டையாக உருட்டி அவளது கையில் கொடுத்து விட்டுப் பொரித்த மிளகாயை எடுத்து நீட்டினான்.

யசோதினி விம்மி விம்மி அழுதாள். அவளால் சோற்றை உண்ண முடியவில்லை. அதைக் கண்ட கெங்காதரன் பதறினான்; ‘‘என்ன யசோ?'' ஒன்றுமில்லை என்று அவள்

தலையாட்டினாள். பின்; ‘‘நாம் எவ்வளவு காலத்தை இழந்து விட்டோம். நீங்கள் முன்பே இப்படி நடந்திருந்தால் எமது குடும்பம் சொர்க்கத்தில் மிதந்திருக்கும்’’ என்றாள்

‘‘உண்மைதான் அறியாமையால் யாவும் நடந்து விட்டன. இனி ஒருபோதும் உம்மை நான் கண் கலங்கவிட மாட்டேன். நீர்தான் என்னுடைய உயிர்’’ என்றான் கெங்காதரன்.

அவன் வசந்தினியை நினைத்துப் பார்த்தான். அவள் பணம் கூடுதலாகக் கொடுகக் கொடுக்கக்க் கூடுதலாகச் சிரிப்பாள். தனது உடலைக் காட்சிப்படுத்துவாளே தவிர இப்படி அன்பாகப் பழகமாட்டாள். அவளோடு குறிப்பிட் நேரம் மட்டும் தான் கதைக்கலாம். அதன் பின் ஏதாவது சாட்டுச் சொல்லி என்னைக் கலைத்து விடுவாள்’’ என்று நினைத்தான் கெங்காதரன்.

---

**946. இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**
**கழிபே ரிரையான்கண் நோய்.**

---

குறைந்தளவு உணவை அது இன்ன தென்று அறிந்து உண்பவனிடம் இன்பம் நிலைத்திருக்கும். அளவுக்கதிகமாக உண்பவனிடத்தில் நோயே நிலைத்து நிற்கும்.

**அவதிப்படுபவர்கள்**

பரமேஸ்வரன் கஜேந்திரனது வீட்டுக்கு வந்தார். அவரை அந்த நேரம் எதிர்பாராத கஜேந்திரன் சற்று வியப்படைந்தான்.

“என்னை இந்த நேரம் எதிர்பார்த்திருக்க மாட்டாய். வீட்டாருக்குத் தெரியாமல் தான் உன்னிடம் வந்துள்ளேன். எனக்குச் சுகமில்லை. அதை வீட்டில் சொல்லப் பயமாக இருக்கிறது. சொன்னால் அவர்கள் மாத்திரைகள் பலவற்றைச் சாப்பாடு போல அள்ளித் தருவார்கள். எனக்கு ஆங்கில மருந்துகளில் நம்பிக்கை இல்லை. சித்த வைத்தியம் தான் செய்ய வேண்டும்” என்றார் பரமேஸ்வரன்.

கஜேந்திரனுக்குப் பயமாக இருந்தது. முன்பு அவர் விபத்துக்குள்ளான போது தான் அன்பின் மிகுதியால் சித்த வைத்தியர் இராசரத்தினத்தைக் கூட்டிச் செல்லப் பரமேஸ்வரனது வீட்டுக்காரர்கள் எல்லோரும் அவனை எதிரியைப் பார்ப்பது போலப் பார்த்தார்கள். அதனால் இன்னொரு முறை அத்தவறைச் செய்ய அவன் பயப்பட்டான்.

“நீ பயப்படுகிறாய் என்று எனக்குத் தெரிகிறது. கொழும்பில் நான் இருக்கும் வரை எனக்குச் சித்த வைத்தியத்தின் பெருமை தெரியவில்லை. சித்த வைத்தியர் இராச ரத்தினம் பெரும் நிபுணர். உடம்புக்கு வேறு நோய்களைக் கொடுக்காத பச்சிலைகளையும் வேர்களையும் பட்டைகளையும் விதைகளையும் பொடியாக்கித் தருவார். சித்த மருத்துவத்தில், ‘உணவுதான் மருந்து’ என்று அவர் கூறியது எவ்வளவு உண்மை தெரியுமா..? நான் எனக்கு ஒவ்வாத

உணவுவகைகளை அவரின் சொற்படி தவிர்த்ததால் இப்போ எத்தனையோ நோய்கள் என்னை விட்டுச் சென்று விட்டன. அதனால் வா இராச ரத்தினத்திடம் போவோம்'' என்றார்.

இருவரும் இராசரத்தினத்தின் வீட்டுக்கு வந்தனர். பலர் அவரின் சிகிச்சைக்காகக் காத்திருந்தனர். இருப்பினும் இராசரத்தினம் பரமேஸ்வரனை அழைத்தார்.

பரமேஸ்வரன் இராசரத்தினத்தின் முன்பாக இருந்த நாற்காலியில் வந்து அமர்ந்து கொண்டார். இராசரத்தினம் அவரது கையைப் பிடித்து நாடியைப் பார்த்தார். அவரது உடலில் வாதநாடி சற்று அதிகரித்துத் துடித்தது; ''நேற்று என்ன சாப்பிட்டீர்கள்?''

பரமேஸ்வரன் யோசித்தார். சில நிமிடங்கள் அவர் பேசாமல் இருந்தார்; ''பலாப்பழம் சாப்பிட்டீர்களா? ஆட்டு இறைச்சி.....'' என்று இராரத்தினம் கேட்டார்.

''இரண்டும் சாப்பிட்டேன்'' என்று வியப்புடன் கூறினார் பரமேஸ்வரன்.

''நீங்கள் சாப்பிட்ட இரண்டும் இலேசில் சமிபாடடைய மாட்டாது. ஆட்டு இறைச்சி சாப்பிட்டால் பலாப்பழம் சாப்பிடக் கூடாது. பசித்தால் தான் உணவை உண்ணுதல் வேண்டும். பசியின் அளவை அறியாது அளவுக்கதிகமாக உண்பவன் அளவில்லாத நோய்களுக்குள்ளாகி அவதிப்படுவான். உங்களுக்கு நெஞ்சு எரிகிறதா?''

“ஆம்” என்றார் பரமேஸ்வரன்.

“நாரி, கைகாலெல்லாம் உளைகிறதா?”

“ஆமெனத்” தலையாட்டினார் பரமேஸ்வரன்
“வயிற்றுக்குழப்பம்”

“இருக்கு” என்றார் பரமேஸ்வரன்

“நோய்கள் எல்லாவற்றிற்கும் உணவே காரணி. அளவுக்கதிகமான உணவை உண்பவன் அளவுக்கதிகமான துன்பத்தை அனுபவிப்பான். அளவாக உணவை உட்கொண்டால் மனமும் உடலும் லோசாக இருக்கும். அளவுக்கதிகமான உணவை உண்டால் சோம்பல் உண்டாகும்; சுறுசுறுப்பாக இயங்க முடியாத நிலை உண்டாகும். ஆகையால் உணவு சமிபாடு அடையாது. உணவுதான் மனதின் தன்மைக்கும், உடலின் நோய்க்கும் காரணியாகும். உணவு உண்ணமுன் களைப்பில்லாமல் எப்படி வேலை செய்தோமோ அப்படியே உற்சாகத்துடன் உணவு உண்ட பின்பும் வேலை செய்தல் வேண்டும். “அரைவயிறு சோறும், மிகுதி அரைவயிற்றில் அரைவாசி நீரும், மிகுதி வெற்றிடமாகவும் இருக்க வேண்டும்” என்று சித்த வைத்தியம் கூறுகிறது. கொழுப்பில்லாத இலகுவில் சமிபாடு அடையக்கூடிய உணவு வகைகளைத்தான் நீங்கள்இந்த வயதில் உண்ண வேண்டும். எண்ணையைத் தவிருங்கள். உங்கள் நோய் மாறும்” என்றார் இராசரத்தினம்.

“மருந்து இல்லையா....?” என்று கேட்டார் பரமேஸ்வரன்.

“மருந்து தருகிறேன். கொத்தமல்லி அவித்துக் குடியுங்கள். இரவு சாப்பிடாதீர்கள். அஜீரணத்தால் வாயு வயிற்றை நிரப்பிவிட்டது. இஞ்சிச்சாற்றுடன் தேன் கலந்து குடியுங்கள்” என்றார் இராசஇரத்தினம்.

“எனது மகனும் மருமகளும்......” பரமேஸ்வரன் கூறிக் கொண்டிருக்கும் போது குறுக்கிட்டுச் சொன்னார் இராசரத்தினம்; “ஆங்கில வைத்தியர்கள். அவர்களுக்கு நீங்கள் இங்கு வந்து தெரியாது” சிரித்தார் இராசரத்தினம்.

**947. தீயளவு அன்றித் தெரியான் பெரிது உண்ணின்
நோயளவு இன்றிப் படும்.**

பசித்தீயின் அளவு அறிந்து உண்ணாமல் அளவுக்கதிகமாக உண்பவன் அளவில்லாத நோய்களுக்குள்ளாக்கி அவதிப்படுவான்.

**ஆராய்ந்து**

“அதுமட்டுமல்ல, எனக்கும் எனது மனைவிக்கும் சித்த வைத்தியத்தின் மீது முழுமையான நம்பிக்கையுள்ளது. எனது மனைவி கால் மடக்கி இருக்க மாட்டாள்; நடக்கவும் மாட்டாள். முழங்கால்கள் இரண்டும் வீங்கியுள்ளன. ஒருவருடமாக மகனும் மருமகளும் அரசினர்

வைத்தியசாலையில் உள்ள வைத்திய நிபுணரிடம் காட்டி மருந்து சாப்பிட்டும் குணமாகவில்லை. எனது மனைவிக்கு உங்களிடம் வைத்தியஞ் செய்ய விருப்பம். ஆனால் அவளை நீங்கள் எமது வீட்டுக்கு வந்து பார்க்க முடியாது. அவளை உங்களது வீட்டுக்குக் அழைத்து வரவும் முடியாது. அதனால் என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறுகிறேன்'' என்றார் பரமேஸ்வரன்.

''நீங்கள் சொல்வதை வைத்துக் கொண்டு என்னால் வைத்தியஞ் செய்ய முடியாது. நோயாளியை நான் பார்க்க வேண்டும்.''

''எனக்கு அது தெரியும். எனது மகன் பிடிவாதமுள்ளவன். முன்பு நான் உங்களிடம் சிகிச்சை பெற்றதை அனுமதிக்காதவன். அது தனது குருவின் மருந்தால் தான் மாறியது என்று இப்போதும் சொல்வான். அத்துடன் தனது தாயாரை இங்கு கொண்டு வந்து வைத்தியஞ் செய்யக் கூடாது என்றும் சொல்லியுள்ளான்'' என்றார் பரமேஸ்வரன்.

''நோய் என்ன என்பதை ஆராய்நது கண்டு பிடித்தல் வேண்டும். அந்த நோய் ஏன் ஏற்பட்டது என்பதையும் ஆராய்ந்து கண்டறிதல் வேண்டும். அதன் பின்புதான் அதைத் தீர்க்கும் வழிவகைகளை ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பின்புதான் நோயாளிக்கு மருந்து கொடுத்தல் வேண்டும். அதற்கு முன் மருந்து கொடுப்பவன் வைத்தியன் அல்லன். நாம் வைத்தியராகு முன்பு எமது குருவுக்கு சத்தியஞ் செய்து கொடுத்துள்ளோம். சித்த வைத்தியத்தின்

மூலவர்கள் ரிஷிகள். தேவர்களுக்கு அவர்கள் வைத்தியஞ் செய்துள்ளனர். அப்படிப்பட்ட புனிதமான தொழிலை காசு பணத்திற்காகச் செய்தால் மருந்து சித்திக்காது. ஒரு இலையைக் கறியாக உண்பது வேறு, அதை மருந்தாக உண்பது வேறு. மருத்துவம் என்பது உடலுக்குச் சேவையாற்றுவதே தவிர, உயிரைக் கொல்வதல்ல. சில இலைகளும் பட்டைகளும் சிலருக்கு ஒத்துக் கொள்ளாது. அதனால் அவர்களது நாடியைப் படிசோதித்து வாதம், பித்தம், சிலேத்துமம் என்று மருத்துவ நூலோர் கூறியுள்ள வற்றில் எது கூடியுள்ளது, எது குறைந்துள்ளது என்று அறிந்த பின்பே மருந்து தரல் வேண்டும்'' என்றார். இராசரத்தினம்.

கஜேந்திரனுக்கு அதைக் கேட்கப் பயமாக இருந்தத. முன்பு பரமேஸ்வரனுக்கு வைத்தியம் செய்ய இராசரத்தினத்தைக் கூட்டி சென்ற போது, தணிகாசலம் சொன்னது அவனது காதில் ஒலித்தது; "கஜன், இராசரத்தினம் சிறந்த வைத்தியர். எமது மக்கள் அவரைத் தெய்வமாகவே மதித்துப் பூசிக்கின்றனர். அவர் கை நாடி பார்த்து இந்த நோயாளிக்கு மருந்து பலனளிக்காது என்று கைவிட்டுவிட்டாரானால், அவனை உலகத்தில் உள்ள எந்த வைத்தியராலும் குணப்படுத்த முடியாது. நாகம் தீண்டியவர்களைத் தற்போதைய ஆங்கில வைத்தியர்களாற் காப்பாற்ற முடியாது. ஆனால் அவரிடம் கொண்டு சென்றால் காப்பாற்று வார். மஞ்சள் காமாலை நோயெனச் செல்பவர்களுக்குப் பச்சிலை கொடுத்துத்தானே சிகிச்சை செய்கிறார். எத்தனை ஆயிரம் பேர் மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு அவரிடம் சிகிச்சை பெற்றவை. ஒருவரென்றாலும்

மரணமானவரா….? ரிஷிகளும் முனிவர்களும் செய்த சித்த வைத்தியத்தை அவர் செய்கிறார். ஆனால் அவர்களுக்கு அதில் நம்பிக்கை இல்லை. அதனால் நாம் ஏன் அவர்களின் விஷயத்தில் தலையிட வேண்டும். உனக்கு அவரில் அன்பிருக்கிறது. அதைப் பரமேஸ்வரனின் குடும்பத்தினர் தவறாக நினைக்கிறார்கள். அதனால் இனிமேல் அவர்களின் விஷயத்தில் தலையிடாதே" என்றார்.

"என்ன கஜன் யோசிக்கிறாய்?" என்று கேட்டார் பரமேஸ்வரன்

"வீட்டுக்குப் போவோம்" என்றான் கஜேந்திரன்

"கஜன், எனக்கு இந்த வைத்தியத்தில் நம்பிக்கை இருக்கு. ஒரு நாள் தணிகாசலத்திடம் அவரது மனைவி; "இராசரத்தினத்திடம் காட்டினால் ஓரிரு நாட்களில் சுகமாகி விடும். நீங்கள் பரமேஸ்வரன் அண்ணாவுக்கு ஒருமுறை சொல்லுங்கள்" என்றாள். அதற்குத் தணிகாசலம்; "அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. நீ பேசாமல் இரு" என்றார். பின் நான் பாக்கியலட்சுமியிடம் கேட்டேன். அவள் சொன்னாள்; "முன்பு எனக்கும் இப்படி முழங்கால் வீங்கியது. இராசரத்தினம் வைத்தியர் ஓர் எண்ணெய்தந்தவர் காலுக்குப் பூசச் சொல்லி, தூள் மருந்தும் தந்தவர். மூன்று நாட்களில் குணமாகிவிட்டது" அதனால் எனது மனைவிபடும் வேதனையைப் பார்க்கச் சகிக்கவில்லை" கண்கலங்கினார் பரமேஸ்வரன். கஜேந்திரன் வீட்டுக்குச் செல்வதற்காக எழுந்தான்.

**948. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

நோய் என்ன என்பதை ஆராய்ந்து, அந்த நோய் ஏற்பட்ட காரணத்தை ஆராய்ந்து, அதனைத் தீர்க்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்கேற்றவாறு செய்யப்படுவதே சிறந்த மருத்துவமாகும்.

## தகுந்த வைத்தியம்

பரமேஸ்வரன் கவலையோடு கஜேந்திரனைப் பார்த்தார். அதைப் புரிந்து கொண்ட இராசரத்தினம் சொன்னார்; "நீங்கள் கற்றவர்; அறிவுள்ளவர். எனது நிலையைப் புரிந்து கொள்ளல் வேண்டும். மருத்துவன் நோயாளிகளைப் பார்வையிடாமல் வைத்தியஞ் செய்ய முடியாது. தலைவலி, காய்ச்சல் வீக்கம் என்பன பலநோய்களுக்கான அறிகுறிகள். அந்த அறிகுறிகளை நோயாளிகளைப் பார்த்து ஆராய்வு செய்யாமல் மருந்து கொடுக்க முடியாது. பின்னர் உங்களது மகன் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? நோயாளியின் வயது; உடலின் தன்மை; எவ்வளவு காலமாக அந்நோய் உள்ளது என்பவற்றை மருத்துவர் பூரணமாக அறிந்து கொண்ட பின்புதான் மருந்து கொடுத்தல் வேண்டும். சில நோய்கள் பரம்பரை நோய்கள். உங்கள் மனைவியின் பெற்றோருக்கு என்னென்ன நோய்கள் இருந்தன என்று உங்களால் சொல்ல முடியுமா....? சில நோய்கள் ஒன்றுவிட்ட ஒரு பரம்பரைக்கும் வரும். அதனால் நோயாளியை நான் பரிசீலனை செய்யாமல் மருந்து தரமாட்டேன்" என்றார்.

பரமேஸ்வரனும் கஜேந்திரனும் வெளியே வந்தனர். பரமேஸ்வனுக்குக் கவலையாக இருந்தது. அன்று காலை அவரது மனைவி சொன்னாள்; “பாக்கியம் மச்சாளுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்த மாதிரித் தானாம் முழங்கால் வீங்கியது. வைத்தியர் இராச ரத்தினம் இரண்டு மூன்று வாரத்தில் குணமாக்கிவிட்டாராம். நான் ஆறேழு மாதங்களாக எவ்வளவு குளிசைகளைச் சாப்பிட்டு விட்டேன். கொஞ்சம் கூடக் சுகமாகவில்லை. முன்பு நடக்கக் கூடியதாக இருந்தது. இப்போ நடக்கவும் கஷ்டமாக இருக்கிறது. வத்சல்யனிடஞ் சொன்னால் அவன் சரிவரும் என்கிறான். குளிசைகளை மாற்றித் தருகிறான். எனக்கெண்டால் நடக்க முடியாமல் போய் விடுமோ என்று பயமாக இருக்கிறது”

காலையில் அவர் வத்சல்யனிடம் தனது மனைவியின் நிலையைப் பற்றிச் சொன்னார்; “அப்பா வயதான காலத்தில் வருத்தம் வந்தால் குணமடைய நாள்ச் செல்லும். அத்துடன் அம்மாவுக்குப் பெரிதாக ஒன்றுமில்லை. அவா பயப்படுகிறா. எனக்கு அம்மாவில் அக்கறை இல்லையென்றா நினைக்கிறீர்கள்” என்றான். அதற்குப் பரமேஸ்வரனால் பதில்கூற முடியவில்லை.

“பரியாரியார் பெண்சாதி புழுத்துச் செத்தவா” என்று எனது அப்பா முன்பு அடிக்கடி கூறுவார். அதை மாதிரி எமது வீட்டிலும் நடைபெறப் போகிறது. மகனும் மருமகளும் வைத்தியர்களான படியால் வேறு யாரிடமாவது காட்ட முடியவில்லை” என்று கவலைப்பட்டார் பரமேஸ்வரன்.

“நீங்கள் இராசரத்தித்திடம் காட்டிப் பார்ப்போம் என்று மகனிடம் கேட்டுப் பாருங்கோவன்” என்றான் கஜேந்திரன்

“நான் கேட்டனான். அவன் சிரிக்கிறான். இலைகளையும் குழைகளையும் விதைகளையும் பட்டைகளையும் அரைச்சுத் தாற வைக்கும் எமக்கும் எவ்வளவு வித்தியாசம். உங்களுக்கு நான் தந்த மருந்துதான் குணப்படுத்தியது. நல்ல கால மிகுந்தபடியால் இராசரத்தினம் பெயர் வாங்கினார். அம்மாவை அங்கு கொண்டு சென்று காட்டக் கூடாது. காட்டினால் பல பிரச்சினைகள் வரும்’’ என்றான் அதனால் பயமாக உள்ளது” என்றார் பரமேஸ்வரன்

“பிறகேன் அதைப் பற்றி யோசிக்கிறீர்கள். உங்கள் மனைவியை இங்கு கொண்டு வந்து காட்டினால் பிரச்சினைகள் வருமென்றால் அதை மறந்து விடுங்கோ. வீணாக அதை நினைத்து ஏன் துன்பப்படுகிறீர்கள்?” என்று கேட்டான் கஜேந்திரன்.

“நாமகளும் ஆங்கில வைத்தியர். ஆனால் அவளுக்கு இராசரத்தினத்தின் மீது பூரண நம்பிக்கை உண்டு. அவள் மருத்துவப் படிப்புக்கு ஆய்வு மேற்கொள்ளும் போது இராச இரத்தினத்தைப் பேட்டி கண்டுள்ளாள். அத்துடன் அவள்சிறுவயதிலிருந்தே அவரிடம் தான் மருந்து வாங்கிச் சாப்பிடுகிறாள். அவள் சொல்லிக் கூட இவன் கேட்கிறான் இல்லை. சலரோகம் உள்ள ஒருவருக்கு குறிஞ்சா இலையைத் தினமும் கொடுத்து, அவரின் சிறுநீரில் உள்ள சக்கரையின் அளவை அவள் கணக்கிட்டிருக்கிறாள். பத்து

நாட்களின் பின் சிறுநீரில் உள்ள சர்க்கரையின் அளவு சராசரிமனிதனின் அளவுக்கு வந்ததாகக் கூறுகிறாள். இது அவளது பேராசிரியர் செய்யச் சொன்ன ஆய்வு. அது தெரிந்தும் வத்சல்யன் தாய்க்கு வைத்தியஞ் செய்ய அனுமதிக்கிறானில்லை. அவளுக்கு எல்லோரும் சொல்லச் சொல்ல இராசரத்தினத்திடம் வைத்தியஞ் செய்தால் தனது நோய்குணமாகி விடுமென்று நினைக்கிறாள். அதனால் அவளது மனம் குழம்பிவிட்டது. அது ஒருபெரும் பிரச்சினை" என்றார் பரமேஸ்வரன்.

"எல்லாவற்றையும் மகாகணபதியிடம் பொறுப்புக் கொடுத்து விட்டு அமைதியாக இருங்கள். எல்லாம் நல்லபடி நடைபெறும்" என்றான் கஜேந்திரன்.

**949. உற்றான் அளவும் பிணி அளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.**

மருத்துவன் நோயாளியின் வயதையும், உடலின் தன்மையையும், நோயின் இயல்பினையும், அந்நோய் எவ்வளவு காலமாக உள்ளது என்பதையும் நன்கு ஆராய்ந்து அறிந்த பின்பே மருந்து கொடுத்தல் வேண்டும்.

## நான்கு பகுதி

வத்சல்யன் கொழும்புக்கு ஒருவாரகாலப் பயணத்தை மேற்கொண்டதால் பரமேஸ்வரன் தனது மனைவியை அழைத்துக் கொண்டு

இராசரத்தினத்தின் மருத்துவமனைக்கு வந்தார். அவன் கொழும்புக்குச் செல்ல முன்பு தாய்க்கு எப்படி மருந்துகளைக் கொடுக்க வேண்டுமென்று நாமகளுக்கும் பரமேஸ்வரனுக்கும் விளக்கமாகக் கூறிவிட்டுச் சென்றான்.

இராசரத்தினம் காமாட்சியம்மாளின் கையைப் பிடித்து அவளது நாடியைப் பரிசோதித்தார். பின் சொன்னார்; "உங்களுக்கு பெரிய நோய் எதுவும் இல்லை. நீங்கள் அளவுக்கதிகமாகப் பயப்படுகிறீர்கள். உங்களது காலைக் காட்டுங்கள் பார்ப்போம்'' என்றார். அவள் காலைக் காட்டினாளர். அவர் தனது உதவியாளரை அழைத்து கால்கள் இரண்டிற்கும் எண்ணெய் பூசச் சொன்னார். உதவியாளர் அவளைக் கட்டிலில் படுக்குமாறு கூறிவிட்டு அவளது முழங்கால்களுக்கு நன்றாக எண்ணெய் பூசிவிட்டுப் பச்சைத் தேங்காய் மட்டையை எடுத்து நெருப்பில் வாட்டி அதை முழங்காலில் வைத்தான். காமாட்சியம்மாள் எழுந்து நடந்து வந்து இராசரத்தினத்தின் முன்னாலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். எண்ணெய் பூசிய பின்பு நடக்க முன்பு போல நோக வில்லை.

"கொழுப்புக்கள் நிறைந்த மாமிச உணவை தவிருங்கள்; முட்டை, பால், நெய் கட்டியான தயிர் என்பவற்றையும் தவிருங்கள். கிழங்கு வகைகளை உண்ணாதீர்கள். உணவில் உப்பையும் பழப்புளியையும் சேர்க்காதீர்கள். மூன்று நேரம் மட்டும் சமிபாடடையக் கூடிய காய்கறி வகைளைச் சாப்பிடுங்கள். உண்ட பின்பு ஓய்வெடுங்கள். காலையிலும் மாலையிலும் நன்றாக நடவுங்கள். தினமும் ஒருமைல் தூரமாவது நடத்தல் வேண்டும்.

அத்துடன் மருத்துவம் நான்கு பகுதிகளைக் கொண்டது. நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிலிருந்து அந்தந்த நேரம் கொடுப்பவன் என்பனவே அவை. நோயுற்றவன்தான் பெரியதொரு நோய்க்கு ஆளாகிவிட்டதாக நினைக்கக்கூடாது. நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் இருத்தல் வேண்டும். அத்துடன் மருத்துவன் சொன்ன முறைப்படி உணவுகளையும் மருந்தையும் உண்ணல் வேண்டும். நோய்வாய்ப்பட்டவன் உணவு விஷயத்தில் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும். மருந்தில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். இதைவிட நோயுற்றவனை அருகில் இருந்து அக்கறையுடனும் அன்புடனும் பராமரித்தல் வேண்டும். உணவு வகைகளையும் மருந்தையும் அருகில் இருந்து கவனிப்பவன் நேரந் தவறாமல் நோயாளிக்குக் கொடுத்தல் வேண்டும். இந்த நான்கிலும் தான் மருத்துவம் தங்கியுள்ளது. முக்கியமாக நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லல் வேண்டும். எனது மருந்தைக் குடிக்கும போது வேறு எந்த மருந்தையும் நோயாளி பாவிக்கக் கூடாது" என்றார் இராசரத்தினம்.

"நான் மகன் தந்த மருந்தைக் குடிக்காமல் விட்டு விட்டேன்" என்றாள் காமாட்சியம்மாள்.

வெளியே வந்த காமாட்சியம்மாளுக்கு முழங்காலில் இருந்த வலி சிறிது குறைந்திருந்தது.

வீட்டுக்கு வந்த காமாட்சியம்மாளுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. இரண்டு தினங்களின் பின் அவளது நோய் சிறிது

குறைந்திருந்தது. இராசரத்தினம் கூறியதைப் போலக் காமாட்சியம்மாள் சகல விஷயங்களிலும் கட்டுப்பாட்டுடன் நடந்து வந்தாள். பரமேஸ்வரன் அவளின் அருகில் இருந்து அவளுக்கு மருந்தினை நேரத்திற்கு நேரம் கொடுத்து வந்தார்.

ஐந்து தினங்களில் காமாட்சியம்மாள் பழையபடி எழுந்து சுறுசுறுப்புடன் நடமாடத் தொடங்கினாள். அவளது முழங்காலில் இருந்த வீக்கம் முற்றாகக் குறைந்து விட்டது.

அன்று மாலை கஜேந்திரன் காமாட்சியம்மாளைப் பார்க்க வந்தான். காமாட்சியம்மாள் அவனை மகிழ்வுடன் வரவேற்றாள். அவள் உற்சாகத்துடன் இருப்பதைப் பார்க்க அவனுக்குச் சந்தோசமாக இருந்தது; "இனிமேல் நான் மாமிச உணவு வகைகளை உண்பதில்லை என்று விட்டுவிட்டேன் தணிகாசலமவை மாமிச உணவு வகைகளை உண்ணாமையால் தான் நோயில்லாமல் இருக்கிறார்கள்" என்றாள் காமாட்சியம்மாள்.

"என்னுடைய பாடுதான் கரைச்சல். நானும் மாமிச உணவை விட்டுவிட்டால் நல்லது" என்றார் பரமேஸ்வரன். காமாட்சியம்மாள் கஜேந்திரனுக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். முன்பு வந்த போது நடக்கக் கஷ்டப்பட்ட அவள் உற்சாகமாக நடந்து வருவதைப் பார்த்து மகிழ்ந்தான் கஜேந்திரன்.

---

**950. உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து.**

---

நோயுள்ளவன், நோய்தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகில் இருந்து கொடுப்பவன் என மருந்துவ முறை நான்கு பகுதிகளைக் கொண்டது.

## உயர்ந்த குடிப்பிறப்பு

ஜெயபாலன் மனைவியுடன் தான் வாழ்ந்த நாட்டிற்குச் செல்லத் தயாரானான். அன்று இலக்கியப் பேரவை கூடிய போது அவனுக்கு இலக்கியப் பேரவை சார்பில் ஒருபிரியாவிடை வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை சிவசுந்தரமூர்த்தி முன்மொழிந்தார். அவர்தான் ஜெயபாலனை இலக்கியப் பேரவையில் சேர்க்க வேண்டாமென்று முழுமூச்சாக நின்றவர். சிவசுந்தரமூர்த்தி முன்மொழிந்ததை வித்துவசிரோண்மணி வழிமொழிந்தார். இலக்கியப் பேரவையில் பெரும்பான்மையானவர்கள் அத்தீர்மானத்தை ஆதரித்ததால் சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. அதன் பின் ஒவ்வொருவரும் ஜெயபாலரைனக் கௌரவிக்கும் விழாவில் என்னென்ன செய்ய வேண்டும் என்று சொன்னார்கள்.; "சிறிய பிரிவு உபசாரவிழாவாக, ஒரு தேநீர் விருந்து மட்டும் ஜெயபாலனுக்கும் மனைவிக்கும் கொடுப்போம்" என்று சிவசுந்தரமூர்த்தி ஆரம்பித்து விட்டுப் பின் அதைப் பெருவிழாவாக நடத்தத் தீமானித்தார். சபையில் இருந்தோரும் அவரின் கோரிக்கைகளை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டனர். விக்னேஸ்வரமூர்த்தி எதுவும் கூறாமல் சபையில் நடைபெறுவதைப் பார்த்துக்

கொண்டிருந்தார். சபையினார் ஏகமனதாகத் தீர்மானிக்கும் போது அவரால் எதையும் சொல்ல முடியவில்லை. கனகலிங்கமும் சிவசுந்தரமூர்த்தியும் மிகவும் உற்சாகமாகச் செயற்பட்டனர்.

விழாவை அடுத்த சனிக்கிழமை கொண்டாடுவதாகவும், மேளதாளங்களுடன் ஜெயபாலனையும் அவனது மனைவியையும் வீட்டிலிருந்து நாவலார் ஸ்ரீ வித்தியா மகா கணபதி கோயிலுக்கு அழைத்து வந்து, அங்கு நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதிக்கு பூசை செய்து அங்கிருந்து இலக்கியப் பேரவைக்கு அழைத்துச் செல்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. கனகலிங்கம்; "அன்று மகா கணபதி ஆலயத்தில் அன்னாதானம் கொடுக்க வேண்டும்" என்றார். அதைச் சிவசுந்தரமூர்த்தி வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இலக்கியப் பேரவையில் விழாவைப்பற்றி முடிவெடுத்த பின்பு விக்னேஸ்வரமூர்த்தி சொன்னார்; "புதன்கிழமையில் இருந்து அடுத்த செவ்வாய்க்கிழமை வரை எனக்குக் கொழும்பில் கல்வி அமைச்சில் ஒரு கருத்தரங்கு இருக்கிறது. இலங்கையில் உள்ள எல்லாக் கல்விப் பணிப்பாளர்களும் வருவதால் நான் கட்டாயம் செல்ல வேண்டும். அதனால் கனகலிங்கம் விழாவுக்குத் தலைமை தாங்கட்டும்" என்றார்.

பேரவையில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. பண்டிதர் கந்தையா எழுந்து சொன்னார்; "தலைவர் அவசியம் கலந்து கௌ்ள வேண்டிய கருத்தரங்கு

அது ஆகையால் அதற்கு அடுத்த சனிக்கிழமை வைக்கலாம்"

"இல்லை, ஜெயபாலன் அதற்கு முன் சென்றாலும் செல்வார். அவருக்குப் பலவேலைகள் இருக்கும். அதனால் குறித்த தினத்தில் வையுங்கள்" என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

"ஜெயபாலன் புதன் அல்லது வியாழன் போவதாகச் சொன்னார்" என்றார் சிவசுந்தரமூர்த்தி. அதனால் குறித் தினத்தில் விழாவைக் கனகலிங்கத்தின் தலைமையில் வைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அன்று இரவு ஆரூரனும் தணிகாசலமும் கஜேந்திரனும் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தனர். "விக்னேஸ்வரமூர்த்திக்கு விழாவுக்குத் தலைமை தாங்கவிருப்பமில்லை. அதனால்தான் கொழும்பிற்குப் போவதாகக் கூறுகிறார்" என்று தணிகாசலத்திற்குச் சொன்னான் கஜேந்திரன். ஆனால் தணிகாசலம் அதை நம்பவில்லை. விக்னேஸ் வரமூர்த்திக்கு, ஜெயபாலனுக்குப் பெருவிழா எடுக்க இருப்பம் இருக்கிறது" என்று சொன்னார்.

விக்னேஸ்வரமூர்த்திக்கு அருகில் ஆரூரனும் தணிகாசலமும் கஜேந்திரனும் அமர்ந்தனர்.

"நீங்கள் கட்டாயம் கொழும்புக்குப் போக வேண்டுமா...?" என்று கேட்டார் தணிகாசலம்.

“நீங்கள் இப்போது எதற்கு வந்துள்ளீர்கள் என்று எனக்குத் தெரியும். கருத்தரங்கு எதவும் கொழும்பில் நடைபெறவில்லை. சமீப காலமாக என்னில் சிலருக்குச் சந்தேகமுள்ளது. நான் இலக்கியப் பேரவையின் தலைவர்தான். எனினும் நான் நினைத்தபடி எதையும் செய்ய முடியாது. நிர்வாக சபையில் பலர் இருக்கிறார்கள். அவர்கள் சொல்பவற்றையும் கேட்க வேண்டும். பெரும்பான்மையான அங்கத்தவர்களின் விரும்பம் தான் தீர்மானம். அதை அனுசரிக்க வேண்டும். அதற்காகத்தான் ஜெயபாலனின் விஷயத்தில் நிர்வாக சபையின் தீர்மானத்திற்கேற்ப நடந்து கொண்டேனே தவிர எனது மனச்சாட்சியின் படி நடந்து கொள்ளவில்லை. இலக்கியப் பேரவையில் உள்ள வறுமையான கலைஞர்கள் பணம் பெற ஆசைப்பட்டனர். பணமுள்ள கலைஞர்களும் அவாப்பட்டனர். அதனால் அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் இருந்தேன். நல்ல குணங்கள் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்களிடம் தான் இயல்பாக இருக்கும். ஜெயபாலன் இப்போதும் பல தீய செயல்களைச் செய்கிறான். இந்த விழாவுக்கான நிதி முழுவதையும் அவன் கொடுத்திருக்கிறான். தானே செலவு செய்து தனக்கு ஒருவிழா எடுக்க வேண்டுமா?” என்று கேட்டு விட்டு நிறுத்தினார் விக்னேஸ்வரமூர்த்தி.

தணிகாசலம் திகைத்துப் போனார். கஜேந்திரன் சொன்னது அவரது காதில் ஒலித்தது; “தணிகாசலம் அண்ணை எவ்வளவு காலமாக விக்னேஸ்வரமூர்த்தியுடன் பழகுகிறீர்கள். இருந்தும் அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியவில்லை.

நடுவு நிலைமையும் தகாத செயல்களைச் செய்வதற்கு விரும்பாமையும் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவரிடத்தில் அல்லாமல் மற்றவர்களிடத்தில் இயல்பாக ஒரு சேர அமைவதில்லை. அவர் தீய செயல்கள் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை உயர்வாகப் பேசமாட்டார்.

**951. இற்பிறந்தார் கண் அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.**

நடுவு நிலைமையும் நாணமும் உயர் குடியில் பிறந்தவரிடத்தில் அல்லாமல் மற்றவர்களிடத்தில் இயல்பாக ஒருசேர அமைவதில்லை.

## நல்ல வழியில் வாழ்வோர்

"நான் உங்களைத் தவறாக நினைத்துவிட்டேன். அன்று என்னைப் பற்றித் தனபாலன் மிகவும் கேவலமாகச் சனசமூக நிலையத்தில் பேசிய போது வேலாயுதபிள்ளை என்மீதுள்ள அன்பின் மிகுதியால் அவனுக்கு அடித்து விட்டார். எனக்காக அவர் அப்படி நடந்து கொண்டார் என்ற அபிமானமே எனது மனதில் எழுந்தது. அதனால் அவர்மீது என்னால் குற்றம் காணமுடியவில்லை. வேலாயுதபிள்ளை தனபாலனுக்கு அடித்தது பிழையென்று நீங்களும் கஜேந்திரனும் கூறிய போது எனக்கு உங்கள் இருவரும் மீதும் கோபம் ஏற்பட்டது. பின் நீங்கள் இலக்கியப் பேரவையில் ஜெயபாலனுக்குச் சார்பாக நடந்து கொள்வதாகவே எனக்குத் தோன்றியது.

ஆனால்...” மேலே பேச முடியாமல் கண்கலங்கினார் தணிகாசலம்.

“எனக்கு உனது நிலை விளங்கிய போதும் நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. உண்மையான நண்பர்கள் ஒருபோதும் பிரிய மாட்டார்கள். நட்பை ஆராய்ந்து தான் நட்புக் கொள்ள வேண்டும். நான் ஆராய்ந்த பின்பு தான் நட்புக் கொண்டேன். உண்மையான நண்பனானாலும் அவன் தவறாகப் புரிந்து கொண்டால் அவனுக்கு நியாயத்தை எடுத்துக் கூறக்கூடாது. அவனாக அதை உணர்ந்து வரல் வேண்டும். நீ அன்று இருந்த நிலையில் நான் சொல்வதைக் கேட்டிருக்க மாட்டாய். மற்றவர்கள் சொன்னாலும் கேட்கமாட்டாய். நீயாக உணர்ந்து வரட்டும் என்று எண்ணினேன். உன்னைப் பற்றி ஒருவன் விமர்சனம் செய்தால் அதைப் பற்றி நீ ஆராய வேண்டுமே தவிர ஆத்திரப்படக்கூடாது. அவன் கூறுவது உண்மையானால் நீ திருந்த வேண்டும். அவன் கூறுவது பொய்யானால் நீ ஏன் ஆத்திரப்படல் வேண்டும்? மக்களுக்கு உன்னைப் பற்றித் தெரியும். நல்லவர்கள், உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கம், உண்மை, நாணம் என்ற மூன்றிலிருந்தும் தவறாமல் இயல்பாகவே நல்ல வழியில் வாழ்வார்கள். அவர்கள் மறந்தும் கூட இழிந்த வார்த்தைகளைப் பேச மாட்டார்கள். இழிந்த குணமுள்ளவர்கள் பேசும் வார்த்தைகளை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது. நாம் ஏற்றோமேயானால் கூறுபயன் அதைத் திரும்பத் திரும்பக் கூறுவான். கேட்பவவர்களும் அதை நம்ப ஆரம்பித்து விடுவார்கள்” என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

தணிகாசலம் உருகிப் போனார். அவரால் பேசமுடியவில்லை. கண்களால் கண்ணீா ஒழுக; ‘‘என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்’’ என்றார்.

‘‘இதில் மன்னிப்பதற்கு என்ன உள்ளது? நான் உங்கள் மீதிருந்த அபிமானதில் களங்கம் காணவில்லை. முன்போலவே நினைத்திருக்கிறேன். கலங்காதீர்கள்’’ என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

‘‘என்னைப் பேசுமாறு சிவசுந்தரமூர்த்தி கூறுகிறார். சிவசுந்தரமூர்த்திக்கு நான் கடமைப்பட்டுள்ளேன். எனது இளமைக் காலத்தில் அறியாமை காரணமாக அவருடன் நட்புப் பூண்டு விட்டேன். எனக்கு ஜெயபாலனைப் பற்றிப் பேசவிருப்பமில்லை. பாமர மக்கள் நான் அவனைப் பற்றிப் புகழ்ந்துரைத்தால் அதை நம்பி விடுவார்கள். அதனால் பல கேடுகள் உண்டாகும். நல்லவர்கள் அவனை நான் புகழ்ந்துரைத்தால் என்னைக் கேவலமாக நினைப்பார்கள். அவனது பணத்திற்காக நான் அவனை உயர்வாகக் கருதுவதாகவும் நினைப்பார்கள். அதனால் நான் பேச விரும்பவில்லை’’ என்றான் ஆரூரன்.

‘‘ஒழுக்கம், உண்மை, நாணம் இம்மூன்றையும் பேணி வாழும் உத்தமர்களைப் பற்றித்தான் நல்லவர்கள் உயர்வாகப் பேசுவார்கள். தீமைகள் செய்வதற்கு நாணப்படாத ஒருவனை நான் எப்படி உயர்வாகப் பேசுவது? நாம் பேசுவதை வைத்துத்தான் எதிர்கால சந்ததியினரான மாணவர்கள் ஒருவனைப் பற்றி உயர்வாகவும் தாழ்வாகவும் எண்ணுவார்கள். நான் தலைமை தாங்கினால் ஜெயபாலனைப் பற்றி உண்மைக்குப்

புறம்பான பல தகவல்களைக் கூற வேண்டிவரும். அத்துடன் அவனுடன் சேர்ந்து தீய செயல்களைச் செய்வோர் தான் இவ்விழாவைச் செய்கின்றனர். அவர்களுடன் சேர எனக்கு விருப்பமில்லை. அத்துடன் அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டு பொறுமையாக இருக்கவும் என்னால் முடியாது'' என்றார் விக்னேஸ்வரமூர்த்தி.

கஜேந்திரன் தணிகாசலத்தைப் பார்த்தான். அந்தப் பார்வை; ‘‘உங்களுக்கு வினேஸ்வரமூர்த்தியைப் பற்றித் தெரியவில்லையே. ஐம்பது வருடகாலமாக எனக்கு விக்னேஸ்வரமூர்த்தியைத் தெரியும். நாம் உயிருக்குயிராகப் பழகி வருகிறோம்'' என்றீர்கள். அது இதுதானா...? ‘‘நீ வயதில் குறைந்தவன். அனுபவமில்லாதவன். உனக்குத் தெரியாது'' என்றீர்கள். இப்போது யார் வயதில் குறைந்தவர்..? யார் அனுபவ மில்லாதவன்?'' என்று கேட்பதைப் போல இருந்ததால் அவருக்கு வெட்கமாக இருந்தது.

---

**952. ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்.**

---

உயர் குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் ஆகிய இம் மூன்றில் இருந்தும் தவறாமல் இயல்பாகவே நல்லவழியில் வாழ்வார்கள்.

**நான்கு நற்பண்புகள்**

தணிகாசலமும் கஜேந்தரனும் ஆரூரனும் விக்னேஸ்வரமூர்த்தியிடம் விடைபெற்றனர்.

“தணி, நான் உங்கள் மூவருடனும் மிகவும் விசுவாசமாகவும் நம்பிக்கையுடனும் பழகுவதால் தான் எனது உண்மையான நிலையைப் பற்றி மனம் திறந்து உங்களுக்குக் கூறினேன். இதைத் தயவு செய்து வேறு யாருக்காவது கூறிவிடாதீர்கள். இழிந்த செயல்களைப் பிறர் செய்தாலும், அவர்களைப் பற்றி நாம் இழிவாகப் பேசக்கூடாது. பேசினால் துன்பங்கள் பல உண்டாகும்” என்றார். விக்னேஸ்வரமூர்த்தி.

வெளியே வந்த தணிகாசலம் பெருமூச்சுவிட்டார்; “கஜன், நீதான் என்னை மன்னிக்க வேண்டும். நீ பல முறை விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றிச் சொன்னனீ; “அவர் கடவுள் போன்றவர். ஒரு போதும் தவறாக எண்ணக் கூட மாட்டார். இழிந்தவர்களைப் பகைப்பது முட்டாள்த்தனமானது. தமக்குத் தேவையேற்பட்டால் நட்புக் கொள்வதும், தேவையில்லாதபோது நட்பிலிருந்து விலகிக் கொள்வதுமான தீயகுணம் விக்னேஸ்வர மூர்த்தியிடம் இல்லை. அத்துடன் உயர்ந்த நூல்களைக் கற்று, மாணவர்களுக்கு அதைச் சிறந்த முறையில் கற்பித்து ஒழுக்கமுள்ளவராக வாழும் அவர், அந்த உயர்ந்த கருத்துக்களைத் தன்வாழ்வில் கடைப்பிடித்து வருகிறார். அதை நீங்கள் உணரவில்லை. அதற்காக ஒரு நாள்க் கவலைப்படுவீர்கள்” என்றாய். எனக்கு இப்போ பெருங்கவலையாக உள்ளது. என்னுடைய வாழ்நாளில் நான் செய்த பெருந்தவறு இது” கலங்கினார் தணிகாசலம்

கஜன் சிரித்தான்; ‘‘விக்னேஸ்வரமூர்த்திக்கே அந்த எண்ணம் இல்லை. நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?. எதைச் சொன்னாலும் முகமலர்ச்சியும், யாருக்கும் எதையும் கொடுத்துதவும் தன்மையும், தன்னைக் குறை சொன்னாலும் குறை சொல்பவர்களைப் பற்றி இழிவாக எண்ணாமல் இருப்பதும், எல்லோருடனும் இனிய சொல் பேசுவதும் அவரது சுபாவம். அப்படிப்பட்ட உயர் குடியில் பிறந்தவர் உங்களைத் தவறாக நினைப்பார் என்று எண்ணுகிறீர்களா…?’’ என்று கேட்டான் கஜேந்திரன்.

‘‘எனது மனச்சாட்சி என்னைக் கொல்கிறது. இவ்வளவு நாட்களும் தவறாக நினைத்திருந்தேன்…. நான் நினைத்ததையும் உன்னுடன் பேசியதையும் நினைக்க எனக்கு வெட்கமாக உள்ளது. அவர் மன்னித்து என்னைக் ஏற்றுக் கொணடாலும் என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை’’ என்றார் தணிகாசலம்.

‘‘விக்னேஸ்வரமூர்த்தி வெளிப்படையான தோற்றத்தை மதிப்பவர் அல்லர். அவள் எமது நடத்தைகளை நன்கு புரிந்து வைத்துள்ளார். அழகான காகிதப் பூக்களை நாம் காட்சிக்கு வைக்கிறோம். அதன் அழகை ரசிக்கிறோமே தவிர முகர்ந்து பார்ப்பதில்லை. தேனீக்களும் வண்டுகளும் அவற்றைக் கவனிப்பதில்லை. அதே போலத்தான் அவரும். வெளிக்கவர்ச்சியை நம்பமாட்டார். உங்கள் உள்ளுணர்வுகளைப் பற்றி அவருக்கு நன்கு தெரியும். ஒருவன் தன்னுடன் முரண்பட்டால் அது அவனது அறியாமை என்று நினைப்பாரே தவிர

இயல்பான குணம் என்று நினைக்க மாட்டார். அவரது மனதில் அறியாமை இல்லாததால் உங்களைக் குறை நினைக்க மாட்டார். சந்தாப்ப சூழ்நிலைகளால் கூட நீங்கள் தவறு செய்தாலும், அவர் அதைத் தவறாக நினைக்க மாட்டார். அவரிடம் எந்தக் குறைகளும் இல்லாததால் அவரது மனம் உறுதியாக உள்ளது'' என்றான் கஜேந்திரன்.

''நீ எதைச் சொன்னாலும் நான் செய்தது தவறுதான். அதற்கு மன்னிப்பே இல்லை'' என்றார் தணிகாசலம்.

''தணியண்ணை சொல்வது சரி. பல காலம் பழகியும் அவரது உள்ளத்தைப் புரிந்து கொள்ளாதது தவறுதான். நீங்கள் அதைத் தவறு என்று தெரியாது செய்தீர்கள். தவறு என்று தெரிந்த பின்பு அத்தவறைச் செய்வது தான் கூடாது. நான் ஜெயபாலனைப் பற்றி இலக்கியப் பேரவையில் பேசமாட்டேன்.'' என்றான் ஆரூரன்.

''என்னையும் கேட்டவர்கள். நான் மறுத்துவிட்டேன். பலரும் வந்து வற்புறுத்தி னார்கள். எனது மனச்சாட்சிக்கு விரோதமான எந்தச் செயலையும் நான் செய்யமாட்டேன். வாழ்க்கையிலும்தான். வித்தியாவை நான் காதலித்தேன். அவளும் என்னைக் காதலிக்கிறாள். பெற்றோர் அவளுக்கு இன்னொருவனைத் தீர்மானித்தவை. அவன் இதுவரை வித்தியாவுடன் தொடர்பு கொள்ளவில்லை. அவனை வித்தியாவுக்கும் விருப்பமில்லை. காதலிப்பது பாவமென்றால் நாம் எமது தெய்வங்கள் எதையும் வணங்கக்கூடாது'' என்றான் கஜேந்திரன்.

“வித்தியாவின் மாமனின் மகன் வோறொருத்தியைத் திருமணம் செய்து விட்டதாக நான் அறிந்தேன்” என்றான் ஆரூரன்.

தணிகாசலம் எதுவும் பேசாமல் நடந்து கொண்டிருந்தார். முன்பிருந்த மனக்கொதிப்புடன் கஜேந்திரன் சொன்வையும் அவரைத் தாக்கின. அவருக்கு வேதனையாக இருந்தது. மனம் நிலை கொள்ளாமலே தவித்தது.

---

**953. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்**
**வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.**

---

உண்மையான உயர் குடியில் பிறந்தவர்களுக்கு முகமலர்ச்சி, கொடுத்து உதவும் தன்மை, இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கு பண்புகளும் இயல்பாகவே இருக்கும்.

## கோடி கொடுப்பினும் செய்யார்

ஜெயபாலன் தணிகாசலத்தின் வீட்டுக்குச் சிவசுந்தரமூர்த்தியுடன் வந்தான்.

“வாருங்கோ.... வந்து இருங்கோ...” என்று வரவேற்றார் தணிகாசலம்.

நாற்காலியில் வந்தமர்ந்த சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; “நான் கல்வி அமைச்சில் விசாரித்தான். அங்கு எந்த ஒரு கருத்தரங்கும் நடைபெறவில்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் சொன்னார்.

கல்வி அமைச்சின் செயலாளர் எனக்கு மிகவும் வேண்டியவர்'' என்றார்.

''விக்னேஸ்வரமூர்த்தி சும்மாய் சொல்ல மாட்டார். உங்களுக்குச் சொன்னவர் தவறாகச் சொல்லிவிட்டாரோ தெரியவில்லை'' என்றார் தணிகாசலம்.

''இல்லை அவர் நன்றாக விசாரித்துத்தான் சொன்னவர். எனக்கென்றால் விக்னேஸ்வரமூர்த்தி இலக்கியப் பேவையைவிட்டு நீங்கப் போகிறார் போலத் தெரிகிறது''

''இல்லை... அவர் ஏன் விலக வேண்டும்?. அவர் தவறாக எதையும் சொல்லவும் மாட்டார். செய்யவும்மாட்டார்'' என்றார் தணிகாசலம்.

''அது எனக்குத் தெரியும். இருந்தாலும் கல்வி அமைச்சின் செயலாளர் மீது எனக்கு நம்பிக்கை இருக்கு. அமைச்சுக்களைப் பொறுத்தவரை கருத்தரங்குகளை ஏற்பாடு செய்துவிட்டுத் தான் அறிவிப்பார்கள். பின் அதை ஒத்தியும் வைப்பார்கள். அதனால் நீங்கள் ஒருமுறை விக்னேஸ்வரமூர்த்தியை விசாரித்துச் சொல்லுங்கள்'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''எனக்கு விக்னேஸ்வரமூர்த்தி தலைமை தாங்குவதுதான் விருப்பமாக உள்ளது. அவர் பெரியவர்; கற்றவர்; கற்றவர்களால் மதிக்கப்படுபவர். அவர் தலைமை தாங்கினால் தான் விழாச்

சிறக்கும். எனக்கும் பெருமையாக இருக்கும்'' என்றான் ஜெயபாலன்.

''கனகலிங்கமும் கற்றவர்; கற்றவர்களால் மதிக்கப்படுகிறார்தானே'' என்றார் தணிகாசலம்.

சிவசுந்தரமூர்த்திசிரித்தார். பின் சொன்னார்; ''கற்றவர்கள் எல்லோரும் பெறுமதியான வர்களா? மக்களால் மதிக்கப்படுபவர்களா...? விக்னேஸ்வரமூர்த்தியின் மதிப்பை அளவிட்டுக் கூறமுடியாது. அவர் எமது கிராமத்தில் இருப்பதே பெருமை. அவருடன் எல்லாம் தெரிந்த நீங்கள் கனகலிங்கத்தை ஒப்பிடுகிறீர்கள். விக்னேஸ்வரமூர்த்தி சபையில் இருந்தாலே அச்சபை பெருமையுறும்.'' என்றார் சிவசுந்தரமூர்த்தி

''உண்மைதான். இங்கு வந்தது போல நீங்கள் அங்கு சென்று அவரைக் கேளுங்கள். அவர் தனது விஷயங்களில் மற்றவர்கள் தலையிடுவதை விரும்பாதவர். அத்துடன் அவர் முடிவெடுத்து விட்டால் யாருக்காகவும் தன் முடிவை மாற்ற மாட்டார். நான் போய்க்கதைத்து மனஸ்தாபப்படவிரும்பவில்லை. தயவு செய்து குறைநினைக்காமல் நீங்கள் சென்று கேளுங்கள்'' என்றார் தணிகாசலம்.

''நீங்களும் எம்முடன் வாருங்கோ'' என்று கேட்டான் ஜெயபாலன்.

''ஐயையோ நான் வரவில்லை. அவருக்குச் சிபார்சு செய்வது பிடிக்காது. தான் விரும்பாத

விஷயத்திற்குக் கோடி கோடியாய்ப் பொருட்களைக் கொட்டிக் கொடுத்தாலும் அதைச் செய்ய மாட்டார்'' என்றார் தணிகாசலம்.

''உது எல்லாம் எனக்குத் தெரியும். அவர் அன்றுதான் தலைமை தாங்க மாட்டேன் என்று சொல்லும் போது எனக்குச் சந்தேகமிருந்தது. அத்துடன் பாடசாலையில் இருக்கும் போது சிறு சிறு சலுகைகள் கூடச் செய்யாதவர். அவரை நான் போய்க் கோட்டால் ஒப்புக் கொள்ள மாட்டார் என்பதால்தான் நான் உங்களிடம் வந்தேன்'' என்று கூறிவிட்டு எழுந்தார் சிவசுந்தரமூர்த்தி.

அவர்கள் சென்றதும் பரமேஸ்வரன் கேட்டார்;

''அப்ப கருத்தரங்கு இல்லையா?''

''கருத்தரங்கு எதுவும் இல்லை. அவர் அந்த விழாவுக்குத் தலைமை தாங்க விரும்பாததால் தான் அப்படிச் சொன்னவர். கோடி கோடியாகப் பொருள்களைக் கொட்டிக் கொடுத்தாலும், உயர் குடியில் பிறந்தவர்கள் ஒழுக்கக் கேடான செயலைச் செய்ய மாட்டார்கள். விக்னேஸ்வரமூர்த்தி உயர்ந்த குடியில் பிறந்த கனவான். அவருக்கு நாம் எதுவும் சொல்லத் தேவையில்லை; அத்துடன் அவருக்கென்று நாம் செய்ய வேண்டியதும் எதுவும் இல்லை. அவருக்கு எந்த விதமான பற்றும் இல்லை; அவருக்கு எதுவும் தேவையும் இல்லை; இதுவரை அவர் பிறரிடம் தனக்காக எதுவும் கேட்டதும் இல்லை. அப்படியான ஒருவர் தனது நினைப்பைப் பற்றி எனக்கு விளக்கிக் கூறிவிட்டார். இனி எப்படி நான் அவரைக் கேட்க முடியும்.?'' என்றார் தணிகாசலம்.

“உண்மைதான். அவர் தனது பதவி உயர்வுக்காகக் கூட யாரையும் கேட்டதில்லை என்று சொன்னீர்கள். சமூகத்தில் மிகுந்த மதிப்புமிக்க ஒருவர் எப்படிச் சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒருவரை, அதுவும் உயர்ந்த ஒரு கல்விப் பீடத்தில் சிறப்பித்துக் கூற முடியும். அதனால் அவரது புகழ், கௌரவம், மதிப்பு யாவும் பாழாகி விடும். அவர் எடுத்த முடிவு சரியானது’ என்றார் பரமேஸ்வரன்.

**954. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்.**

பல கோடி ரூபா மதிப்புள்ள பொருள்களைக் கொடுத்தாலும் உயர் குடியில் பிறந்தவர் தம்குடியின் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமான செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

**கைவிடார்**

பண்டிதர் கந்தையா தணிகாசலத்தின் வீட்டுக்கு வந்தார். அவரை எதிர்பாராத தணிகாசலம் பரபரத்தார்; “பெரியதொரு சத்திர சிசிட்சை செய்தனீங்கள். ஒரு கட்டைக்கு மேல் நடந்து வந்திருக்கிறியள். அப்படி என்ன உயிர் போகிற வேலை?யாராவது ஒருவரிடம் சொல்லியனுப்பியிருந்தால் நான் வந்திருப்பேன். களைச்சுப் போனியள். இருங்கோ” என்ற தணிகாசலம் மின்விசிறியைப் போட்டுவிட்டு; “பாக்கியம், பண்டிதர் ஐயா வந்திருக்கிறார். குடிப்பதற்கு ஏதாவத கொண்டு வா” என்றார்.

“நான் நல்ல சுகதேகியாக இருக்கிறேன். எனக்கொன்றுமில்லை.. என்மீது பாசத்தைச் சொரியப் பலர் இருக்கும் போது எனக்குக் கிட்ட யமன் வரப் பயப்படுவான்” சிரித்தார் பண்டிதர்.

“சத்திரசிகிச்சை செய்து கொஞ்ச நாட்கள்தானே. கனத்த வேலைகள் செய்யக் கூடாது. கனகாலத்திற்குப் பிறகு வீடு தேடி வந்திருக்கிறியள். என்ன விஷயமென்று சொல்லுங்கோ” என்றார் தணிகாசலம்.

“பெரிதாக எதுவும் இல்லை. வைத்தியர்; “நெடுகப் படுக்கையில் படுத்திராதைங்கோ. எழுந்து நடவுங்கோ” என்று சொல்கிறார். நான் நடந்து வந்தால் நீங்கள் ஏசுகிறீர்கள். யாருடைய சொற்படி நான் நடப்பது” என்று சிரித்தார் பண்டிதர்.

தணிகாசலமும் சிரித்தவாறு அவரது கோலத்தைப் பார்த்தார். பல இடங்களில் கிழிந்து தைக்கப்பட்ட மேற்சட்டை. சலவை செய்தாலும் அழுக்குப் போகாத வேட்டி. சுருக்கம் விழுந்த முகம். நாலைந்து நாட்கள் சவரஞ் செய்யப்படாமையால் முள்ளுப் பற்றை போல வளர்ந்திருந்ததாடி. அவரைப் பார்க்க அவருக்கு வேதனையாக இருந்தது. யார் எதைக் கொடுத்தாலும் வாங்கமாட்டார்; “மூதேவி எனது வீட்டில் குடியிருக்கும் போது எனக்கு யார் உதவி செய்தாலும் என்னால் முன்னேற முடியாது. என்னுடைய கஷ்டம் என்னுடனேயே இருக்கட்டும். நீங்கள் அதில் பங்கு போடுவதை நான் விரும்பவில்லை” என்பார்.

“விக்னேஸ்வரமூர்த்தி அன்று தான் கொழும்புக்குக் கருத்தரங்கிற்குச் செல்லப் போவதாகக் கூறிய போது எனக்குச் சந்தேகமாக இருந்தது. இப்ப ஆரூரனும் கஜேந்திரனும் பேசமாட்டோனென்றும் சொல்கிறார்கள். நான் அந்தப் பக்கம் வரமாட்டன். சத்திரசிகிட்சை செய்ததால் எழும்பி நடக்கவோ, ஓர் இடத்தில் இருக்கவோ முடியாது என்று சொல்லிவிட்டேன். வறுமை இன்று வரும் நாளை போய்விடும். அதை உன்னுடைய வாழ்க்கையில் இருந்தே நான் புரிந்து கொண்டேன். என்னைப் போல இருந்த நீ இப்பபெரும் கோடீஸ்வரிக்குத் தந்தையாகிவிட்டாய். எல்லாம் முன்வினை. மனிதனுக்கு ஒருகொள்கை இருத்தல் வேண்டும். கொள்கையில்லாமையால் தான் அநியாயங்களும் அக்கிரமங்களும் உலகில் நிகழ்கின்றன. வறுமைப்பட்டாலும் உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் ஒருபோதும் தம் உயர்ந்த குணத்தைக் கைவிடமாட்டார்கள். விக்னேஸ்வர மூர்த்தி பெரும் பணக்காரன் அல்ல. ஆனால் உயர்ந்த குடியில் பிறந்தவர். அதனால் தான்ஜெயபாலனின் விழாவுக்கு தலைமை தாங்க மறுத்துவிட்டார். மிருகங்களுக்குக் கூட இலட்சியம் இருக்கு. ஆனால் சிவசுந்தரமூர்த்தி போன்றவர்களுக்குக் கொள்கையே இல்லை. ஜெயபாலன், தன்னைக் குற்றவாளியாக்கியவன் சிவசுந்தரமூர்த்திதான் என்று சொன்னவன். அத்துடன் தான் திருடிய பொருட்களெல்லாவற்றையும் அவனிடம் கொடுத்ததாகவும் சொன்னவன். அப்படியிருந்ததும் அவர் ஜெயபாலனுக்குப் பெருவிழா எடுக்கிறாராம். அதற்கு உயர்குடியில் பிறந்தவர்கள் பேசவேண்டுமாம். என்னுடைய மனைவியின் தாலிக் கொடியை அறுத்து வித்துத்தான் ஜெயபாலன். வெளிநாட்டுக்குப்

போனவன். இருந்த போதும் நான் அவன் எனக்குக் காசு கொண்டு வந்து தந்த போது, நான் வாங்கவில்லை. ஏனென்றால். அவன்தான் தாலிக்கொடியை அறுத்தவன் என்று எனக்குத் தெரியாது. அத்துடன் அந்தத் தாலிக் கொடியை ஏதோ பாவப்பட்ட பணத்தில் வாங்கியிருக்கிறேன். எனகடு அது கிடைக்க வேண்டுமென்ற பலன் இருந்தால் கிடைக்கும். உனது மனைவியின் தாலிக்கொடி நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் துலைந்தது பின் கிடைத்தது தானே. பாவப்பட்ட பணத்திலே ஒருவேளை உணவை உண்பதை விட உண்ணாமல் இருக்கலாம். வருமானமில்லாத கலைஞர்கள் பயனடையட்டும் என்றுதான் நானும் விக்னேஸ்வரமூர்த்தியும் அன்று இலக்கியப் பேரவையில் சம்மதித்து மகிழ்வுடன் இருப்பதாக நடித்தோம். ஆனால் மனந்திறந்து என்னால் அவனை வாழ்த்த முடியாது'' என்றார் பண்டிதர்.

தணிகாசலம் பெருமூச்சு விட்டார்; ‘‘நான் உயர்ந்த குடியில் பிறந்தவரைத் தவறாக நினைத்துவிட்டேன்; ‘‘தாம் பிறருக்குக் கொடுத்துதவும் தன்மையால் வறுமை ஏற்பட்ட போதிலும், உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் தம் உயர்ந்த குணத்தை ஒருபோதும் கைவிடமாட்டார்கள்'' என்று சுவாமியார் சிலதினங்களுக்கு முன்பு கோயிலில் நின்ற தணிகாசலத்தை அழைத்துச் சொன்னார். அது எவ்வளவு உண்மையென்றும், தான் தவறாகப் பெரியவர்களை நினைத்துவிட்டேன் என்பதையும் நினைத்துத்தான் சுவாமியார் சொன்னவர்'' என்று நினைத்தார் தணிகாசலம்.

**955. வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி பண்பில் தலைப்பிரிதல் இன்று.**

தான் பிறருக்குக் கொடுத்துதவும் தன்மை வறுமையால் குறைவடைந்த போதும், உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் கொடுத்துதவும் பண்பிலிருந்து விலக மாட்டார்கள்.

## பெருமையானவர்

ஜெயபாலனும் சிவசுந்தரமூர்த்தியும் பண்டிதரின் வீட்டுக்கு வந்தனர். அவர்கள் வந்தது விருப்பமில்லை என்பதை பண்டிதரின் முகம் காட்டியது. எனினும் சிரமப்பட்டுச் சிரிக்க முயன்றார்.

"உள்ளே நாங்கள் வரலாமா...?" என்று கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

"வாங்கோ... இருங்கோ" என்றார் பண்டிதர்.

பண்டிதரின் வீட்டுக்குள் வந்திருந்த சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; "ஜெயபாலன் கலைஞர்களின் நன்மை கருதித்தான் பெருந்தொகையான பணத்தை நிரந்தர வைப்பிலிட்டவன். அதனால் அவனைப் பாராட்டிக் கௌரவித்த நீங்கள், இப்போது அவனுக்குப் பிரிவு உபசார விழாக் கொண்டாடும் போது அவனைப் பற்றிப் பேச ஏன் தயங்க வேண்டும்? விக்னேஸ்வரமூர்த்தி விழாவுக்குத் தலைமை தாங்க மறுக்கிறார்"

“விக்னேஸ்வரமூர்த்தி ஏதோ கருத்தரங்கிற்குச் செல்வதாகக் கூறினார். நான் சத்திர சிகிட்சை செய்து இரண்டு வாரங்கள் தானே ஆகிறது. என்னால் வெகு நேரம் ஓரிடத்தில் இருக்க முடியாது. நின்றும் பேசமுடியாது” என்றார் பண்டிதர்.

“பேச இடமில்லாமல் இருந்த ஆரூரனும் இப்ப பெரியவனாகி விட்டான். இப்ப அவருக்கு நேரமில்லையாம். முன்பென்றால் எங்காவது பேசுவதற்கு ஒழுங்குபடுத்தித் தரச்சொல்லிக் கேட்பான். இப்ப அவருக்கும் நேரமில்லை” கேலியாகச் சொன்னார் சிவசுந்தரமூர்த்தி.

“அதை என்னுடன் ஏன் கதைக்கிறீர்கள்? ஆரூரனுடன் கதையுங்கள்” என்றார் பண்டிதர்.

“இப்ப ஊரில் எல்லோரும் பெரியவர்களாகி விட்டனர். பாடசாலைகோ சனசமூக நிலையத்திற்கோ பத்து ரூபா இங்குள்ளவர்கள் தரமாட்டார்கள். பக்கத்துப் பாடசாலைக்கு இரண்டு வருடங்களுக்க முன்னம் பத்துக் கணனி தருவதாக ஒருவர் ஒப்புக் கொண்டவர். பத்தாயிரம் இருபதினாயிரம் ரூபா கொடுத்து மின் இணைப்புச் செய்ய இந்த ஊரவை தயாராக இல்லாததால் கணனிகளைப் பெற முடியவில்லை. இப்பவும் பத்துக் கணனி தர ஒருவர் தயாராக இருக்கிறார். அதற்கும் மின்னிணைப்புச் செய்ய யாரும் தயாராக இல்லை. எல்லாவற்றையும் யாராவது இலவசமாகக் கொடுத்தால் வாங்குவார்களே தவிர தந்தவனைப் பாராட்டிக் கௌரவிக்க மனம் வராது. இங்குள்ளவர்களை நாமென்ன காசா கேட்கிறோம்?

நாலு வார்த்தை பேசுங்கோ என்றுதானே கேட்கிறோம்.'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“நீங்கள் சொல்வது சரி. விக்னேஸ்வரமூர்த்தி பாடாசலைக்காக எவ்வளவு செலவு செய்தவர். தான் உழைக்கும் பணத்தைக் கூடச் செலவு செய்தவர். அதை ஊரில் யார் நினைக்கிறார்கள். எனக்கு நோய். என்னால்பேச முடியாது. விக்னேஸ்வரமூர்த்தியைப் பற்றியும் ஆரூரனைப் பற்றியும் கஜேந்திரனைப் பற்றியும் என்னால் எதுவும் கூற முடியாது. நான் ஏழை. என்னுடைய பேச்சை யாரும் கேட்க மாட்டார்கள்'' என்றார் பண்டிதர்.

“ஒரு பொருளாய் மதிக்கத் தகாதவரையும் மதிப்பு மிக்கவராய்ச் செய்வது பணம் என்று நீங்கள் கற்ற கல்வி உங்களுக்குச் சொல்லவில்லையா?'' என்று கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

“கற்றதை இப்போது யார் நினைவிற் கொள்கிறார்கள்? மக்களிற் பலர் இப்போது சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப வாழப்பழகிக் கொண்டார்களே தவிர நல்லது கெட்டதை ஆராய்ந்து விலகிக் கொள்ளத் தயாராக இல்லை.'' என்றார் பண்டிதர்.

“பணத்தை நல்ல செயல்களுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் பல விதங்களிலும் உதவி செய்து வருகிறேன். அதனால் தான் கலைஞர்களுக்கு மாதா மாதம் உதவுவதற்காகப் பெருந் தொகைப் பணத்தை நிரந்தர வைப்பிலிட்டேன். கோயிலுக்கும் கொடுத்தேன்'' என்றான் ஜெயபாலன்.

“நல்லவர்கள் தாம் கொடுத்ததைப் பிறருக்குச் சொல்ல மாட்டார்கள். இறைவனுக்கு யாரும் எதையும் கொடுக்கத் தேவையில்லை. உலகத்தைப் படைத்து, உயிர்களைப் படைத்து, உயிர்களுக்குத் தேவையான அனைத்தையும் படைத்த இறைவனுக்கு நீ ஏன் உதவி செய்தல் வேண்டும்? அவர் தனக்குத் தேவையானவற்றை அவரே படைப்பார்.” என்றார் பண்டிதர்.

சிறுது நேரம் பேசாமல் இருந்த சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; “விக்னேஸ்வரமூர்த்தி விழாவிற்குத் தலைமை தாங்கினால் எல்லோரும் விழாவில் பேசுவார்கள். விக்னேஸ்வரமூர்த்தி வஞ்சகம் கொண்டு நடப்பதால் தான் இத்தனையும் வந்துள்ளது. அவர்திட்டமிட்டுக் காரியமாற்றுகிறார்” என்று சிவசுந்தரமூர்த்தி சொல்லும் போதும் பண்டிதர் குறுக்கிட்டுச் சொன்னார்; “குற்றங்கள் எதுவுமில்லாது குடிப்பண்புடன் வாழவேண்டும் என்று உறுதியாக நினைத்து வாழ்பவர்கள், வஞ்சனை கொண்டு பெருமையில்லாத செயல்களை ஒருபோதும் செய்ய மாட்டார்கள். விக்னேஸ்வரமூர்த்தி மிகவும் பண்பானவர். நீங்கள் நினைப்பதைப் போல தீமையான செயல்கள் எதையும் மனதால் கூட நினைக்கக்மாட்டார். அத்தகைய ஒரு நல்ல மனிதனை நீங்கள் குறைகூறுவதை நான் ஏற்கமாட்டேன்.” என்றார் பண்டிதர்.

**956. சலம்பற்றிச் சால்புஇல செய்யார்மாசு அற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்.**

தம் மாசற்ற குடிப்பண்புகள் அற்றுப் போகும் படி வாழமாட்டோம் எனக் கருதி வாழ்வோர், வஞ்சனை கொண்டு தகுதியில்லாத செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

## நன்கு தெரியும்

ஆரூரன் பண்டிதரின் வீட்டுக்கு வந்தான். அங்கே சிவசுந்தரமூர்த்தியும் ஜெயபாலனும் இருந்தனர். யாரைக் காணக்கூடாது எனறு நினைத்தானோ அவர்கள் அவனுக்கெதிரே இருந்தனர். அவர்கள் அங்கிருப்பதை அவன் அறிந்திருந்தால் அங்கு வந்திருக்க மாட்டான். அவனை அவர்கள் இருவரும் கண்டு விட்டனர். அதனால் திரும்பிப் போக முடியாது தவித்தான் ஆரூரன்.

"உன்னைக் காண வேண்டும் என்று நினைத்தேன். 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது' என்று சொல்வதைப் போல வந்து விட்டாய். வா. இப்படி இரு" என்றார் சிவசுந்தரமூர்த்தி.

ஆரூரன் பண்டிதரின் வீட்டுக்குள்ச் செல்லாது முற்றத்தில் நின்று கொண்டு; "சொல்லுங்கோ" என்றான்.

"உள்ளே வந்திரு. கனக்கக் கதைக்கவேண்டும்" என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“நான் குருவை மதிப்பவன். அவருடன் சரி சமமாக உட்காரமாட்டேன். கல்வியறிவில்லாதிருந்த என்னை இன்று மக்கள் மதிக்கும் ஒரு கல்வி மானாக்கியவரை நான் தெய்வமாக மதிக்கிறேன். சொல்லுங்கள்” என்றான் ஆரூரன்.

“அப்படியா சங்கதி.......? சனிக்கிழமை இலக்கியப் பேரவையில் ஜெயபாலனுக்கு விழாக் கொண்டாடுகிறோம். நீ அதில் பேச வேண்டும்” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“எனக்கு நேரமில்லை என்று நான் கனகலிங்கம் வாத்தியாருக்குக் கூறிவிட்டேன். அன்று ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் பேச ஒப்புக் கொண்டு விட்டேன்” என்றான் ஆரூரன்.

“ஊரில் உள்ள பெரியவர்கள் எல்லோரும் இப்படிச் சொன்னால் விழாவை எப்படிக் கொண்டாடுவது?” என்று கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

“நான் என்ன செய்ய முடியும். ஒத்துக் கொண்டு விட்டேன்” என்றான் ஆரூரன்.

“ஏடேய், உங்களைப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியும். விக்னேஸ்வரமூர்த்திக்குக் கருத்தரங்கு.... அவர் வரவில்லை என்றதும் உனக்குப் பேச்சிருக்கு. அவர் கஜேந்திரன் தான் பேசமாட்டாராம். இதெல்லாம் விக்னேஸ்வரமூர்த்தியின் திருகுதாளம். கோயிலையும் பாடசாலையையும் தான் நினைத்த மாதிரி நடத்தினவர். இப்ப இலக்கியப் பேரவையையும் அப்படி நடத்த விரும்புகிறார்.

அவர்தான் செய்பவையெல்லாம் நல்லதென்று நினைக்கலாம், ஆனால் நாங்கள் அவர் சொல்வதை நம்பமாட்டம். அவருக்கென்று ஒரு கூட்டம் இருக்கு. அவை, அவர் செய்வதைத் ‘தர்மம்’ என்று சொல்லிக் கொண்டிருக்கினை’’ என்றார் சிவசுந்தரமூர்த்தி.

‘‘அவர் செய்வது தர்மம் தான். தீயவற்றை எண்ணக்கூட அவரது மனம் விரும்பாது. அவர் பணம் சம்பாதிப்பதற்காகக் கல்வியைக் கற்கவில்லை. அவர் செய்த செயல்கள், அவர் தன்னை வளர்த்துக் கொள்ளச் செய்யவில்லை; புகழ்பெறச் செய்யவில்லை; மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காகவும் செய்யவில்லை. அவர் கற்ற கல்வியால் சமுதாயம் நன்மை பெற்றது. எந்தச் செயலைச் செய்தால் வருமானம் கூட வரும் என்பதிலேயே இன்றைய மனிதர் குறியாக உள்ளனர். அதனால்தான் அவர்கள் கற்ற கல்வி பயனற்றதாகிறது. அதே போலத்தான் பணமும். விக்னேஸ்வரமூர்த்தி எந்த விசயத்திலும் களங்கப்படாதவர். முன்பு அவர் பாடசாலையில் நிதி மோசடி செய்தாரென யாரோ ஊர் பேர் தெரியாதவர் புகாரிட, கல்வித் திணைக்களத்தினர் வந்து பாடசாலைக் கணக்கு வழக்குகளைப் பார்த்து விட்டு அதில் தவறுகள் எதுவும் இல்லை என்று கூறி அவருக்குப் பதவி உயர்வு வழங்கினர். உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் குற்றஞ் செய்தால், அது வானத்து நிலவில் காணப்படும் களக்கத்தைப் போல எல்லோருக்கும் நன்கு தெரியும்’’ என்றான் ஆரூரன்.

“நீ எதைச் சொன்னாலும் நான் அதை ஏற்க மாட்டேன். விக்னேஸ்வரமூர்த்தியால் தான் விழா குழம்பவுள்ளது. விழா நல்ல முறையில் நடைபெற வேண்டும், இல்லாவிட்டால் பெரும் பிரச்சினைகள் வரும்” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“விக்னேஸ்வரமூர்தியில்லாவிட்டால் இங்கு எதையும் செய்ய முடியாதென்று ஏன் நீங்கள் நினைக்கிறீர்கள்? கனகலிங்கம் அறிவாளி. இப்போ பாடசாலையை நல்ல முறையில் நடத்துகிறாரெனச் சொல்கிறீர்கள். அப்போ அவரைக் கொண்டு செய்விக்க வேண்டியது தானே. விக்னேஸ்வரமூர்த்தி பொய் சொல்ல மாட்டார். அவர் கருத்தரங்கிற்குக் கொழும்புக்குப் போகிறார். அதை ஏன் நம்ப மறுக்கிறீர்கள்?” என்று கேட்டான் ஆரூரன்.

அதற்குச் சிவசுந்தரமூர்த்தியால் பதில் கூற முடியவில்லை. சிறிது நேரம் யோசித்தார். பின்பு சொன்னார்.; “யார் வந்தாலென்ன..? யார் வராவிட்டாலென்ன விழா மிகவும் சிறப்பாக நடக்கும். சிவசுந்தரமூர்த்தியோடை மோதினால் கஷ்டம். இதுவரை நடக்காத பெருவிழாவாக நாம் கொண்டாடுகிறோமோ இல்லையோ என்றுபார்” என்று கூறிவிட்டு எழுந்தார் சிவசுந்தரமூர்த்தி.

“அதைத்தான் நானும் விருப்புகிறேன். நன்றாகக் கொண்டாடுங்கள்” என்றான் ஆரூரன்.

---

**957. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்**
**மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.**

---

உயர்குடியில் பிறந்தவர்கள் செய்யும் குற்றம், வானத்து நிலவில் காணப்படும் களங்கம் போல, எல்லோருக்கும் நன்கு தெரியும்.

## சந்தேகம்

“கேலி பண்ணுகிறாயா…? டேய் பணம் தானடா எல்லாவற்றையும் செய்விப்பது, ‘பணம் என்றால் பிணமும் வாய் திறக்குமென்று’ வயது வந்த பின் படிக்க வேணும் என்று உணர்ந்து படித்துப் பெரும் அறிஞனான உனக்குத் தெரியவில்லையா….? பணத்தை வீசினால் நாலு கூட்டம் மேளம் வரும். நாலு ஊர்களிலுமிருந்து பெரும் பெரும் அறிஞர்கள் வருவார்கள். உனக்குத் தெரியுமா இராமாயத்தின்ரை வரலாறு? கம்பர் பெரும் புலவர். ஆனால் கம்பராமாயணத்தைப் பாட விரும்பினார். சபை ஏற வேண்டமானால் பணம் பொருள் வேண்டும். அதற்கு உதவியவர் சடையப்ப வள்ளல். சடையப்ப வள்ளால் இல்லாவிட்டால் கம்பராமாயணமே இல்லை. அப்படி இருக்கக் கோடிக்கணக்கில் பணம் வைத்திருக்கின்ற ஜெயபாலனுக்கு விழாச் செய்ய முடியாதா?” என்று கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

“யார் விழாச்செய்ய முடியாது என்று சொன்னது…? விக்னேஸ்வரமூர்த்தி ஐயா சொன்னாரா…? இல்லைப் பண்டிதர் ஐயா சொன்னாரா…? விக்னேஸ்வரமூர்த்தி ஐயா கல்வி அமைச்சில் ஒரு கருத்தரங்கு இருக்கிறது என்று செல்கிறார். பண்டிதர் ஐயாவுக்கு வருத்தம். இவர்களே ஊரில் அறிஞர்கள். ஆயிரம் பேர்

இருக்கிறதாகச் சொல்கிறீர்கள். அவர்களை அழைத்து வந்து செய்யுங்கள்'' என்றான் ஆரூரன்.

''ஓ.... கைகாலாகாதவர்கள் நொண்டிச் சாட்டுகள் சொல்வார்கள். ஒருத்தரும் வரவேண்டாம். விழா மிகவும் சிறப்பாக நடைபெறும்'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

ஆரூரன் சிவசுந்தரமூர்த்தியுடன் கதைக்கக்கூடாது என்று நினைத்திருந்தான். அன்று தற்செயலாகச் சந்தித்ததால் 'அப்படித் தேவையில்லாமல் கதைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது' என்று நினைத்தவாறு பண்டிதரின் வீட்டை விட்டு வெளியே வந்தான். அவன் பண்டிதரின் வீட்டப் படலையைச் சாத்திய போது கஜேந்திரன் வந்தான்''

''என்ன ஆரூரா முகம் வாடியிருக்கிறது'' என்று கேட்டான் கஜேந்திரன்.

''உள்ளே சிவசுந்தரமூர்த்தியும் ஜெயபாலனும் இருக்கிறார்கள். அவர்களுடன் வீணாகப் பிரச்சினைப்பட்டு விட்டேன். பண்டிதர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை.?'' என்றான் ஆரூரன்.

''உன்னைப் பற்றி அவருக்கு நன்கு தெரியும். நீ ஏன் பயப்படுகிறாய்?'' என்று கேட்டான் கஜேந்திரன்.

''ஒருவனுடைய நல்ல பண்புகளுக்கிடையில் பண்பற்ற தன்மை காணப்பட்டால், அவனையும்

அவனுடைய குடிப்பிறப்புப் பற்றியும் ஐயப்பட நேரும்'' என்று பண்டிதர் அடிக்கடி சொல்வார். 'எதிரிகளோடும் அன்பாகப் பழகுதல் தான் பண்புள்ளவனது செயல்' என்றும் சொல்வார். நான் தேவையில்லாமல் சிவசுந்தரமூர்த்தியுடன் கடுஞ் சொற்களைப் பாவித்து விட்டேன். அவன் மிகவும் கோலாகலமாக விழாவைத் தன்னால் பணம் செலவு செய்து கொண்டாட முடியுமென்றும், விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவையும் பண்டிதர் ஐயாவையும் மிகவும் கேவலமாகவும் சொன்னான். அதை என்னால் பொறுக்க முடியவில்லை'' என்று கவலைப்பட்டான் ஆரூரன்.

''எந்த வேளையிலும் கற்றவர்கள் பொறுமையைக் கடைப்பித்தல் வேண்டும். 'பலரும் கேட்டு வெறுக்கக் கூடிய கொடுஞ்சொற்களை ஒருவன் ஆராயாமற் சொன்னாலும் பண்புள்ளவர்கள் தவறிக் கூட பண்பற்ற சொல்லைச் சொல்லக் கூடாதென்று' பண்டிதர் எமக்குக் கற்பித்தவர். பண்டிதரின் சிறந்த மாணவனான நீ அதை மறந்துமல்லாமல் பண்டிதருக்கு முன்னாலேயே பேசி விட்டாய். அடக்கமும் ஒழுக்கமுள்ள நீ பண்பற்ற ஒருவனின் வாய்ச் சொல்லிற்கு ஏன் பதிலளித்தாய்?'' என்று கேட்டான் கஜேந்திரன்.

''உண்மைதான். அவன் எதைச் சொல்லியிருந்தாலும் நான் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்திருக்கலாம். சிவசுந்தரமூர்த்தி படிக்காதபாமரன் என்றால் பரவாயில்லை படித்தவன்; உயர்ந்த உத்தியோகம் பார்ப்பவன். ஆனால் பண்பற்றவன்; படித்தபடி நடக்காதவன்.

அப்படிப்பட்டவனோடு கதைத்த நான் தான் மடையன்.'' என்றான் ஆரூரன்.

“சிறந்த நூல்களைக் கற்று அவற்றின் பொருளை நன்கு அறிந்து, அதன்படி வாழ்பவன், அந்த உயர்ந்த கருத்துக்களைக் கடைப்பிடிக்கவில்லையென்றால், அவனை விட அறிவில்லாதவன் உலகில் எவரும் இல்லை என்று உனக்குத் தெரியாதா...? அவனைப் பற்றி முழுமையாகத் தெரிந்த பின்பும் அவனுடன் சண்டைக்குப் போன உன்னைப் பற்றிப் பண்டிதர் கட்டாயம் தவறாகத்தான் நினைப்பார்'' என்றான் கஜேந்திரன்.

ஆரூரனுக்குத் துக்கமாக இருந்தது. பண்டிதரிடம் ‘மன்னிப்புக் கேட்க வேண்டும்’ என்று நினைத்தான். அவர் மன்னிக்க மாட்டார்; ஏசுவார்'' என்று நினைக்க அவனுக்கு வேதனையாக இருந்தது.

**958. நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.**

ஒருவனது நல்ல பண்புகளுக்கிடையே பண்பற்ற செயல்கள் காணப்பட்டால், அவனது குடிப்பிறப்புப் பற்றி சந்தேகம் ஏற்படும்.

## வாய்ச்சொல் காட்டும்

சிவசுந்தரமூர்த்தி நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்கு வந்தார். அப்பொழுது மாலை நேரப் பூசை முடிந்து பக்தர்கள் வீபூதி பிரசாதம் பெற்றுக் கொண்டிருந்தனர். ஜெயபாலன் பட்டு வேட்டிகட்டி பட்டுச் சால்வை போட்டு மாப்பிள்ளை போல வந்து நின்றான். குருக்கள் ஜெயபாலனுக்குத் திருநீறு கொடுத்து விட்டுச் சிவசுந்தரமூர்திக்கு திருநீறு கொடுத்தார். இடது கையின் மீது வலது கையை வைத்து குனிந்து மிகவும் மரியாதையாகக் குருக்கள் கொடுத்த திருநீற்றை வாங்கினார் சிவசுந்தரமூர்த்தி. வழக்கமாக அவர் அப்படித்தான் திருநீற்றை வாங்குவார். அப்போது குருக்கள் நினைப்பார்; “எல்லாம் பாசாங்கு. உண்மையான மதிப்பு வைத்திருப்பவன் வேஷம் போடாது வார்த்தைகளைக் கவனமாகப் பாவிப்பான். இவன் கண்டபடி ஆராயாதுகதைப்பான். செயல்களில் தான் பெரும் மதிப்பு வைத்திருப்பவன் போலக் காட்டிக் கொள்வான்”.

திருநீற்றை வாங்கிப் பூசிவிட்டுச் சொன்னான்; “குருக்கள், சனிக்கிழமை பூசை செய்வீர்களோ, இல்லை வேறு யாரையாவது ஒழுங்கு செய்யப் போகிறீர்களோ? இங்கு சனிக்கிழமை எல்லோருக்கும் பெரும் பெரும் வேலைகள் இருக்கிறதாம்”

“பாவம் செய்தவன், பழி செய்தவன், தீமை செய்கிறவனெல்லாம் இங்கு வந்து மகா கணபதிக்குச் சொல்லி மன்றாடி என்னைக் கொண்டு

அர்ச்சனை செய்விப்பார்கள். அதனால் தாம் செய்த பாவம், பழி, தீமையெல்லாம் அகன்று விடுமென்று நம்புவார்கள். அப்படியிருக்க நான் அன்று கோயிலுக்கு வராமல் இருக்க முடியுமே?'' என்று கேட்டார் குருக்கள்.

''அப்போ, நாங்களெல்லாம் பாவப் பட்டனாங்கள் என்று கருதுகிறீர்களா..?'' என்று கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

குருக்களுக்கு வேதனையாக இருந்தது. ''தான் ஏதோ சொல்ல இவன் ஏதோ சொல்கிறான்'' என்று நினைத்தார்.

''குருக்கள், நீங்கள் இந்தக் கிராமத்தின்ரை குரு. எல்லோரையும சமமாக நினைத்தல் வேண்டும். அதே போல இந்தக் கிராமத்திலை வாழுகிற பெரியவர்களும் எல்லோரையும் சமமாக மதித்தல் வேண்டும். அதை யாரும் உணர்கிறார்கள் இல்லை'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''ஒவ்வொருவரும் தன்னைப் போலத்தான் மற்றவர்களும் இருக்கிறார்கள் என்று நினைப்பது பிழை. என்னைப் பொறுத்தளவில் எனக்கு எல்லோரும் சமமானவர்கள் தான். நான் இதுவரை யாருக்கும் பாகுபாடு காட்டியது கிடையாது. நீ சனிக்கிழமை எவ்வளவு நேரம் பூசை செய்யச் சொல்கிறாயோ அவ்வளவு நேரம் பூசை செய்கிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார் குருக்கள்; ''சிவசுந்தரமூர்த்தியின் தந்தை மிகவும் நல்லவர். பெரியவர்களை மதிப்பவர்; உரத்துக்கூடக் கதைக்காதவா;. நல்ல பக்திமான்; எல்லோரையும்

மதிப்பவர். அப்படிப்பட்டவருக்கு இவன் எப்படி வந்து பிறந்தான். அவருக்கு எதிர்மாறான வனாக இருக்கிறான்'' என்று நினைத்தவாறு சென்றார் குருக்கள்.

''குருக்களுக்கு நல்லாச் சொன்னியள். அவர் இங்குள்ள சில பிரமுகர்களை பெரிதாக நினைக்கிறார்; அவர்களுக்கு அர்ச்சனை செய்யும் போது பிரமாதமாகச் செய்கிறார்; நாம் எவ்வளவு பணத்தைக் கொடுத்தாலும் எம்மை மதிப்பதில்லை; விக்னேஸ்வரமூர்த்தி கோயிலுக்கு வராவிட்டால் பூசை கூடச் செய்ய மாட்டாரென்று கதைக்கிறார்கள்'' என்றான் ஜெயபாலன்.

ஜெயபாலனும் சிவசுந்தரமூர்த்தியும் மகா கணபதியை வணங்கிவிட்டுச் சுவாமி யிடஞ் சென்றனர். அரச மரநிழலில் சுவாமியாருடன் பலர் இருந்தனர். சுவாமியார் அவர்களுக்கு அருளுரை வழங்கிக் கொண்டிருந்தார்; ''ஒருவன் தன்னைத்தானே மதிப்பிடல் வேண்டும்; இது சுயமதிப்பீடு என்று சொல்லப்படும். உன்னை ஒருவன் கொடியவார்த்தை களால் நிந்தித்தால்; உனக்கு வரும் கோபம் தான், நீ இன்னொருவனை நிந்திக்கும் போது அவனுக்கும் வரும். நிலம் எத்தகையது என்பதை அதில் வளரும் பயிர்கள் காட்டுவது போல, ஒருவன் பேசும் வார்த்தைகள் அவனது குலப்பொருமையைக் காட்டும். ஒவ்வொருவரும் தன்னில் குற்றம் காணல் வேண்டும். உன்னில் சிறிய குற்றமிருந்தாலும் அதை நீக்க முயலவேண்டும். அதே போல மற்றவர்களிடம் குற்றங்கள் காணப்பட்டால் அதைப் பெரிதுபடுத்தல் கூடாது. அவனுடைய நற்குணங்களைத் தான் நாம்

மதித்தல் வேண்டும். துர்க்குணமுள்ளவர் அத்துர்க்குணத்தால் கெட்டழிவார் என்பதால் தான் நன்மக்கள் அவர்களுடன் சேர்வதில்லை. எல்லாவற்றையும் இறைவன்தான் கொடுக்கிறார்....'' சுவாமியார் அருளுரை நிகழ்த்திக் கொண்டிருந்தார். அதைக் கேட்ட சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; ''இப்பொழுது சுவாமியாரும் அவர்களுடைய பக்கம்தான் கதைக்கிறார். இதிலை நின்றால் விசர்வரும். வா போவம்'' என்றார் சிவசுந்தரமூர்த்தி. எதுவும் பேசாமல் அவருக்குப் பின்னால் சென்றான் ஜெயபாலன். அவனுக்குப் பயமாக இருந்தது.

**959. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்**
**குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.**

நிலம் எத்தன்மையது என்பதை அதில் முளைத்த முளை காட்டும். அது போல ஒருவனது வாய்ச் சொல் அவன் எக் குலத்தவன் என்பதைக் காட்டி விடும்.

## குடி உயர

அன்று சனிக்கிழமை. விக்னேஸ்வரமூர்த்தி கல்வி அமைச்சில் கருத்தரங்கிற்காகச் சென்று விட்டார். கொழும்பில் கல்வி அமைச்சில் கருத்தரங்கு நடக்காத போதும் அவருக்குக் கல்வி அமைச்சில் முக்கியமானதொரு வேலை இருந்தது. அதை வெகு நாட்களாக முடிக்க முடியாது கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். ஜெயபாலனது பிரிவுபசார விழா அவருக்கு அவ்வேலையை முடிக்க உதவியது.

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்தில் ஜெயபாலனும் அவனது நண்பர்களும் நின்றனர். மக்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர். கனகலிங்கம் ஜெயபாலனுக்கு மாலை சூட்டி அவனை வரவேற்றார். அதைத் தொடர்ந்து ஜெயபாலனின் நண்பர்கள் பலர் மாலை சூட்டி அவனைக் கௌரவித்தனர். அவர்கள் சூடிய மாலைகளை அவர்களுக்கு ஜெயபாலனே வாங்கிக் கொடுத்திருந்தான். குருக்கள் மகா கணபதிக்குப் பூசை செய்து விட்டு அங்கிருந்தவவர்களுக்கு திருநீறு கொடுத்தார்.

மேளவாத்தியம் முழங்க ஜெயபாலன் கோயிலிருந்து இலக்கியப் பேரவைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். மிகக் குறைந்தளவு மக்களே ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். அது சிவசுந்தரமூர்த்திக்கு அவமானத்தைக் கொடுத்தது. ஜெயபாலனுடன் பிரச்சினைப்பட்டாலும் ஒப்புக்காவது இங்குள்ள பிரமுகர்கள் வந்திருக்கலாமென நினைத்தான்.

சுவாமியார் வழமையாக ஏதாவது சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றால் கோயில் வாசலுக்கு வந்து ஆசீர்வதிப்பார். பின் நிகழ்விடம்வரை ஊர்வலமாகச் செல்வார். ஆனால் அன்று சுவாமியார் அரச மரத்தின் கீழ் நிஷ்டையில் இருந்தார். அவர் எழுந்து வராதது சிவசுந்தரமூர்த்திக்குக் கோபத்தை வரவழைத்தது. அதனால் மேளவாத்தியக் கலைஞருக்குச் சொன்னார்; “யோகநாதன், சுவாமியாரிடம் போகத் தேவையில்லை. நேரே மண்டபத்திற்கப் போ”.

யோகநாதன் ஒருகணம் திகைத்தான். பின் நடக்கத் தொடங்கினான். அவன் நேரே அரசமரத்தடிக்குச் செல்ல மக்களும் அங்கு சென்றனர். சிவசுந்தரமூர்த்திக்கு அவனது செயலால் கோபம் வந்த போதும் அதைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார்.

ஜெயபாலன் சுவாமியாரது பாதங்களைத் தொட்டு வணங்கினான். சுவாமியார் கண் விழித்து முறுவலித்தார்; "சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்வாயாக! ஒருவனுக்கு நன்மை வேண்டுமானால் நாணம் உடையவனாக இருத்தல் வேண்டும்; பிறந்த குடிக்கு உயர்வு வேண்டுமானால் அனைவரிடமும் பணிவுடன் நடந்து கொள்ளல் வேண்டும்" என்றார்.

தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் கோயிலடிக்கு வந்திருந்தனர். ஊர் வலம் சென்ற பின் இருவரும் கோயிலடியில் சிறிது நேரம் நின்றனர். சிவசுந்தரமூர்த்தி சுவாமியாரிடம் ஆசி பெறாமலே செல்லுமாறு கூறியது தணிகாசலத்திற்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்தது.

"சிவசுந்தரமூர்த்தி இப்படி ஏன் நடந்து கொள்கிறான்"? என்று புரியவில்லை. ஜெயபாலன் தீயவனென்றாலும் நல்லவர்களுக்குப் பயந்தவன்; அவர்களை மதிப்பவன். ஆனால் சிவசுந்தரமூர்த்தியின் சொற்படிதான் ஜெயபாலன் நடந்து கொள்கிறான். சிறிய சிறிய செயல்களைக் கூட சிவசுந்தரமூர்த்தி மிகைப்படுத்தி ஜெயபாலனுக்குக் கூறுகிறான். அன்று குருக்களிடம் அவன் கதைத்த முறை பிழை. இன்று சுவாமியார் கோயிலடிக்கு வராமைக்கு ஏதாவது காரணம்

இருக்கும். அதை விட்டு விட்டு சுவாமியாரைக் குற்றம் காண முயல்வது எவ்வளவு தவறு. உலகப் பற்றுக்களை அறுத்தவர்கள் இறைவனைத் தவிர வேறு எவரையும் மதிக்க மாட்டார்கள் என்று சிவசுந்தரமூர்த்திக்கு ஏன் புரியவில்லை?'' என்று கேட்டார் வேலாயுதபிள்ளை.

''பிறரிடமுள்ள சிறிய தவறுகளை மிகைப்படுத்தி அவர்களைத் தீயவர்களெனக் காட்டுவதில் சிவசுந்தரமூர்த்தி வல்லவன். அத்துடன் தனது துர்க்குணங்களை நல்லவை என்று போற்றுவதற்காக வார்த்தை ஜாலங்கள் செய்வதிலும் அவன் வல்லவன். சுவாமியார் கூறியது போல, 'ஒருவனுக்கு நன்மை வேண்டுமானால் தீய செயல்கள் செய்யவும், கொடிய வார்த்தைகள் பேசவும் நாணப்படல் வேண்டும். தனது குடிக்கு உயர்வு வேண்டும் என்றும் நினைப்பவன் எல்லோரையும் மதித்து நடத்தல் வேண்டும்.' இல்லாவிட்டால் அவன் கெட்டவனாகவே கருதப்படுவான்'' என்றார் தணிகாசலம்.

''சொர்க்கமும் நரகமும் இவ்வுலகில் தான் உண்டு. அவற்றைச் செயல்கள்தான் உருவாக்குகின்றன. சிவசுந்தரமூர்த்தி தனது வாயால்தான் கெடுகிறான். அவன் பேசாமலிருந்திருந்தால் ஏராளமான மக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டிருப்பர். ஒருவனைத் தீயவனென்று ஒதுக்கக்கூடாதென்ற நல்ல எண்ணம் மக்கள் பலரிடம் உண்டு'' என்றார் வேலாயுதபிள்ளை.

**960.நலம்வேண்டின் நாண்உடைமை வேண்டும்; குலம்வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு.**

ஒருவன் நன்மையடைய வேண்டுமானால் நாணம் உடையவனாக இருத்தல் வேண்டும். தன் குடி உயரவேண்டுமானால் அனைவரிடமும் பணிவு உள்ளவனாக நடந்து கொள்ளல் வேண்டும்.

## செய்யக்கூடாதவை

ஜெயபாலன் தனது மனைவியின் தந்தையாரின் நினைவாக நாவலர் ஸ்ரீ விந்தியா மகா கணபதி முன்பள்ளிக்குச் சகல வசதிகளுமடங்கிய புதிய கட்டிட மொன்றைக் கட்டித்தருவதாகச் சொன்னான். அது அவனது மனைவி சிவசக்திக்கும் அவளது ஒன்பது சகோதரர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை. சகல வசதிகளும் அடங்கியதாக யாழ்ப்பாண மாவட்டத்திலேயே அப்படி ஒரு முன்பள்ளி இருக்கக் கூடாத முறையில் அம்முன்பள்ளியைக் கட்டிக் கொடுக்குமாறு ரகுவரன் அறிவித்திருந்தான். அதனால் மக்களில் பலர் மிகவும் மனம் மகிழ்ந்தனர்.

அம்முன்பள்ளியைக் கட்டுவதற்கு நிலம் தேவையாக இருந்தது. தற்பொழுது அம்முன்பள்ளி இருக்கும் காணி மிகவும் சிறியது. நூறு வருடங்களுக்கு முன்பு யாரோ ஒரு பிள்ளையில்லாத தம்பதிகள் அக்காணியைச் சிதம்பரத்திற்கு எழுதி விட்டனர். அதில் முருகையன் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து

வருகிறான். முன்பு இலங்கையில் உள்ள சிதம்பரத்திற்குரிய காணிகளுக்கு வரி வசூலிப்பதற்காக நடேசன் என்றொருவர் இருந்தார். அவர் அக்காணிகளுக்கான வரிகளை வசூலித்துச் சிதம்பரத்திற்கு அனுப்பி வந்தார். அவர் இறந்ததும் வரி வசூலிப்பவர்கள் யாருமில்லாததால் முருகையனது தந்தை நாவலர் ஸ்ரீ விந்தியா மகா கணபதி ஆலய நிர்வாக சபைக்கு அப்பணத்தைக் கொடுத்து வந்தார். அந்தப் பணத்தை முருகையனும் இன்றுவரை கொடுத்து வருகிறான். சிவசுந்தரமூர்த்தி அக்காணியைப் பற்றி நிர்வாக சபைக் கூட்டங்களில் அடிக்கடி பிரஸ்தாபிப்பார். முருகையனில் சிவசுந்தரமூர்த்திக்கு விருப்பமில்லை. அதனால் முன்பள்ளியைக் கட்டும் சாட்டாக முருகையனை அக்காணியில் இருந்து எழுப்ப விரும்பினார் சிவசுந்தரமூர்த்தி. அதற்கு ஊரவர் சிலரும் ஆதரவு தெரிவித்தனர். அக்காணிக்குள் முன்பள்ளியுடன் சேர்த்துப் பெரியதொரு கலாச்சார மண்டபத்தையும் கட்ட வேண்டும் என்று சிவசுந்தரமூர்த்தி விரும்பினார். அப்படிக் கட்டினால் இலக்கியப் பேரவையின் விழாக்கள் கருத்தரங்குகளை அங்கு நடத்தலாம். அத்துடன் கல்யாண மண்டபம் ஒன்று அவ்வூரில் இல்லை. அதனால் அம்மண்டபத்தைக் கல்யாண மண்டபமாகவும் பாவிக்கலாம். பண வசூலிப்புக்காக நாடகங்கள் நடத்தலாம், நடன அரங்கேற்றங்கள். கலை விழாக்கள் நடத்தலாம் என்று தீர்மானித்தார் சிவசுந்தரமூர்த்தி.

அன்று அது சம்பந்தமாக ஒரு கூட்டம் கூடப்பட்டது. அதற்கு வழமை போல விக்னேஸ்வரமூர்த்தி தலைமை தாங்கினார். சிவசுந்தரமூர்த்தி எழுந்து தனது கருத்துக்களைச்

சொன்னார். சபையினரும் முருகையன் குடியிருக்கம் காணியில் கலாச்சார மண்டபத்தைக் கட்டலாமென்றனர்.

விக்னேஸ்வரமூர்த்தி எழுந்து தனது கருத்தைச் சொன்னார்; ‘‘முருகையன் இருக்கின்ற காணி சிதம்பரக் கோயிலுக்குச் சொந்தமானது. கணபதி நாதன் என்பவர் தனக்குப் பிள்ளைகளில்லாமையால் அக்காணியை சிதம்பரக்கோயிலுக்கு எழுதிவிட்டார். அதற்கான வரிப்பணத்தை அவர் நடேசன் என்பவருக்குக் கொடுத்து வந்துள்ளார். அவர் இறந்ததும் அக்காணி கோயிற்காணி என்பதால் அதற்குரிய வரிப்பணத்தைக் கொடுக்காது விட்டால் தனது குடும்பத்திற்குக் கேடுவரும் எனப் பயந்து முருகையனின் தகப்பனார் எமது கோயிலுக்கு அப்பணத்தைக் கொடுத்து வந்தார். அவர் இறந்த பின் முருகையன் அப்பணத்தைக் கொடுத்து வருகிறார். முருகையனுக்கு ஐந்து பிள்ளைகள். அதில் இருவர் முருகையனது வீட்டுக்கு அருகில் சிறிய வீடு இரண்டு கட்டி வாழ்கிறார்கள். அவர்களுக்கு வேறு இடங்களில் காணி இல்லை. வேறு இடங்களில் காணி வாங்கும் வசதியும் அவர்களுக்கு இல்லை. அத்துடன் சட்டப்படியோ அல்லது சம்பிரதாயப்படியோ எவருக்கும் அவர்களை வீட்டை விட்டு எழும்பு என்று சொல்ல அதிகாரமில்லை. அதனால் அந்தக் காணிக்குள் கலாச்சார மண்டபத்தைக் கட்ட முடியாது’’ என்றார்.

சபையில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. சிவசுந்தரமூர்த்தி கோபத்துடன் எழுந்தார்; ‘‘அது

கோயில் காணி. அதில் உரிமை பாராட்ட முருகையனுக்கு உரிமை இல்லை...''

''ஒத்துக் கொள்வோம். நூறு வருடங்களாகக் குடியிருப்பவனுக்கு உரிமையில்லை யென்றால் வேறு யாருக்கு எப்படி உரிமை வரும்?'' என்றார் தணிகாசலம்.

''நீங்கள் எல்லோரும் ஜெயபாலனின் மீதுள்ள வெறுப்பால்தான் இதைச் சொல்கிறீர்களே தவிர முருகையனின் மீதுள்ள பற்றால் அல்ல'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''இன்றியமையாத பல சிறப்புக்கள் வருவதாக இருந்தாலும் கூட, குடிப்பெருமையைக் கெடுக்கக் கூடிய தீய செயல்களை மனிதர்கள் செய்யக் கூடாது. பல குடும்பத்தினரை நடுவீதியில் விட்டு விட்டா மண்டபம் கட்டுவது?'' என்று கேட்டார் விக்னேஸ்வரமூர்த்தி.

---

**961. இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்**
**குன்ற வருப விடல்.**

---

இன்றியமையாத பல சிறப்புக்கள் வருவதாக இருந்தாலும் கூட, குடிப்பெருமையைக் கெடுக்கக் கூடிய செயலை ஒரு போதும் செய்யக் கூடாது.

## பேராண்மையுடையோர்

முருகையன் விக்னேஸ்வரமூர்த்தியின் வீட்டுக்கு வந்து அவரது கால்களைப் பற்றிப்

பிடித்துக் கொண்டு அழுதான்; “ஐயா, நீங்கள் பெரியவர்; நீதியானவர்; உயிர்களிடத்தில் பேரன்புமிக்கவர். உங்களிடம் தான் எனது பிள்ளைகள் கற்றனர். சிவசுந்தரமூர்த்தியும் ஊரவர் சிலரும் சேர்ந்து பலமுறை எனது வீட்டுக்கு வந்து மிரட்டினார்கள். இரவில் கற்களால் எனது வீட்டுக்கு எறிந்தனர். கடந்த ஒரு மாதகாலமாக நான் படும் கஷ்டம் வேறு யாரும் பட்டதில்லை. அதனால் அந்தக் காணியை விட்டு எழும்பிப் போவோமா என்று கூட நினைத்தேன். அப்பொழுது எனது மூத்தமகன் சொன்னான்; “அப்பா, உங்களுக்க அதிபரைப் பற்றித் தெரியாது. அவர் தனது உயிர் போனாலும் நீதி தவற மாட்டார். அவர் ஒருபோதும் எம்மை இக்காணியில் இருந்து எழுப்பச் சம்மதிக்க மாட்டார். நீங்கள் கவலைப்படாதைங்கோ” என்றவன். ஐயா, இந்த ஊரில் வாழும் ஈ எறும்புக்குக் கூட உங்களைப் பற்றித் தெரியும். ஏன் சில கெட்டவர்களுக்கு உங்களைப் பற்றித் தெரிவதில்லை” என்று விம்மினான் முருகையன்.

அப்போது தணிகாசலம் அங்கே வந்தார்; “என்ன முருகையா…? பல நாட்களாக அதிபரைத் தேடினனீ. இன்றைக்கா சந்திக்க முடிந்தது” என்று கேட்டார் தணிகாசலம்.

“நீங்கள் அதிபரைப் பற்றிச் சொன்னனீங்கள் தான். ஆனால் நான் நம்பவில்லை. கோயில் காணி, பொதுவேலை செய்யத்தானே கேட்கப் போகிறார்கள். நான் எப்படி மறுக்க முடியும்? என்று நினைத்தேன். நீங்கள் சொன்னது போல; “பெரும் சிறப்பினையும் பேராண்மையையும் விரும்புபவர்கள் புகழ்தேடுவதற்காகக் கூடத் தமது குடிப்

பெருமைக்கு இழுக்கு வரக்கூடிய செயல்கள் எதையும் செய்ய மாட்டார்கள்'' அது உண்மை என்பதை புரிந்து கொண்டேன். இப்போது மனிதர்கள் சந்ர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப வாழ்ந்து வருகிறார்கள்; விழுந்த பாட்டிற்குக் குறி சுடுகிறார்கள்; மனிதத் தன்மை என்பதே இல்லாமல் வாழ்கிறார்கள். இந்தக் கிராமத்தையும் மக்களையும் மகா கணபதி காப்பது போல நீதியையும் நேர்மையையும் நீங்களும் உங்கள் நண்பர்களும் பாதுகாத்து வருகிறீர்கள். உங்களது குடும்பம் தழைக்கும். நீங்கள் வீட்டை விட்டு எழும்பச் சொல்லியிருந்தால், நான் வீதியில் நிற்கும் மரத்திற்குக் கீழே தான் இருக்க வேண்டும். பதின்மூன்று சீவன்கள்கஷ்டப்பட்டிருக்கும்'' அழுதான் முருகையன்.

‘‘காரணமில்லாது கலங்கக் கூடாது. மனிதன் உரிமையுடன் வாழ வேண்டுமானால் அவன் பணம் தேட வேண்டும். நீ உழைப்பதையெல்லாம் குடிப்பதனால் தான் கஷ்டப்படுகிறாய். உழைப்பதில் கொஞ்சத்தையாவது சேமி'' என்றார் தணிகாசலம்.

‘‘சுவாமியாரும் அப்படித்தான் சொல்கிறார். சிறுவயதில் இக்கொடிய பழக்கத்தைப் பழகி விட்டேன். அதை நிறுத்த முடியவில்லை. என்னைக் காணியால் எழுப்பப் போகிறார்கள் என்று சுவாமியாரிடம் அழுதழுது கூற அவர் சொன்னார்; ‘‘முருகையன் என்று மிகவும் அருமையான பெயர் ஒன்றை உனக்கு உனது தந்தை சூட்டியுள்ளார். தமிழ்த் தெய்வமான முருகனின் நாமத்தை உடைய நீ குடிக்கிறாய். முதலில் அதைக் கைவிடு, நீ மனிதனாவாய். இந்த உலகம் மனிதர்களுக்குரியதே

தவிர கள்ளருந்தும் பேய்களுக்குரியதல்ல. சாத்வீகமான உணவுகளை ஒருவன் உண்டால் அவனும் சாதுவான பசுப்போலவே வாழ்வான். போதை தரும் பானங்களைக் குடித்தால் போதையுற்று உலகில் நடப்பவை புரியாதவனாகவே அவன் வாழ்வான். அவன் ஒருபோதும் நிம்மதியடைய மாட்டான். மனக் குழப்பத்துடனும் துயரத்துடனுமே எந்நாளும் வாழ்வான். அவனிடம் மிருக இயல்பே அதிகரித்துக் காணப்படும். அதனால் நீ மனிதனாக வாழ விரும்பினால் மனிதனை மிருகமாக மாற்றும் கள்ளைக் குடிக்காதே. அதைக் குடிப்பதால் தான் உன்னால் பொருளைத் தேட முடியாதிருக்கிறது. பிறர் உன்னை அடக்க நினைக்கின்றனர்.'' என்றார். உண்மைதான் ஐயா நூறு ரூபா உழைத்தால் அம்பது ரூபாவுக்குக் குடித்து விடுகிறேன். இதைச் சேமித்திருந்தால் நான் பெரும் பணக்காரனாகி யிருப்பேன்'' என்றான் முருகையன்.

``இதையெல்லாம தெரிந்த நீ ஏன் குடிக்கிறாய்? இவ்வளவு காலமும் குடித்து அழித்தாய். எஞ்சியுள்ள காலத்தையாவது நல்ல முறையில் வாழப்பார்'' என்றார் தணிகாசலம்.

``சரி ஐயா'' என்று கூறிய முருகையன் அவர்களிடமிருந்து விடை பெற்றுச் சென்றான்.

``விக்னேஸ்வரமூர்த்தி ஐயா இல்லாவிட்டால் என்னைக் கொன்று விட்டுக் காணியைக் கைப்பற்றி இருப்பார்கள்'' என்று நினைத்தான் முருகையன்.

**962. சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு**
**பேராண்மை வேண்டு பவர்.**

புகழோடு கூடிய ஆண்மையை விரும்புகின்றவர்கள், புகழ்தேடும் வழியிலும் குடிப்பெருமையைக் கெடுக்கக் கூடிய செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

## பணிவும் தன்மானமும்

சனசமூக நிலையத்தின் முன்னால் நின்ற வாகை மரத்தின் கீழ் அமர்ந்திருந்தான் முருகையன். பலநாட்களாக இல்லாதிருந்த நிம்மதியும் மனமகிழ்வும் இப்போது அவனின் மனதில் இருந்தது. விக்னேஸ்வரமூர்த்தியும் தணிகாசலமும் அவனது காணியைக் கலாச்சார மண்டபம் கட்டுவதற்கு எடுக்க முடியாது என்று கூறியபின் அக்காணி கடைசிவரையும் தன்னிடமிருந்து போகாது என்று நினைத்தான். அவர்கள் இருவரையும் அவன் தெய்வமாக மதித்தான். அதனால் அவன் கள்ளைக் குடியாது விட்டு விட்டான். இப்போது அவனிடம் பணம் இருந்தது. அவனது மனைவி யோகேஸ்வரி இப்போது கடைகளில் பொருட்களைக் கடனுக்கு வாங்குவதில்லை. அத்துடன் அயல்வீட்டாரிடமும் பொருட்களைக் கடனாகப் பெறுவதில்லை. அதை நினைக்க அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. முன்பே குடிக்காமல் விட்டிருந்தால் எப்படியெல்லாம் வாழ்ந்திருக்கலாம் என்று நினைத்துப் பார்த்தான்.

அப்போது அங்கே சிவசுந்தரமூர்த்தியும் தனபாலனும் வந்தனர். சனசமூக நிலையத்திற்கு அருகே வாகை மர நிழலில் இருந்த

முருகையனைக் கண்டதும் தனபாலன்; ‘‘டேய் முருகையா இங்கே வாடா’’ என்றான்.

தனபாலன் அப்படி அழைத்தது முருகையனுக்குப் பிடிக்கவில்லை. எனினும் எழுந்து அவர்களுக்குக் அருகில் வந்தான்; ‘‘விக்னேஸ்வரமூர்த்தியையும் தணிகாசலத்தையும் வளைத்துக் கைக்குள்ப் போட்டாப் போல காணி உனக்கு வந்திடுமென்று கனவு காணாதை. என்னிடம் காசிருக்கு. நீதிமன்றம் வரை போவேன்’’ என்றார் சிவசுந்தரமூர்த்தி.

‘‘யார் போக வேண்டாம் என்றது? நான் போகவேண்டாமென்று கூறவில்லையே’’ என்றான் முருகையன்.

அவன் அப்படிக் கூறுவான் என்று எதிர்பாராத சிவசுந்தரமூர்த்தி சற்றுத் திகைத்து விட்டார். எனினும் அதைக் காட்டிக் கொள்ளாது சொன்னார்; ‘‘அது கோயிற் சொத்து. மனநீதியின்படி பார்த்தால் நீ அதைவிடத்தானே வேண்டும். நாங்களென்ன வீடு கட்டவே கேட்கிறம். பொது மண்டபம் கட்டினால் நல்லது; ஊருக்கும் சிறப்பு. வேண்டுமானால் ஜெயபாலனிடம் சொல்லிக் கொஞ்சக் காசு வாங்கித் தாறன்.’’ என்றார் சிவசுந்தரமூர்த்தி.

‘‘நடக்காத விஷயத்தைப் பற்றி நான் உங்களுடன் கதைக்க விரும்பவில்லை. இது கோயில் காணிதான். நாங்கள் பரம்பரை பரம்பரையாகக் குடியிருக்கிறம். உங்கை ஊரிலை எத்தனையோ சிதம்பர சொத்துக் காணிகள்

இருக்கு. பள்ளிக் கூடத்திற்கென்று எழுதப்பட்ட காணிகள் இருக்கு. அவையெல்லாவற்றையும் பணக்காரர்களும், வசதியான வர்களும், உத்தியோகக்காரரும் பிடித்துக் கள்ள உறுதிகள் முடித்து வைச்சிருக்கினை. நாவலர் பள்ளிக் கூடக் காணி முப்பது நாற்பது பரப்பை யார் பிடித்து வைத்திருக்கினை என்று உங்களுக்குத் தெரியும். அதுகளெல்லாம் படிச்ச பணக்காரரான உங்களின் கண்களுக்குத் தெரியவில்லை. குடியிருக்கக் காணியில்லாத போதும் கள்ள உறுதி முடிக்காத காணிதான் உங்களுடைய கண்களுக்குத் தெரிந்ததோ…?'' என்று கேட்டான் முருகையன்.

தனபாலனுக்குக் கோபம் வந்து விட்டது; ‘‘நீ ஆற்ரை ஏவலிலை ஆடுகிறாய் என்று எமக்குத் தெரியும்'' என்று தனபாலன் சொல்லச் சிவசுந்தர மூர்த்தி சொன்னார்; ‘‘நாலு பேரை ஏவிவிட்டால் இவனைக் கலைச்சுப் போடுவங்கள். நான் சமாதானமாகச் செய்யலாமென்று பார்க்கிறேன்'' என்றார்.

‘‘ஐயா, நான்கு பெரிய மனிதருடைய உதவி எனக்கு இருக்கு. அவை உத்தமமானவை; சொன்ன சொல்ல மாறாதவை. அவையிருக்கும் போது நான் எதற்கும் பயப்படமாட்டன். பணக்காரனாகவும் படித்தவனாகவும் இருப்பவன் செல்வம் பெருகிவரும் போது பண்புடையவனாக இருப்பான்; அன்புள்ளம் கொண்டவனாகவும் இருப்பான் என்று பெரியவை சொல்லுவினை. நீ படித்தனியா…? பணக்காரனா…? உன்ரை கல்வியாலும் பணத்தாலும் யாருக்கு என்ன இலாபம்? நான் ஏழைதான். எனினும் மற்றவர்களுக்குப் பணியாத தன்மானம் மிக்கவன்.

அதனால் நீ எதைச் செய்தாலும் அதை எதிர்கிற வலு என்னிடம் இருக்கு'' என்றான் முருகையன்.

"என்னடா சொல்கிறாய்?'' என்று கோபமாகக் கேட்டபடி தனபாலன் முருகையனுக்கு அடிக்கச் சென்றான்.

சனசமூக நிலையத்துள் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த தனபாலசிங்கம் வெளியே வந்து சொன்னார்; "உனக்குப் படித்தும் புத்தி இல்லையா…? ஏன் அவனுடன் சண்டைக்குப் போகிறாய். படித்த நீ பாமர மக்களைப் போலத் தெருவில் நின்று சண்டை பிடிக்கலாமா…? அவன் சொன்னது போல நீ பணக்காரன்; பணம் பெருகப் பெருக பணிவு வேண்டும்; பணம் சுருங்கிப் போகும் போது பிறரிடம் கை ஏந்தாது தலை நிமிர்ந்து நடக்கும் தன்மானம் வேண்டும். முருகையன் தன் மானம் மிக்கவன். நீ பண்புள்ளவனா என்று எண்ணிப்பார்'' என்றார் தனபாலசிங்கம்.

---

**963. பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு.**

---

செல்வம் பெருகியுள்ள காலத்தில் ஒருவனுக்குப் பணிவு வேண்டும். செல்வம் குறைந்து வறுமையுற்ற காலத்தில் தலை நிமிர்ந்து நடக்கும் தன்மானம் மிக்க உயர்வு வேண்டும்.

## மயிருக்குச் சமம்

"இவனுக்கு யாராவது புத்திமதி சொல்ல முடியுமே? முன்பு ஜெயபாலனோடு சேர்ந்து அடாவடித்தனங்களிலும் தீய செயல்களிலும் ஈடுபட்டு விட்டுப் பங்கு பிரிக்கும் போது சண்டை பிடித்தவர்கள். இப்போ அதையெல்லாம் மறந்து சிநேகிதமாகி விட்டார்கள். சிநேகிதமானால் எனக்கென்ன நான் உழைத்துச் சாப்பிர்றன். யாருடனாவது இதுவரை பிரச்சினைக்குப் போனனானே?. குடித்துவிட்டு அடாவடித்தனங்களில் ஈடுபட்டடேனா? இல்லைக் களவெடுத்தேனா? விக்னேஸ்வரமூர்த்தி ஐயா, இல்லை நீங்கள் அல்லது வேலாயுதபிள்ளை அண்ணை இல்லைத் தணிகாசலமண்ணை வந்து; "முருகையா கோயில் காணியை விட்டு விட்டுப்போ. நாங்கள் மண்டபம் கட்டப் போறம் என்று சொல்லட்டும் நான் குடிசைகளைப் பிடுங்கிக் கொண்டு போய் எங்கையாவது கட்டுவன். அவர்கள் சொல்ல மாட்டார்கள். உயர்ந்த ஒழுக்கத்தில் இருந்து அவர்கள் அணுவளவும் பிசகமாட்டார்கள். ஒழுக்க நெறியில் இருந்து தாழ்ந்தவர்கள் தலையில் இருந்து உதிர்ந்த மயிரை விடத் தாழ்ந்தவர்கள். நீங்கள் எல்லோரும்ஏன் வேட்டி கட்டிக் கொண்டு திரிகிறீர்கள்?" என்று கேட்டான் முருகையன்.

சிவசுந்தரமூர்த்தி எதுவும் பேசவில்லை. பேசினால் தான் செய்த அடாவடித் தனங்கள் எல்லாம் வெளிப்பட்டு விடும் எனப் பேசாமல் இருந்தார். தனபாலன்தான் கத்தினான்; "குடியிருக்க நிலமில்லை. வீட்டுள் இருந்து பார்த்தால் ஆகாயம்

தெரியும். ஒழுங்கான உடுப்பில்லை. கதை மட்டும் பிரபுக்கள் மாதிரி.''

''உண்மைதான். நீ சொல்லதெல்லாம் உண்மை. நான் மறுக்கவில்லை. ஆனால் நான் திருடவில்லை; ஒழுக்கக் கேடாக நடக்கவில்லை; கோயில் குரங்குகளைப் பிடித்து வெட்டிப் பங்கு போட்டு விற்கவில்லை; ஒழுக்கமாக வாழுறன். சாப்பாட்டுக்கு வழியில்லை; குடிக்கக் காசு இல்லை என்று நான் களவெடுக்க மாட்டன். களவெடுத்திருந்தான் நான் மாளிகை கட்டியிருப்பன்.'' என்றான் முருகையன்.

''தனபாலு கதைக்காதை. கதைத்தாயானால் மானம் போய்விடும். சனம் சண்டையைப் பார்க்கக் கூடுது வா போவம்.'' என்ற சிவசுந்தரமூர்த்தி தனபாலனது பதிலை எதிர்பாராது நடக்கத் தொடங்கினார்.

''நீ நல்ல படியாகக் கதைத்தாய். சிவசுந்தரமூர்த்திக்குத்தான் கற்றவன் என்ற திமிர். யாராவது குடித்து விட்டுச் சொன்னால் அது குடிகாரனின் பேச்சென மக்கள் கணக்கில் எடுக்க மாட்டார்கள். நீ நிதானமாக இருந்து கதைத்தால் இனிச் சிவசுந்தரமூர்தி கதைக்க மாட்டான்'' என்றார் தனபாலசிங்கம்.

''இவங்களுக்கு நாணமில்லை அண்ணை. தீய செயல்களைச் செய்யவும் தீய வார்த்தைகளைப் பேசவும் ஒருவன் விரும்பக் கூடாது. நல்லவர்கள் ஒரு போதும் தீயவார்த்தைகளைப் பேசமாட்டார்கள். தீயவர்கள்

நல்ல வார்த்தைகளைப் பேச மாட்டார்கள். இவர்கள் வெட்கமில்லாதவர்கள். தீமை செய்து விட்டு பின் வலிய வந்து கதைப்பார்கள். சிவசுந்தரமூர்த்தி, தனது மகளுக்குத் திருமணம் எப்படிச் செய்தவன் என்று உங்களுக்குத் தெரியும் தானே…? அவனொருவன் வெளிநாட்டுக்குச் செல்லத் தனது காணியை ஈடுவைத்தவன். அந்தக் காணியின் பெறுமதியிலும் பார்க்கக் கூடுதலாக வட்டிக் காசு வாங்கியவன். பின் மகளுக்கு முப்பத்தைந்து வயது வந்தும் திருமணமாகவில்லை. விக்னேஸ்வர மூர்த்தி ஐயாவுடையை காலைப் பிடித்துக் கெஞ்சி காணி ஈடுவைத்த வனுக்கே தனது மகளைத் திருமணம் செய்து கொடுத்தவன். இப்ப விக்னேஸ்வரமூர்த்தி ஐயாவைத் தூற்றிக் கொண்டு திரிகிறான். அவர் உதவி செய்யாவிட்டால் இவனது மகள் இப்பவும் கன்னியாகத்தான் இருப்பாள். அப்படியான நன்றியில்லாத இவன் ரோசமுள்ளவனாக வாழ்வான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா…? அதைவிட நல்ல உத்தியோகத்திலை இருக்கிறான். அப்படி இருந்தும் இலஞ்சம் வாங்கி அம்பிட்டவன். இவனைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருக்கலாம்'' என்றான் முருகையன்.

``முருகையா, மற்றவர்கள் தீய செயல்களைச் செய்தாலும் அதைப் பலர் கூடியுள்ள இடத்தில் முகத்திற்கு நேரே சொல்லக்கூடாது'' என்றான் சனசமூக நிலையத்தில் நின்ற ஒருவன்.

``நான் அப்படிச் சொல்லாவிட்டால், அவர்கள் இருவரும் இன்னும் பலவற்றைச் சொல்லியிருப்பார்கள். நாம் இல்லாதவற்றைச் சொல்லத்தான் பயப்படல் வேண்டும். நான் சொன்ன

விஷயம் யாவும் ஊர் மக்கள் அனைவருக்கும் தெரியும். இருந்த போதும் தான் செய்வது யாவும் சரி என்ற எண்ணததிலேயே சிவசுந்தரமூர்த்தி கதைத்தார். தான் செய்யும் தீய செயல்களை நல்ல செயல்கள் என்று மக்களுக்குக் காட்ட முயற்சிக்கிறார். அதை அனுமதிக்கக் கூடாது. அனுமதித்தால் மேலும் மேலும் தீமைகளையே செய்வார்'' என்றான் முருகையன்.

---

**964. தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்**
**நிலையின் இழிந்தக் கடை.**

---

உயர்ந்த ஒழுக்க நிலையில் இருந்து தாழ்ந்தவர்கள், தலையில் இருந்து விழுந்த மயிருக்குச் சமமானவர்கள்.

**குன்றிமணியளவு**

``தீயவர்கள் தீய செயல்களைச் செய்தால் அதையாரும் கணக்கில் எடுத்துக் கொள்ளமாட்டார்கள். அது அவர்களின் இயல்பான குணம். அதனால் அவர்களைத் திருத்த முடியாது என்று தான் சொல்வார்கள். ஆனால் மலைபோல உயர்ந்த நிலையில் உள்ள ஒருவர், தாழ்வுக்குக் காரணமான இழிந்த செயலொன்றைச் சிறிதான குன்றிமணி அளவு செய்தாலும் அவர் தாழ்ந்து போவார். வேலாயுதபிள்ளை மிகவும் நல்லவர்; உயர்ந்த பண்புகளை உடையவர்; எனது ஆத்ம நண்பர். இருந்த போதும் குடிகாரனான தனபாலனுக்கு அடித்தமையால் நல்லவர்களிடையே தாழ்ந்து போனார். அதே போல தணிகாசலம்; ``வேலாயுதபிள்ளை அடித்தது சரி'' என்று

சொன்னதாலும் அவர் தாழ்ந்து போனார். முதலில் நாம் எல்லோரையும் மதிக்கப்பழக வேண்டும். பழிவாங்கும் உணர்ச்சி எப்போதும் எந்தக் காரியத்தையும் சாதிப்பதில்லை. அது பகையை வளர்க்கத் தான் உதவும்'' என்றார் தனபாலசிங்கம்.

முருகையன் எதுவும் பேசவில்லை. பேசாமல் இருந்தான். அவன் நல்லவர்களை மதிப்பவன். மனதுள் வார்த்தைகள் அலையலையாகப் பிரசவித்த போதும் அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

``வட்டிக்கடை நடத்தும் மயில்வாகனத்திடம் தணிகாசலம் அடிக்கடி பணம் கடனாகப் பெறுவார். முன்பு தணிகாசலத்திடம்தான் வாங்கும் பணத்திற்குப் பொறுப்பாகக் கொடுக்கத் தங்க ஆபரணங்கள் எதுவும் இல்லாமையால், அவனிடம் பொறுப்பின்றியே பணத்தைப் பெறுவார். அப்படிப் பெறுவதானால் வட்டிப் பணம் கூடுதலாகக் கொடுத்தல் வேண்டும். அப்படிக்கூடிய வட்டிக்குத் தணிகாசலம் மயில்வாகனத்திடம் பணம் பெற்று வந்தார். ஒருமுறை அவர் இரண்டாயிரம் ரூபா பெற்றார். ஆறு மாதங்களின் பின் அவர் அப்பணத்தை வட்டியுடன் கொடுத்து விட்டார். தணிகாசலம் பணத்திற்கு அதிக வட்டி கட்டுகிறார் என்ற காரணத்தினால் வேலாயுதபிள்ளை தான் பணம் கொடுத்து மயில் வாகனத்தின் பணத்தைக் கட்டச் சொன்னார். காசுகட்டி ஆறு மாதங்களின் பின் மயில் வாகனம் தணிகாசலத்தின் வீடு தேடி வந்து அந்தக் காசைக் கேட்டான். தணிகாசலம் எதுவும் பேசவில்லை. தான் தந்து விட்டேன் என்று கூடச் சொல்லவில்லை. ``ஓரிரு நாட்களில் அந்தக்

காசைத் தருகிறேன்'' என்று கூறிவிட்டார். வேலாயுதபிள்ளை தணிகாசலத்தை ஏசினார்; ''உன்னை இலகுவாக ஏமாற்றலாம் என்று தெரிந்ததுதான் மயில்வாகனம் ஏமாற்றியிருக்கிறான். என்னிடஞ் சொல்லியிருந்தால் நான் அவனுக்குச் சொல்லியிருப்பேன்'' என்றார். நானும் ஏசினேன். அதற்குத் தணிகாசலம் சொன்னார்; ''நான் பொறுப்பில்லாமல் நம்பிக்கைக்குத் தான் பணம் வாங்கினேன். பொறுப்பாக ஏதாவது தங்க நகை கொடுத்திருந்தால் அவன் கேட்கமாட்டான். ஒரு அப்பியாசக் கொப்பியில் நான் வாங்கும் பணத்திற்குப் பொறுப்பாக என்னிடம் கையெழுத்து வாங்குவான். நான் பணத்தையும் வட்டியையும் கொடுத்து விட்டு வந்து விடுவேன். ஒருநாளுமில்லாதவாறு இம்முறை வந்து கேட்டு விட்டான். நான் தந்து விட்டேன் என்று சொன்னால் அவன் கடைசி வரையும் நம்பமாட்டான். பலமுறை தான் வாங்கவில்லையென்று சத்தியஞ் செய்வான். மக்களும் அவன் கூறுவதை நம்பிவிடுவர். இவ்வளவு காலமும் ஒழுக்கமாக வாழ்ந்து விட்டு இப்போது குற்றங் கேட்க நான் விரும்பவில்லை. ஒருவன் எம்மீது காரமின்றிக் குற்றம் சுமத்தினால்அதை நான் மறுத்தால் நான்தான் குற்றவாளியாவேன். அதனால் தான் நான் அந்தக் காசைக் கொடுத்தேன்'' என்று சொன்ன தணிகாசலம் எப்படித் தனபாலனுக்கு வேலாயுத பிள்ளை அடித்ததைச் சரியென்று ஏற்றுக்கொண்டது என்று இன்றும் எனக்குப் புரியவில்லை'' என்றார் தனபாலசிங்கம்.

''உண்மைதான், விக்னேஸ்வரமூர்த்தி ஐயா, வேலாயுதபிள்ளை செய்தது பிழையென்று கூறியமையால் குன்றிமணியளவு கூடத் தவறு

செய்யவில்லை. உயர்ந்தவர்கள் எப்போதும் உயர்ந்தவர்கள்தான்'' என்றான் முருகையன்.

``செய்ய வேண்டிய வேலைகள் எத்தனையோ இருக்கிறது. ஆனால் அவற்றையெல்லாம் விட்டுவிட்டுத் தேவையில்லாத பிரச்சினைகளைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு திரிபவர்கள்தான் அதிகமானவர்கள். அப்படியானவர்கள் இருக்கும் வரைக்கும் எமது சமுதாயம் ஒருபோதும் முன்னேற மாட்டாது'' என்றார் தனபாலசிங்கம்.

அப்போது அங்கே வந்த தணிகாசலம் சொன்னார்; ``சிவசுந்தரமூர்த்தியும் தனபாலனும் கோயிலடியில் ஏதோ பேசிக் கொண்டு நிற்கிறார்கள். முருகையாவின் பெயரைத் தான் அடிக்கடி சொல்கிறார்கள். இங்கு என்ன நடந்தது?''

தனபாலசிங்கம் சிரித்தார். பின்; ``முருகையாவுடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டு போனார்கள்'' என்றார்.

**965. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ**
**குன்றி அனைய செயின்.**

மலை போன்ற உயர்ந்த பெருமை உடையவரும், இழிவான செயலை ஒரு குன்றி மணியளவு செய்தாலும் மிகத் தாழ்ந்த நிலையை அடைவர்.

## புகழும் சிறப்பும் இல்லை

வசந்தினி கெங்காதரனின் வியாபார நிலையத்திற்கு வந்தாள். அவள் அங்கு வந்தபோது கெங்காதரன் அங்கு இருந்தான். அவன் மிகவும் மகிழ்ச்சியுடனும் பூரிப்புடனும் இருந்தான். அவன் சற்றுப் பருத்திருந்தான். அவனைப் பார்க்க அவளுக்கு முன்னைய மோகம் பிறந்தது.

வசந்தினியைக் கண்டதும் கெங்காதரன் அதிர்ந்து போனான். அவள் தன்னை விட்டு விலகி விட்டாள் என்று நினைத்திருந்த அவன் அவளைக் கண்டதும் செய்வதறியாது திகைத்துப் போனான்.

‘‘எனது தம்பிக்கு அடுத்த மாதம் திருமணம் நடைபெறவுள்ளது. அதற்குச் சில பொருட்கள் தேவையாயக உள்ளது. அதைக் கடனாகத் தந்துதவுங்கள். இரண்டு மூன்று மாதத்துள் கடனை அடைத்து விடுகிறேன்’’ என்றாள் வசந்தினி.

‘‘எனக்கும் இந்த நிறுவனத்திற்கும் எந்த விதமான பொறுப்பும் இல்லை. நான் இங்கு சம்பளத்திற்கு வேலை செய்கிறேன்’’ என்று கூறிவிட்டு எழுந்து உள்ளே சென்று விட்டான் கெங்காதரன்.

அவன் சென்று அரைமணித்தியாலத்தின் பின்பும் அவன் வருவானெனக் காத்திருந்தாள் வசந்தினி. அவன் முன்கோபக்காரனென்றாலும் தன்னை மறக்க மாட்டான் என்று அவளுக்குத் தெரியும். அதனால் அவன் வருவானென காத்திருந்தாள்.

இரத்தினம் வந்து சொன்னான்; ‘‘கெங்காதரன் ஐயா வீட்டுக்குச் சென்று விட்டார். இனி வரமாட்டார். நீங்கள் இங்கிருப்பதில் எந்தவிதமான பயனும் இல்லை’’

வசந்தினிக்கு அது அதிர்ச்சியைக் கொடுத்தது. எனினும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாது; ‘‘தயவு செய்து உதவி செய்யச் சொல்லுங்கள்’’ என்று சொல்லி விட்டுப் புறப்பட்டாள். அவள் சொன்னதை இரத்தினம் வந்து கெங்காதரனுக்குச் சொன்ன போது அவனது மனம் சற்று தழம்பியது. யசோதினியிடம் காணாத பல விஷயங்களை அவன் அவளிடம் கண்டு அனுபவித்திருக்கிறான். அதனால் அவனது மனம் சலனமடையத் தொடங்கியது.

கெங்காதரனால் அதற்கு மேல் அங்கே இருக்க முடியவில்லை. அதனால் அவன் புறப்பட்டு நவராசாவின் வீட்டுக்கு வந்தான். அவன் வந்த போது நவராசா தனது வீட்டில் இருந்தான். கெங்காதரன் வசந்தினி வந்ததைச் சொல்லி, அவள் கூறியவற்றையும் சொன்னான்.

‘‘அவளால் பட்ட துன்பங்களை நினைத்துப் பார். நீ திருமணஞ் செய்த போது குடிப்பதில்லை. வசந்தினியோடு உறவு கொண்ட பின்பு தான் குடிக்கப் பழகினாய். அத்துடன் அவளால் உனக்கு பொருள் இழப்பு ஏற்பட்டது. பின் உன்னை அவள் அவமதித்து வீட்டை விட்டுக் கலைத்தாள். அப்படியானவளின் பின் இனியும் செல்லப் போகிறாயா…? நீ திருந்த மாட்டாய். உன்னால்

தனக்கு இனிப் பிரயோசனமில்லை. பிரச்சினைகள் தான் வருமென்று நினைத்து உன்னை மதியாமல் நடந்து கொண்டாள். அதனால் மனப்பாதிப்படைந்த நீ பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமானதல்ல. நீயும் கஷ்டப்பட்டுக் குடும்பத்தினரையும் கஷ்டப்படுத்தினாய். உனது மனைவியும் பெற்றோரும் எவ்வளவு கஷ்டப்பட்டனர். உனது பெற்றோர் பட்ட கஷ்டங்கள் கணக்கில் அடங்காதவை. அப்படி இருக்க மீண்டும் நீ அவளின் மீது இரக்கப்படுவதால் மீண்டும் நீயும் உனது குடும்பத்தவர்களும் கஷ்டப்படப் போகிறார்கள். கிடைக்கக் கூடிய பொருளின் அளவுக்கேற்ப இனிய சொற்களைப் பேசும் வசந்தினியின் உறவை நினைத்துக் கூடப் பாராதே'' என்றான் நவராசா.

``நான் அவளின் வீட்டுக்குச் செல்லவில்லை. அவள் கேட்ட பொருட்களைக் கொடுத்தாலென்ன?'' என்று கேட்டான் கெங்காதரன்.

``மதியாது இகழ்பவரின் பின் சென்று அவர்களுக்கு உதவி செய்து வாழ்கின்ற வருக்குப் புகழும் கிடைக்காது, சிறப்பும் கிடைக்காது. உன்னிடம் பசை இல்லாததால் உன்னை நாயைப் போல விரட்டியதை நினைத்துப் பார். இப்போ நீ அவளுக்கு உதவி செய்யப் போனால் பழைய நிலைமைதான உருவாகும். அதனால் அவளைப் பற்றிய நினைவை மறந்து விடு'' என்றான் நவராசா.

கெங்காதன் பேசாமல் இருந்தான். அவன் பேசாமல் யோசித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க நவராசாவுக்குப் பயமாக இருந்தது. அவன் பழையபடியும் வசந்தினியிடம் செல்லப் போகிறான்

என நினைத்தான். அப்போது அவனது விழித்திரைக்குள் அவன் துணியில்லாது வீதியில் விழுந்து கிடந்த காட்சி தெரிந்தது; ‘‘நவம், என்னால் வசந்தினியை மறக்க முடியாது. அவள் ஒரு தேவதை. அவள் எனக்கு வேண்டும்’’ கெங்காதரன் தன்னிலை மறந்த நிலையில் புலம்பியது அவனது காதில் எதிரொலித்தது.

‘‘கெங்கா, நீ அழியப் போகிறாய். நீ மட்டுமல்ல உனது குடும்பமும் அழியப் போகிறது. உன்னை மதியாத அவளை மதிக்காதை. மறந்து விடு’’ என்றான் நவராசா.

**966. புகழ்இன்றால்; புத்தேள்நாட்டு உய்யாதால்; என்மற்று இகழ்வார்பின் சென்று நிலை.?**

மதியாது இகழ்பவரின் பின் சென்று வாழ்கின்றவருக்குப் புகழும் கிடைக்காது; வானுலக வாழ்வில் சிறப்பும் கிடைக்காது.

## அழிவது மேல்

கெங்காதரனின் விழிக்குள்த் தோன்றித் சிரித்தாள் வசந்தினி. அவளை அவனால் மறக்க முடியவில்லை. ஆறு வருடங்களுக்கு முன்பு அவளுடன் அவனுக்குத் தொடர்பேற்பட்டது. அவள் அவனது வியாபார நிலையத்திலேயே பொருட்களை வாங்குவாள். அங்கு வந்தால் அவள் சிரித்துக் கதைப்பாள். இயல்பாகப் பெண்களைப் போல நாணமுடைய கெங்காதரன் அவளைக் கண்டால் அவளின் அழகில் பரவசப்படுவான். அவளைப் பார்ப்பான். இருப்பினும் அவனுக்குப் பயமாக

இருக்கும். அவள் கூச்சமில்லாது சிரித்துக் கதைப்பாள். அவனுக்கு அருகில் வந்து நிற்பாள். பணம்கொடுக்கும் போது அவளது விரல்கள் உரசும்.

ஒருநாள் தனது பிள்ளையின் பிறந்த தினத்திற்கு வரச்சொன்னாள். பரிசுப் பொருட்களோடு கெங்காதரன் சென்றான். அவளது மகன் புதிய உடையுடன் இருந்தான். அவனுக்குப் பரிசுப் பொருட்களைக் கொடுத்தான். வசந்தினி அவனை விழுந்து விழுந்து உபசரித்தாள். அடிக்கடி அவளது கை அவனோடு தேவையில்லாது கலந்துரையாடியது. இனிய நினைவுகளோடு பிரிந்தான். அந்தத் தொடர்பு நாளடைவில் நெருக்கமானது. அவன் விரும்பியவற்றிற் கெல்லாம் அவள் இடங்கொடுத்தாள். உணவு வகைகளையும் அவள் மிகவும் சுவையாகவும் விதம் விதமாகவும் சமைத்துக் கொடுத்தாள். அவள் செய்யும் உணவுப் பண்டங்களில் தோசை மிகவும் சுவையானது. அதன் சுவையைக் காட்டுவதற்காக அவன் வசந்தினியிடம் தோசை வாங்கி வந்து யசோதினிக்குக் கொடுப்பான். அவள் மிகவும் சுவையாக இருக்கிறது என்று சுவைத்துச் சாப்பிடுவாள்.

கெங்காதரனை அவளிடம் இருந்து பிரிப்பதற்காக நவராசா அவளது பழைய வரலாறுகளைச் சொன்னான். ஆரம்பத்தில் குடிக்காதிருந்த கெங்காதரன் பின்பு குடிக்க ஆரம்பித்த பின்புதான் வசந்தினிக்கும் அவனுக்குமிடையில் பிரச்சினைகள் வெடித்தன. அளவுக்கதிகமாக அவன் குடித்துவிட்டு வந்து அவளுக்குக் கரைச்சல்கொடுக்கத் தொடங்கிய தால் தான் அவள் அவனை வரவேண்டாமென்று

சொன்னாள். பழைய சம்பவங்களை இரைமீட்டுக் கொண்டிருந்தான் கெங்காதரன்.

“வந்தநேரம் தொடக்கம் அப்படி என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய். அவளுடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளப் போகிறாயா….? அவளை நீ ஒருபெண் என்றா நினைக்கிறாய்..? தனது வருமானத்திற்காக அவள் எத்தனை பேருடன் கூடிக் குலாவியவள் என்று உனக்குத் தெரியும். நல்ல தொரு கணவனுக்கே துரோகஞ் செய்த அவள், உனக்கும் துரோகஞ் செய்தவள். உனக்கு முன்னால் இன்னொருவனோடு இரவு பகலாகச் சுற்றித் திரிந்தவள். அதை நீ கண்டனீ. நல்லூர்க்கந்தசுாமி கோயில் இரவுத் திருவிழாவின் போது அவனுடன் அவள் சென்றதாக எனக்குக் கூறிக் கவலைப்பட்டனீ. அப்படி இருக்க இப்பேன் அதைப்பற்றி யோசிக்கிறாய், விபச்சாரியுடன் உள்ள தொடர்பைக் காதலியின் தொடர்புபோல நினைத்துக் கலங்குகிறாய். நான் உன்னுடைய நண்பன் என்ற முறையில் தான் சொல்கிறேன். மதியாதவர்கள் பின்னே சென்று மானங்கெட்டு வாழ்வதை விட, அவன் அவ்வாறு செய்யாத நிலையில் நின்று அழிந்தான் என்று சொல்லப்படுவது நல்லது. எல்லாப் பெண்களும் ஒரே மாதிரியானவர்கள் தான். உடல் இன்பம் தருவதில்லை. மனம்தான் இன்பம் தருவது. அதுதான் திருப்திப்படாது அலைபாய்கிறது. திருப்திப்பட்டால் உப்பில்லாத பண்டமும் மிக்க சுவையுள்ளதாக இருக்கும். உனது மனைவியை நினைத்தப் பார். அவளில் இல்லாத எது வசந்தினியில் உள்ளது. அவள் விபச்சாரி. மயக்கம் தரும் இனிய வார்த்தைகளைக் கூறி உன் இஸ்டப்படி நடந்து கொள்வாள். ஏன்? தனது நலத்திற்காக. நீ பலவீனப்பட்ட போது அவள்

உன்னை விலக்கி விட்டாள். கொடிய பகையாளியாக மாறினாள். ஆனால் உனது மனைவி உன்னை அணைத்தெடுத்ததால் தான் நீ மனிதனனாய். அதை நினைத்துப்பார்'' என்றான் நவராசா.

கெங்காதரன் எதுவும் பேசாமல் இருந்தான்; ''உன்னை நினைக்க எனக்கு அவமானமாக உள்ளது. அத்துடன் உன்னுடன் சேர எனக்கு விருப்பமில்லை. துர்க்கா உனது உறவைத் துண்டிக்குமாறு சொல்வாள். அதைத்தான் நான் செய்வதாக இருக்கிறேன். நீ இனிமேல் இங்கு வரவேண்டாம்'' என்று கூறி விட்டு எழுந்தான் நவராசா.

நவராசா அப்படிக் கூறுவான் என எதிர்பார்க்காத கெங்காதரன்; ''நவம், நீயா இப்படிச் சொல்கிறாய்?'' என்றான். அவனது குரல் பிசிறியது.

''வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். இலட்சியத்துடன் வாழ்வது தான் வாழ்க்கை. தவறு செய்வது இயற்கை. ஆனால் கடந்த காலத்தில் செய்த தவறுகளை மீண்டும் செய்யக் கூடாது. அப்படிச் செய்பவன் மனிதனல்ல மிருகம். அதனால் இங்கே நீ வருவதை நான் விரும்பவில்லை. பெண் பித்துக் கொண்ட உன்னோடு சேர்ந்து திரிந்தால் எனக்கும் அவமானமே ஏற்படும்'' என்றான் நவராசா.

---

**967. ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப்படுதல் நன்று.**

---

மதியாதவரின் பின்னே சென்று மானங்கெட்டு வாழ்வதை விட, அவ்வாறு செய்யாமல் நின்று அழிந்தான் என்று சொல்லப்படுதல் நன்று.

## மருந்து ஆகுமா?

நவராசா எழுந்து சென்ற பின்பும் கெங்காதரன் அமர்ந்திருந்தான். மற்றைய நாட்களில் அவன் வந்த சிறிது நேரத்தில் துர்க்கா அவன் உண்பதற்கு ஏதாவதொரு சிற்றுண்டி கொண்டு வந்து கொடுப்பாள். பின்பு குளிர்பானம் அல்லது தேநீர் கொடுப்பாள். இன்று அவன் வந்து ஒருமணிநேரம் கழிந்தும் அவள் வரவும் இல்லை. அவனுக்கு எதுவும் கொடுக்கவும் இல்லை. ஒருநாள் கதிரேசன் அவனுக்குச் சொன்னார்; “கெங்கா. நீ குடும்பஸ்தன். உனக்கு மனைவியும் பிள்ளைகளும் இருக்கு. நீ நல்ல குடும்பத்தில் பிறந்தவன். அந்தக் குடும்பம் பரம்பரை பரம்பரையாக ஒழுக்கமாக வாழ்ந்து வருகிறது. நீ எல்லாவற்றையும் கெடுத்து விட்டாய். சூதாடுகிறாய்; கள்ளுக் குடிக்கிறாய்; விபச்சாரியிடம் செல்கிறாய். இவை மூன்றும் கடவுளால் ஒதுக்கி வைக்கப்பட்டவை. அதனால் உனது குடும்பமானம் போய்விட்டது. உனக்கு வயது வந்த பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களின் எதிர்காலமும் உன்னால் பாதிக்கப்பட்டுவிட்டது. உனது மூத்த மகளைத் தனது மகனுக்குத் திருமணம் செய்ய விரும்பிய உனது சகோதரி இப்போது அதை விரும்பவில்லை. அப்படியானால் உனது மகளைக் கட்ட யார்

முன்வருவார்கள்? இளமைக் காலங்களில் தவறு செய்தால் அதை மன்னிக்கலாம். இந்த வயதில் நீ இப்படி நடப்பதை அனுமதிக்க முடியாது. நீ திருந்த வேண்டும். இல்லாவிட்டால் மற்றவர்களுக்குத் தீமை செய்யாது விடல் வேண்டும். நீ நவராசாவுடன் பலகாலமாக நட்புக் கொண்டுள்ளாய்; ‘‘ஒருவனைப் பற்றி அறிய வேண்டுமானால் அவனது நண்பர்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்’’ என்பார்கள். அதனால் உன்னைப் போலத்தான் நவராசாவையும் மக்கள் கணிப்பார்கள். அதனால் நீ வீட்டுப் பக்கம் வராதே.’’ கதிரேசன் கூறிய வார்த்தைகள் அனது காதுகளில் ஒலித்தன.

‘‘மகனே மிகக் கொடிய பாவம் இன்னொருவனது மனைவியுடன் கூடியிருப்பது. இந்திரியானந்தம் ஒருவனது நல்வாழ்வைக் கெடுத்துவிடும். புலன்கள் கட்டு மீறுவதால்தான் இது ஏற்படுகிறது. புலன்களைக் கட்டுக்குள் வைத்திருப்பவன்தான் ஒழுக்கமானவன். புலன்கள் மனிதனைப் பலவீனப்படுத்திக் கொடுமைகள் பலவற்றைச் செய்யத் தூண்டும். மனிதன் புலன்களால் மகிழ வேண்டுமே தவிர புலன்கள் மனிதனால் மகிழக்கூடாது. நீ தவறு செய்துவிட்டாய். செய்த தவறிற்கு மன்னிப்புக் கிடையாது. ஒரு தீய செயல் எப்பொழுதும் தீமையைத் தான் தரும். இப்போது நீ திருந்தியதாகச் சொல்கிறாய். திருந்துவது இலேசானதல்ல. உண்மையில் திருந்துவதனால் மனதால் திருந்துதல் வேண்டும். இப்போது நீ உனது பழக்க வழக்கங்களால் பலவீனமடைந்துள்ளாய்; பழக்க வழக்கங்களால் நோயுற்றுள்ளாய். அதனால் நீ திருந்த வேண்டிய

தேவை ஏற்பட்டுள்ளது. உனது பலவீனம் மறைந்த பின்பு நீ கடந்த காலத்தில் செய்த தவறுகளைச் செய்யாமல் விட்டால்தான் நீ திருந்தியவனாவாய். பெண் மோகமென்பது பெருந்தீ. புலன்கள் செயலிழக்கும்வரை அந்த மோகம் மனதில் கொழுந்து விட்டெரிந்து கொண்டே இருக்கும்; அற்றுப் போகாது; இப்போது உனது மனதில் சாம்பருள் நெருப்புப் போல அந்த உணர்வு மறைந்திருக்கிறது. அதனால் கவனமாக இரு. கடவுளை வணங்கு;'' என்று சுவாமியார் கூறிய அறிவுரைகள் அவனது மனதில் எழுந்தன.

``நவம்'' கெங்காதரன் அழைத்தான். வீட்டில் யாருமில்லாததைப் போல இருந்தது.

``நவம்'' மீண்டும் அழைத்தான்.

நவராசா வெளியே வந்தான். கெங்காதரன் சில நிமிடங்கள் பேசாமல் நின்றான்.

``விரைவாகச் சொல். நான் வெளியே போக வேண்டும்'' என்றான் நவராசா. அப்போதும் அவன் பேசவில்லை; ``ஒழுக்கம் தான் வாழ்க்கை. ஐம்புலன்களால் உடல் மட்டுமே இன்புறுகிறது. நாளை அழிந்து போகும் உடலுக்காக ஒழுக்கம் தவறி வாழ்வதை நான் விரும்பவில்லை. உடம்பைப் பெரிதாக எண்ணி வாழும் வாழ்க்கை உயிரைக் காக்கும் மருந்தாகாது. உனக்குத் தேவையான துணிவை, ஆற்றலை, திறமையை, ஆராய்ந்து அறியும் அறிவை நீயே தேடிக்கொள்ள வேண்டும். இவற்றை உனக்கு யாராலும் தரமுடியாது. இரவலாகவும் பெற முடியாது. ஆசைகள் அற்று

சுயநலமில்லாது மனிதன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். நீ செய்யும் குற்றங்களை இன்னொருவன் செய்தால் நீ ஏற்றுக் கொள்வாயா? உனது மனைவி இன்னொருவனை விரும்பினால் நீ ஏற்றுக் கொள்வாயா…?'' என்று கேட்டான் நவராசா.

நவராசா அப்படிக் கேட்ட பின்பும் கெங்காதரன் எதுவும் பேசாமல் சில கணங்கள் சிலையாக நின்றான். பின் அவனுக்குச் சொல்லாமல் எழுந்து நடந்தான்; ''கெங்கா'' நவராசா அழைத்தான். கெங்காதரன் நின்று திரும்பிப் பார்த்தான்; ''மானம் கெட்டாலும் ஐம்புலன்களால் பெறுகின்ற இன்பத்தை மதித்தால் நீ இனிமேல் எனது வீட்டுக்கு வரவேண்டாம்'' என்று கூறிவிட்டு நவராசா உள்ளே சென்றான். கெங்காதரன் சில நிமிடங்கள் அங்கு நின்றுவிட்டு நடந்தான்.

**968.மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை பீடழிய வந்த இடத்து?**

உயிருக்கு நிகரான பெருமை கெட்ட பின், உடம்பைப் பெரிதாக எண்ணி வாழும் வாழ்க்கை, உயிரைக் காக்கும் மருந்தாகுமா….? ஆகாது.

## கவரிமான்

பண்டிதரின் வீட்டுக்குத் தணிகாசலம் வந்தார். சாதாரணமாகத் தணிகாசலம் வாரத்தில் ஓரிருமுறை பண்டிதரின் வீட்டுக்கு வருவார். இப்போது அவர் கமஞ் செய்யாமையால் வாரத்தில் நாலைந்து நாட்களுக்கு வருவார். பண்டிதர்

பிரச்சினைகள் இல்லாத நல்ல மனிதன். மிகவும் மென்மையானவர்; மறந்துங் கூட மற்றவர்களைப் பற்றிக் குறைகூற மாட்டார்; ஊர்ப்பிரச்சினைகளைக் கதைக்க மாட்டார். இலக்கியம், சமயம் சம்பந்தமாகக் கதைப்பார்.

தணிகாசலம் வந்து சில நிடங்கள் கழிந்த போதும் பண்டிதர் எதையும் கதைக்கவில்லை. பண்டிதர் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கும் என்ன கதைப்பதென்று புரியவில்லை

''ஒரு சின்னப் பிரச்சினை....'' நிறுத்தினார் தணிகாசலம்.

''சொல்லுங்கோ'' என்றார் பண்டிதர்.

''முன்பு கொஞ்ச நாட்களுக்கு முன் நான் உங்களுடன் கதைத்தனான். நீங்கள் மாட்டன் என்று சொன்னனீங்கள்.....'' தணிகாசலம் கதைத்தக் கொண்டிருக்கும் போது பண்டிதர் குறுக்கிட்டுச் சொன்னார்; ''என்னுடைய முடிவை அன்று திடமாகச் சொல்லி விட்டேன். ஆரூரன் எமது சாதிக்காரனல்ல. அவன் எனது மாணவன். மாணவன் என்றமுறையில் அவன் இங்கு வரலாம் போகலாம். ஆனால் கலியாணப் பிரச்சினை சரிவராது. துளசி அவனை விரும்பித்தான் திருமணம் செய்தவள். முன்வினைப் பயனால்போலும் அவன் வன்செயலின் போது இறந்து விட்டான். நான் பிற்போக்கு வாதியல்ல. அத்துடன் முற்போக்கு வாதியுமல்ல. எமது சமய சம்பிரதாயங்களை வழுவாது கடைப்பிடித்து வாழ்பவன். அதனால்தான் நான் அவனை எனது மகளுக்குத் திருமணஞ் செய்து கொடுக்க

விரும்பமில்லை. ஆரூரன் நல்லவன்; பணக்காரன்; கற்றவன். எனது மகளைப் பூவைப்போல வைத்துப் பாதுகாப்பான். ஆனால் எனது சாதிக்காரன் இல்லை. நான் சாதி வெறியன் அல்ல. நான் அவனது வீட்டிற்குச் செல்லும் வேளைகளிலிலும் அவனது பேர்த்தியார் இறந்து சபிண்டிகரணஞ் செய்யும் போதும் அவனது சபையில் இருந்து சாப்பிட்டேன். இது நட்பைப் பொறுத்தது. திருமணம் ஆயிரங்காலத்துப் பயிர். சாதிப் பிரச்சினையை நான் பார்க்காவிட்டாலும் எதிர்காலச் சந்ததியினர் பார்ப்பர். இல்லையென மறுப்பீர்களா..?'' கேட்டுவிட்டு நிறுத்தினார் பண்டிதர்.

தணிகாசலம் எதுவும் பேசத் தோன்றாது இருந்தார்; "குமர்ப்பிள்ளை யென்றால் அவனுடன் காதலித்து, அவனுடன் சென்றால் நான் எதுவும் செய்ய முடியாது. ஆனால் இவள் மூன்று பிள்ளைகளின் தாய். அவனுடன் களவாகவும் செல்லக் கூடாது. நான் பேசியும் செய்யக் கூடாது. அவனது அன்பு ஆதரவு பற்று ஆகியன எனது சாதிக்கார னொருவனுக்கு இருந்தால் பேசிச் செய்யலாம். இவன் யாரோ.... நாளைக்கு இவனது இனத்தவர்கள் அவனை நான் ஏமாற்றிவிட்டதாகச் சொல்வார்கள். நான்தான் கூட்டிவிட்டேன் என்று எனது இனத்தவர்கள் சொல்வார்கள். நாளைக்கு இவனுக்குப் பிள்ளைகள் பிறந்தால் முன்னைய தாரத்துப் பிள்ளையை எந்தச் சாதியில் கலியாணம் செய்வது? இவனது பிள்ளைகளை எந்தச் சாதியில் திருமணம் செய்வது?..... நினைத்துப்பார்'' என்றார் பண்டிதர்.

“நீங்கள் சொல்வதெல்லாம் எனக்குப் புரிகிறது. ஆனால் ஆரூரனுக்குப் புரிய வேண்டுமே”

“அவனுக்கு நான் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். துளசியின் மாமனாருக்கு யாரோ இந்த விஷயத்தைக் கூறியிருக்கிறார்கள். அவர் ஒருநாள் வந்து சொன்னார்; “பண்டிதர் ஐயா, நீங்கள் நன்றாகக் கற்றனீங்கள். விதி வசத்தால் எனது மகன் இறந்து விட்டான். அதற்காக எனது மருமகளுக்கு இன்னொரு திருமணம் செய்து வைப்பதை நாங்கள் விரும்பவில்லை. என்னிடம் ஏராளமான காணி பூமி இருக்கு. அது பல இலட்சம் பெறும். அதெல்லாம் அந்தப் பிள்ளைகளுக்குத் தானே. இப்போ பிள்ளைப் பங்காக இருப்பதால் விற்கமுடியாது. நாலைந்து வருடங்களுக்குத்தான் கஷ்டமாக இருக்கும் பிள்ளைகள் வளர்ந்து விட்டால் காணியொன்றை விற்று ஏதாவது செய்யலாம். அதனால் அவசரப்படாதைங்கோ. அதைவிட அவன் சாதியில் குறைந்தவன். தன் உடலில் இருந்து மயிர் நீங்கினால் உயிர்வாழ விரும்பாத கவரிமானினத்தவன் நான். இப்படி ஒரு பிழை நடந்தால் எனது சாதி சமயத்தவரின் கண்களில் விழிக்க முடியாது” என்றவர். அதே போலத்தான் நானும் நினைக்கிறன். அவளுக்கு நான் ஆரூரனைத் திருமணம் செய்து கொடுத்தால் எனது மானம் அழிந்து விடும். பின் நான் உயிர் வாழ்வதில் அர்த்தம் இல்லை”

“உண்மை தான். அவனின் கரைச்சல் தாங்க முடியாது வந்தேன். எனது பிள்ளையென்றாலும் நான் நீங்கள் கூறியதைத்தான்

சொல்வேன். நீங்கள் நன்றாக யோசித்துத்தான் சொல்லியிருக்கிறீர்கள்'' என்றார் தணிகாசலம்.

**969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்.**

தன் உடம்பில் இருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரி மானைப் போன்றவர்கள் மானம் அழிய நேர்ந்தால் உயிரை விட்டு விடுவார்கள்.

## ஏத்திப் போற்றப்படுவோர்

தணிகாசலத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தான் ஆரூரன். தணிகாசலத்திடம் வந்த வேலாயுதபிள்ளை ஆரூரனது கல்யாண விஷயத்தை அறிவதற்காகக் காத்திருந்தார்.

"எனக்கென்றால் பண்டிதர் சம்மதிப்பார் என்று தோன்றவில்லை. தமிழ்ப் பண்டிதர் அவர். தமிழ்க் கலாச்சாரத்தில் ஊறித் திழைத்தவர். அதனால் அவர் இலேசில் சம்மதிக்க மாட்டார். கணவன்மார் இறந்தால் பெண்கள் உடன் கட்டையேற வேண்டும் என்று படித்த பண்டிதர் மகளை உடன்கட்டை ஏறச் சொல்லிச் சொல்லாதது ஆச்சரியம்'' என்று சிரித்தார் வேலாயுதபிள்ளை.

ஆரூரனுக்கு கவலையாக இருந்தது. படிக்கும் போதே அவன் அவளை விரும்பினான். ஆனால் அவள் தனது மாமனின் மகனை விரும்பித் திருமணம் செய்து விட்டாள். அதை பண்டிதர் நின்று நடத்தி வைத்தார். அதனால் வேதனைப்பபட்ட ஆரூரன் வெகுகாலம் நண்பர்களோடு சேர்ந்து

குடித்துக் கொண்டு திரிந்தான். துளசியின் காதலை அவன் மறந்த போது, அவளின் கணவன் இறந்து விட்டான். அதனால் அவளின் மீது ஆரூரனது மனதில் ஓர் இனம் புரியாத பற்று ஏற்பட்டது. அதனால் தான் அவன் பண்டிதரின் வீட்டுக்குக் கல்வி கற்பவன் போலச் சென்றான். அவன் அங்கு சென்ற போதும் துளசி அவனுடன் பேசுவதில்லை. இருப்பினும் அவன் அங்கு சென்று வந்தான்.

‘‘என்ன ஆரூரா யோசித்துக் கொண்டு இருக்கிறாய்?’’ என்று கேட்டவாறு வந்தார் தணிகாசலம். தணிகாசலத்தின் குரல் கேட்டதும் ஆரூரனின் மனதில் உற்சாகம் பிறந்தது. திரும்பித் தணிகாசலத்தைப் பார்த்தான். அவரது முகம் வாடிச் சோர்ந்திருந்தது. தணிகாசலம் வந்து அவனுக்கு அருகில் அமர்ந்து ஆரூரனைப் பார்த்தார். அவனைப் பார்க்க அவருக்கு வேதனையாக இருந்தது.

‘‘நீ நினைத்தது சரிவராது. அந்த எண்ணத்தை மறந்து விடு. அந்த நினைவுடன் இனி நீ அங்கே போகாதே’’ என்றார் தணிகாசலம்.

ஆரூரனின் மனதில் இருந்நத சின்னஞ் சிறிய நம்பிக்கை ஒளியும் அணைந்தது. அவனால் கதைக்க முடியவில்லை. தணிகாலசத்தைப் பார்த்தான். அவர் தலையைக் குனிந்து கொண்டார். யாரும் சில கணங்கள் கதைக்கவில்லை. ‘‘நான் வாறன் அண்ணை’’ என்று கூறிவிட்டு எழுந்து நடந்தான் ஆரூரன்.

‘‘எனக்கு இந்தச் சம்பந்தம் விரும்பமில்லை. அவள் மூன்று பிள்ளைகளின் தாய். சீதனபாதனம்

எதுவும் இல்லை. அத்துடன் இது கலாச்சாரத்திற்கும் இழுக்கு. பண்டிதர் தமிழ்ப் பண்பாடு கலாச்சாரம் ஆகியவற்றைப் போற்றி வாழ்பவர். இதற்கு எப்படிச் சம்மதிப்பார்? அவன் அவருடைய சாதிக்காரனும் இல்லை. சாதி குறைந்தவனைத் திருமணம் செய்தால் ஊரவர்கள் கேவலமாகக் கதைப்பார்கள். அதைவிடப் பண்டிதர் சாதி சமயம் பாராமல் தன்னுடைய மகளின் நல்வாழ்வுக்காகச் செய்யக் கூடாதவற்றைச் செய்து விட்டார் என்ற பழிச் சொல்லும் வரும். அதனால் தான் அவர் மறுத்தவர். அவர் மறுத்ததால் தீராத பழியொன்று ஏற்படாமற் போய் விட்டது. பண்டிதர் உண்மையான மனிதன்'' என்றார் தணிகாசலம்.

``உண்மைதான் எத்தனையோ பேர் சந்தர்ப்பமில்லாததால் தீய செயல்களைச் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். பண்டிதருக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததும் அவர் இகழ்ச்சிக்குரிய செயலைச் செய்யவில்லை. ஆரூரனின் தாய் மாமன் சென்ற வாரம் என்னைக் கண்டபோது பண்டிதரைப்பற்றி கண்டபடி ஏசினவர்; ``அவன் ஒரு மனிதனா? தனது மகளையும் மூன்று பிள்ளைகளையும் ஆரூரனின் தலையில் கட்டிவைக்கப் பார்க்கிறான். படித்த மனிதர்கள் செய்யும் செயலா இது? கோயில்களிலும் மண்டபங்களிலும் தமிழ்க் கலைகலாச்சாரங்களைப் பற்றி பெரிதாகப் பேசும் பண்டிதருக்கு நடைமுறையைப் பற்றித் தெரியாதா....?'' என்று கேட்டான். நான் பண்டிதர் உயர்ந்தவர்; நல்ல குடும்பத்தில் பிறந்தவர். அவர் அப்படி நடக்கமாட்டார். அவர் தணிகாசலத்திற்கு எல்லாம் சொல்லி விட்டார். ஆரூரன்தான் விசர் பிடித்தவன்

மாதிரித் திரிகிறான் என்று சொன்னேன். அவன் கேட்கவில்லை; “அந்தச் சம்மந்தம் நடந்தால் பண்டிதரைக் கொலை செய்வேன்’ என்று கூறிவிட்டுச் சென்றான். ஏழையானாலும் பண்டிதர் ஒழுக்கம் தவற மாட்டார். எவ்வளவு சிறப்புக்கள் வந்தாலும் அவர் தனது குடிப்பெருமையைக் கொடுக்கக் கூடிய காரியங்களில் ஈடுபடமாட்டாய்” என்றார் வேலாயுதபிள்ளை.

“ஆரூரன் துளசியை விரும்புகிறான். செய்து கொடுத்தான் என்ன…?” என்று கேட்டார் பரமேஸ்வரன்.

“நானும் அப்படிக் கேட்டனான். அவர் நடைமுறைச் சிக்கல்கள் பலவற்றைச் சொன்னார். அவர் சொன்னதில் நியாயம் இருக்கிறது. இப்போது வாலிப மிடுக்கில் செயற்படுபவர்கள் பிற்காலத்தில் பிரச்சினைகள் வந்தால் சில சமயங்களில் கைவிட்டு விடுவர். அத்துடன் சாதிப் பிரச்சினை இருக்கிறது. காதலித்துக் களவாகச்சென்றால் பிரச்சினை இல்லை. பெற்றோர் எப்படிப் பேசிச் செய்வது? அத்துடன் ஊரவர்கள் பழிப்பார்கள். அதனால் பண்டிதர் செய்தது சரி. ஊரவர்களும் பண்டிதர் செய்தது சரியென்று சொல்லிப் பண்டிதரைப் புகழ்கின்றனர். ஆரூரனின் பெற்றோரும் இனத்தவரும் மகிழ்வுடன் பண்டிதரைப் போற்றுகின்றனர்.” என்றார் தணிகாசலம்.

---

**970. இளியவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழுது ஏத்தும் உலகு.**

---

தமக்கு இழிவு நேர்ந்தால் உயிர் வாழாத மானம் உடையவரின் புகழை உலகத்தவர் தொழுது ஏந்தி வணங்குவர்.

## காரணம்

கெங்காதரன் வீட்டுக்கு வந்த போது யசோதினி அவனுடன் கதைக்கவில்லை. இரத்தினம் வீட்டுக்கு வந்து வசந்தினி வியாபார நிலையத்திற்கு வந்த விஷயத்தைக் கூறியதால் அவள் அவனுடன் பேச விரும்பவில்லை. இரத்தினசிங்கம் அவனுக்கருகில் வந்தார்.

“கெங்கா, பழையபடியும் வசந்தினி உன்னை வந்து சந்தித்ததாக இரத்தினம் வந்து சொன்னான். பழைய தவறுகளை நீ செய்ய மாட்டாய் என்பதால் தான் எனது நிறுவனத்தை உனது பொறுப்பில் விட்டேன். மீண்டும் நீ அவளுடன் தொடர்பு கொள்வதனால் அங்கு நீ போக வேண்டாம். நான் சகல பொறுப்புக்களையும் இரத்தினத்திடம் கொடுக்கப் போகிறேன். நீ வீட்டுக்கு உதவமாட்டாய். நான் சம்பாதித்த சொத்துக்களில் பெரும் பகுதியை அழித்து விட்டாய். எனது தகப்பனார்பெரும் பணக்காரர் அல்லர். என்னுடைய ஊக்க மிகுதியால் தான் நான் பெரும் சொத்துக்களைத் தேடினேன். நீ தொழிலில் ஊக்கமில்லா திருந்ததுடன் நான்தேடிய பெருஞ் சொத்தை அனுபவிக்கலாமென்று நினைத்துத் தொழில் செய்யாது இருந்ததோடு தீய செயல்களிலுமீடுபட்டாய். அந்த நிலை திரும்பவும் வருமானால் நீ வீட்டை விட்டுப் போ. எனக்கு எனது நிறுவனத்தை என்ன செய்ய வேண்டுமென்று தெரியும்”

‘‘நான் அவளை வரச்சொல்லவில்லை. அத்துடன் நான் அவளை மறந்து விட்டேன். அவளுக்கு உதவிகளும் செய்ய மாட்டேன். என்னுடைய இழிவுக்குக் காரணம் உழைக்காது நீங்கள் தேடிய சொத்தில் வாழலாம் என்று நினைத்தது தான். இனிமேல் நான் ஊக்கத்துடன் செயற்படுவேன்’’ என்றான்.

அப்போது அங்கு நவராசாவும் துர்க்காவும் வந்தனர். நவராசா கெங்காதரன் அங்கு நிற்பதைக் கவனிக்காதவன் போல உள்ளே சென்றான். இரத்தினசிங்கம் அவனின் பின்னாற் சென்றார்; ‘‘கெங்காதரன் சரிவரமாட்டான். இவ்வளவு காலமும் உழைக்காமல் இருந்து சாப்பிட்டவன். இவன் உழைத்திருந்தால் எவ்வளவைச் சம்பாதித்திருக்கலாம். இவனது பொறுப்பில் உங்கள் நிறுவனத்தை விடாதீர்கள்’’ என்றான் நவராசா.

‘‘அதை நான் சொல்லி விட்டேன். ஒருவனை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்வது ஊக்கமிகுதி; கீழ்நிலைக்கு இழுத்துச் செல்வது ஊக்கமின்மை. கடவுள் எமக்குத் தந்த அறிவு, பலம், முயற்சி முதலியவற்றால் நல்லொழுக்கமுள்ளவனாகவும், ஊக்கமுள்ளவனாகவும் வாழ வேண்டும். அப்படி வாழாதவனைப் பெற்றோர் கூட ஒதுக்கி விடுவார்கள். அதைத்தான் நான் செய்துள்ளேன்’’ என்றார் இரத்தினசிங்கம்.

‘‘உங்களின் வியாபார நிலையைப் பொறுப்பை என்னிடம் தாருங்கள். நான் நீங்கள் கேட்கும் தொகையை மாதாமாதம் தருகிறேன். துர்க்கா முன்பு என்னை வேலை செய்ய

விடுவதில்லை. இப்போ வேலை செய்யும்படி கூறுகிறாள். அதனால் முன்பு செய்த கமம் முழுவதையும் செய்ய உத்தேசித்துள்ளேன்’ என்றான் நவராசா.

“அதுவும் நல்ல ரோயசனை தான். என்னாலும் இயலாது. கூலியாட்களையும் நம்ப முடியாது. நீ மாதா மாதம் எனக்கு ஒரு தொகையைத் தா” என்றார் இரத்தினசிங்கம்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த யசோதினி சொன்னார்; “நல்ல யோசனை மாமா. இவரை நம்பினால் நாம் நடுத்தெருவில் தான் நிற்றல் வேண்டும். நவராசா அண்ணாவுக்குக் கொடுங்கோ”

கெங்காதரனுக்கு வேதனையாக இருந்தது. பெற்றோர், மனைவி. மக்கள், நண்பர்கள் எல்லோரும் தன்னை எந்த நிலையில்வைத்திருக்கிறார்கள் என்பதை நினைக்க அவனுக்குக் கவலையாக இருந்தது.

“கெங்கா நான் எமது நிறுவத்தை மாதாந்தக் குத்தகைக்கு நவராசாவுக்குக் கொடுப்பதாகத் தீர்மானித்து விட்டேன். நீ இனி அங்கு செல்ல வேண்டாம்” என்றார் இரத்தினசிங்கம்.

“ஏனப்பா அப்படிச் சொல்கிறீர்கள்? நான் அவளுக்குப் பொருட்கள் கொடுத்தேனா…? இல்லை கொடுக்கப் போவதாகச்சொன்னேனா….? நான் திருந்தி விட்டேன். ஒருவனுடைய ஒளிமயமான

வாழ்க்கைக்குக் காரணம் அவனது ஊக்கமிகுதியென்று இப்போது சொன்னீர்கள். இவ்வளவு காலமும் ஊக்கமில்லாமல் வாழலாம் என்று நினைத்ததால் தான் எனக்குக் கேடுகள் வந்தன. இனி நான் ஊக்கத்துடனும் நல்லொழுக்கத்துடனும் வாழ்வேன்'' என்றான்.

''சரி, அதைத்தான் நானும் விரும்புகிறேன். நீ ஊக்கத்துடன் தொழில் செய்து முன்னேற வேண்டும் என்பதுதான் எனது விருப்பம்'' என்றான் நவராசா.

''நான், எனது சகோதரர்கள் பணம் அனுப்புவார்கள் என்ற திமிரில் எனது கணவரைக் கமம் செய்ய விடவில்லை. கமஞ் செய்வதை நான் அவமானமாகக் கருதினேன். இன்று நான் திருந்திவிட்டேன். அவர் பழைய படியும் கமஞ் செய்ய ஆயத்தமாகி விட்டார்'' என்றாள் துர்க்கா.

**971. ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை; இளிஒருவற்கு அஃது இறந்து வாழ்த்தும் எனல்.**

ஒருவனது மேன்மையான வாழ்வுக்குக் காரணம் அவனுடைய ஊக்க மிகுதியே ஆகும். ஒருவனது இழிவுக்குக் காரணம் ஊக்கமில்லாமல் உயிர் வாழலாம் என்று அவன் எண்ணுவதேயாகும்.

## தொழில்வேறுபாடு

நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயத்திற்குக் கணநாதனும், மணிவண்ணனும், கெங்காதரனும், நவராசாவும் குடும்பத்துடன்

வந்திருந்தனர். அன்று கெங்காதரன் தனது நிறுவனத்தின் புதிய கிளையை தொடங்கவுள்ளான். அதைத் தொடங்கு முன் மகா கணபதிக்கு பெரியதொரு பூசை செய்தான். அதில் கலந்து கொள்ள ஏராளமான மக்கள் வந்திருந்தனர்.

கெங்காதரன் ஊக்கத்துடன் செயற்பட்டான். அதனால்அவனுக்கு அதிக வருமானம் வந்து கொண்டிருந்தது. இரத்தினசிங்கம் மகிழ்ந்து போனார். இனித் தனது மகன் நல்லொழுக்கத்துடனும் ஊக்கமிகுதியுடனும் வாழ்வானென நினைத்தார். யசோதினிக்கு என்றுமில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. தனது கணவன் இனி ஒழுக்கமாக வாழ்வான் என்ற நம்பிக்கை பிறந்தது.

மணிவண்ணன் மிகவும் உற்சாகமாக நின்றான். ஆத்மீக வாழ்வு வாழ வேண்டும் என்று நினைத்துத் தொழிலைக் குறைந்த அவனால் சோம்பியிருக்க முடியவில்லை. அதனால் வேறு தொழில்களையும் தொடங்கியிருந்தான்.

கணநாதன் அவனுக்கு அருகில்வந்தார்; “நான் இன்னுமொரு ஆடைத் தொழிற்சாலையைத் தொடங்கவுள்ளேன். தொடங்கினால் பலருக்குத் தொழில் கொடுக்கலாம். அதை இங்குதான் தொடக்கவுள்ளேன். அதனால் நீங்கள் இங்கே தேவையானளவு ஆடைகளைப் பெறலாம். அதனால் உங்களுக்குப் போக்குவரத்துச் செலவு குறையும். இங்குள்ள படித்த இளைஞரும் பலன் பெறுவர்” என்றார்.

மணிவண்ணன் நவராசாவை அழைத்தான். நவராசா மணிவண்ணனின் அருகில் வந்தான்; ‘‘நீ பழைய படியும் மோட்டார் வாகனங்களை வாங்கி விற்பதாக அறிந்தேன். எனது வாகனத்தை விற்று விட்டுப் புதிதாக நவீன தொழில்நுட்பத்துடனமைந்த வாகனமொன்று வாங்கலாமென நினைக்கிறேன்’’ என்றான்.

‘‘என்னவிலை யென்றுசொல்லுங்கோ’’ என்று நவராசா கேட்டான்.

‘‘பத்து இலட்சமென்றால் கொடுப்பேன்’’ என்றான் மணிவண்ணன்.

‘‘நாளைக்கு வருகிறேன்’’ என்றான் நவராசா.

நாவலர் ஸ்ரீ வித்திய மகா கணபதிக்குப் பூசை முடிந்ததும் கெங்காதரனின் புதிய நிறுவனத்தில் வைப்பதற்காக விநாயகர், இலட்சுமி, முருகன் ஆகியோரது படங்கள் கொண்டு வரப்பட்டன. அப்படங்களை பெண்கள் ஊர்வலமாக எடுத்து வந்தனர்.

சுவாமியார் அரச மரநிழலில் இருந்தார். அவரின் அருகிற் சென்ற கெங்காதரனும் யசோதினியும் அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார்; ‘‘கெங்கா, உனது மனைவியின் முகத்தைப்பார். திருமகள் அதில் குடியிருக்கிறாள். எவ்வளவு பொலிவு; எவ்வளவு அழகு; எவ்வளவு மகிழ்ச்சி. இந்த நிலை நீடித்திருக்க எல்லாம் வல்ல மகா கணபதி அருள் புரிவாராக. எல்லா உயிர்களுக்கும் பிறப்பு ஒரே தன்மையானது. ஊக்க

மிகுதிதான் அவர்களை வேறுபடுத்துகிறது. ஊக்கமுள்ளவன் பேரின்ப வாழ்வு வாழ்ந்து, பிறரையும் பேரின்பபமாக வாழ வழிவகுப்பான். பிறப்பு ஒன்று. ஆனால் தொழில்கள் பல. உயர்வுதாழ்வு என்பது அவரவர் செய்யும் தொழிலின் தன்மையைப் பொறுத்தது. ஊக்கம் உள்ளவன் உயர்வுவடைவான். ஊக்கமில்லா விட்டால் தாழ்ந்து போவான். உனது தந்தை ஊக்கமிகுதியால் ஏராளமாகச் சம்பாதித்தார். இங்குள்ளவர்களைத் திரும்பிப்பார். மணிவண்ணன் எமது ஊரவன். ஊக்கமுள்ளவன். உயர்வான நிலையை அடைந்துள்ளான். அதனால் ஊர் முன்னேறியுள்ளது. அவன் வியாபாரி; கணநாதன் தொழிலதிபர்; நீ வியாபாரி; நவராசா தோட்டக்காரன் அத்துடன் தரகன். அதுமட்டுமல்ல, இன்னும்பல தொழில்களை நவராசா செய்கிறான். ஊக்கமுள்ளவர்களுக்குத்தான் இந்த உலகம் சொந்தமானது. துன்பம் விளைவதற்கு ஊக்கமின்மையைத் தவிர வேறு எதுவுமே காரணமில்லை. ஊக்கமுள்ளவர்களே உலகிற்கு ஒளிதரும் சூரியனைப் போன்றவர்கள். தேவையில்லாத விஷயங்களில் மனதை ஈடுபடுத்தாது ஊக்கத்துடன் உழைப்பவன் என்ன தொழில் செய்தாலும் அவன் முன்னேறி விடுவான். உனது தந்தை மகா கணபதி கோயில் உற்சவங்களில் கடலை விற்றவர். கணநாதன் ஒரு தையல் இயந்திரத்துடன் தொழிலை ஆரம்பித்தவர். இன்று அவர்களின் நிலையென்ன.....? இதற்குக் காரணம் தொழில் அல்ல, ஊக்கமிகுதியே ஆகும் என்பதை என்றும் நினைவில்வை” என்று கூறிவிட்டுக் கண்களை மூடினார் சுவாமிகள்.

கெங்காதரனும் யசோதினியும் அவர்களது இனத்தவர்களும் நண்பர்களும் சுவாமி படங்களுடன் ஊர்வலமாகக் கெங்காதரனின் புதிய நிறுவனத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தனர்.

**972. பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்புஒவ்வா செய்தொழில் வேற்றுமை யான்.**

எல்லா உயிர்களுக்கும் பிறப்பு ஒரு தன்மையானதே ஆகும். வாழ்வில் உயர்வும் தாழ்வும் அவரவர்கள் செய்கின்ற தொழிலில் உள்ள வேறுபாடுகளைப் பொறுத்தே அமையும்.

## மேலானவர் கீழானவர்

கெங்காதரனின் புதிய வியாபார நிலையத்தில் சுவாமி படங்களை நாவலர் ஸ்ரீ வித்தியா மகா கணபதி ஆலயக் குருக்கள் வைத்து விட்டுப் பூசை செய்து முடித்ததும் பண்டிதர் கந்தையா சம்பரதாய முறைப்படி அதைத்திறந்து வைத்தார். பண்டிதர் கந்தையாவிடம் தான் கெங்காதரன் கல்வி கற்றவன். நன்றாகத் தன்னைத் தயார்படுத்தி வந்து அவர் கற்பித்தால் அறிவில்லாத முட்டாள்களுக்குக் கூட அவர் கற்பிப்பது விளங்கும். அத்துடன் ஒழுக்க சீலர். தனது மாணவர்கள் எல்லோரையும் பாகுபாடு காட்டாது நேசிப்பவர். எவ்வேளையிலும் அவர் தூய்மையாக இருப்பார். யார் எந்த உதவியைக் கேட்டாலும் அவர் அதைச் செய்து கொடுப்பார். ஏழை மாணவர்களிடமும், அறிவு குறைந்த மாணவர்களிடமும் மிகுந்த

அன்புள்ளவராக இருப்பார். அதனால் மாணவர்கள் எல்லோரும் அவரைக் கடவுளாகத் தொழுதனர்.

அவ்வூரவர்கள் எல்லோரும் அவரது மாணவர்கள். அங்கு நடைபெறுகின்ற எல்லா நிகழ்ச்சிகளையும் அவரே முன்னின்று நடத்துவார். திருமண நாளில் மணமக்கள் முதலில் அவரிடம் தான் ஆசீபெறுவார்கள். பொதுவாக அவரில்லாமல் அவ்வூரில் எந்த நிகழ்வும் நடைபெறமாட்டாது.

வியாபார நிலையங்கள் அவரால் தான் திறந்து வைக்கப்படும். அவர்தான் புதிதாகத் திறக்கப்படும் வியாபார நிலையங்களில் முதன் முதலாகப் பொருட்களை வாங்கி வியாபாரத்தை ஆரம்பித்து வைப்பார். அவர் வசதி குறைந்தவர் என்று யாரும்எண்ணுவதில்லை. முதன்முதலாக அவருக்கே பொருட்களை விற்க விரும்புவர். அதனால் அவர் தனது கையில் உள்ள பணத்தைக் கொடுத்துக் கற்கண்டு அல்லது வெற்றிலை வாங்குவார்.

பண்டிதர் ஐந்து ரூபா கொடுத்து விட்டுக் கற்கண்டு வாங்கினார். அதன்பின் மணிவண்ணன் ஐம்பதினாயிரம் ரூபா கொடுத்துப் பொருட்களைக் கொள்வனது செய்தான். நவராசாவும் ஐம்பதினாயிரம் ரூபா கொடுத்தான். அங்கு வந்தவர்கள் ஒவ்வொருவராகப் பணம் கொடுத்துப் பொருட்களைக் கொள்வனவு செய்தனர்.

பண்டிதர் கெங்காதரனிடம் விடைபெற்றபோது அவன் பலபொருட்களை அவருக்குக் கொடுத்து, அவரைத் தனது மோட்டார் வண்டியில் ஏற்றி விட்டான். அதைக் கண்ட கணநாதன்

தணிகாசலத்திற்குச் சொன்னார்; ‘‘எமது ஊரில் பெரும் பெரும் பணக்காரர்களைக் கொண்டும் பிரமுகர்களைக் கொண்டும் தமது நிறுவனத்தைத் திறந்தால்தான் அங்கு பெரும் வியாபாரம் நடைபெறும் என்று நினைப்பார்கள். ஆனால் இங்கு அப்படியல்ல. இது எனக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது’’

தணிகாசலம் சிரித்தார்; ‘‘ஒரு நிகழ்வை நல்லதொரு மனிதரைக் கொண்டுதான் ஆரம்பித்துவைத்தல் வேண்டும். மேல் நிலையில் வாழ்பவர்களிடம் மேன்மையான பண்புகளில்லா விட்டால் அவர்கள் மேலானவர்கள் ஆக மாட்டார்கள். வறுமைப் பட்டிருந்தாலும் இழிந்த குணம் இல்லாதவர்கள் கீழானவர்கள் ஆக மாட்டார்கள். பண்டிதர் நல்ல ‘கைராசிக்காரர்’ என்று ஊரவர்கள் நம்புகிறார்கள். அவரின் கைபட்ட இடம் ‘துலங்கும்’ என்றும் நம்புகிறார்கள். எனது பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்து வைத்தவர் பண்டிதர். இன்று எனது பிள்ளைகள் நன்றாக இருக்கின்றனர். என்னைப் போல ஊரவர்கள் எல்லோரும் நம்புகின்றனர்’’ என்றார் தணிகாசலம்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த வேலாயுதபிள்ளை சொன்னார்.; ‘‘மனிதனை அவனது குணங்களை வைத்துத்தான் நாம் மதிப்பிடல்வேண்டுமே தவிரக் கல்வியையும் பணத்தையும் வைத்து மதிப்பிடக் கூடாது. மேலானவர்களானாலும் நல்ல பண்பில்லாத வர்களைக் கொண்டு நாம் நல்ல காரியங்களைச் செய்யக் கூடாது. கீழான எண்ணமுள்ளோர் தாம் செய்யும் நல்ல காரியத்தை மனமகிழ்வுடன் செய்ய

மாட்டார்கள். இந்த நிறுவனத்தைத் திறந்து வைத்த பண்டிதர் உளமார வாழ்த்தியிருப்பார். ஆனால்சிலர் மனதுள் அந்நிறுவனம் அழிய வேண்டும் என்றும் நினைத்து ஆரம்பித்து வைப்பர். அதனால்தான் பெரியவர்கள் கீழான நிலையில் இருந்தாலும் இழிந்த குணங்கள் இல்லாதவர் மேல் மக்கள் என்று கூறியுள்ளனர். அது உண்மை'' என்றார்.

''உண்மைதான். நீங்கள் சொல்வது சரி'' என்றார் கணநாதன். பண்டிதரை நினைக்க அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு சிறி வீடு; வசதிகள் குறைந்த வாழ்வு. ஆனால் அவருக்குள்ள மதிப்பு எவ்வளவு என்று நினைத்தார்.

---

**973. மேல்இருந்தும் மேல்அல்லார் மேல்அல்லார் கீழ்இருந்தும்
கீழ்அல்லார் கீழ்அல் லவர்.**

---

மேல் நிலையில் இருந்தாலும் நல்ல பண்பில்லாதவர்கள் மேல் மக்களாக மாட்டார். கீழ் நிலையில் இருந்தாலும் இழிவான குணங்கள் இல்லாதவர் கீழ் மக்கள் ஆகமாட்டார்.

## கற்புள்ள மகளிரைப் போல

கெங்காதரனின் மகள் இந்துஜாவுக்கு அன்று திருமணம் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. முன்பு தனது சகோதரனின் மகளைத் தனது மகனான அரிகரனுக்குத் திருமணம் செய்ய அன்னப்பிள்ளை விரும்பினாள். ஆனால் கெங்காதரன் குடித்து விட்டு வீதிகளில் விழுந்து கிடப்பதும், வசந்தினியின் வீட்டுக்குச் சென்று அவளே

தஞ்சமென்றிருருந்ததாலும் அன்னப்பிள்ளை கெங்காதரனின் மகளைத் திருமணம் செய்ய விரும்பமில்லை.

கெங்காதரன் தனது மனைவியுடன் அன்னப்பிள்ளையின் வீட்டுக்குச் சென்றான்; ‘‘எமது குடியில் உன்னைப் போல ஒருவர் இல்லை. அப்பாவைப்பார். எப்போதாவது குடித்திருப்பாரா….? சூதாடியிருப்பாரா….? இல்லை இன்னொரு பெண்ணை ஏறெடுத்தப் பார்த்திருப்பாரா..? நான், உறவு அயழியக்கூடாது என்பதற்காகத்தான் இந்துஜாவை எனது மருமகளாக்க விரும்பினேன். அப்பாவும் அம்மாவும் கட்டாயம் அரிகரணைஇந்துஜாவுக்குச் செய்ய வேண்டும் என்று விரும்பினர். அவர்களின் வேண்டுகோளை என்னால் நிராகரிக்க முடியவில்லை. அதனால் தான் ஒப்புக் கொண்டேன். நீ குடித்துவிட்டுச் செய்யும் அட்டகாசங்களால் தனது மானம் போய்விட்டதென்று அரிகரன் கூறுகிறான். அவன் உனது மகளைக் காதலித்தானா….? இல்லை உனது வீட்டுக்கு வந்தானா…? நான் விரும்பும் பெண்ணையே தான் திருமணஞ் செய்வதாகக் கூறினான். அப்படியான நல்லபண்புகளை உடைய அவன் உன்னை எப்படித்தனது மாமனாக ஏற்பான்…? ஒழுக்கம் என்பது பெண்களுக்கு மட்டும்தான் உள்ளது என்று எண்ணாதே. ஆண்கள் ஒழுக்கமாக வாழ்ந்தால் தான் போற்றப்படுவார்கள்; பெண்களாலும் ஒழுக்கத்தைப் பேண முடியும். தணிகாசலமும் வேலாயுதபிள்ளையும் வந்தமையால் தான் நான் இந்தக் கலியாணத்தை ஒப்புக் கொண்டேன். பண்டிதரும் விக்னேஸ்வரமூர்த்தியும் வீடுதேடி வந்துவிட்டனர். கற்பு நெறி தவறாத பெண்களைப்

போல இவர்களும் ஒழுக்க நெறி தவறாதவர்கள். அதனால் தான் சிறந்த பெருமையுடையவர்கள் என்று நினைத்து நான் இத்திருமணத்திற்குச் சம்மதித்தேன். திருமண நாளன்று நீ மணமேடைப் பக்கம் வரக்கூடாது. திருந்திவிட்டேன் என்று நீ கூறினாலும் முன்பு செய்த குற்றங்கள் உன்னை விட்டு நீங்காது. அதனால் குற்றமுள்ள ஒருவனிடம் ஆசி பெற அரிகரன் விரும்பவில்லை'' அன்று அன்னப்பிள்ளை கூறியதால் கெங்காதரன் கல்யாண மண்டபத்திற்கு வெளியே இருந்தான்.

விக்னேஸ்வரமூர்த்தியும் அவரது மனைவியும் முன்நின்று அத்திருமணத்தை நடத்தி வைத்தனர். அரிகரன் சுபவேளையில் இந்துஜாாவின் கழுத்தில் தாலி கட்டியதும் பண்டிதர் அவர்களை வாழ்த்தினார். மணமக்கள் இரத்தினசிங்கத்தினதும் தாட்சாயினதும் கால்களில் விழுந்து நமஸ்கரித்தனர். பின்பு விக்னேஸ்வரமூர்த்தியைப் பணிந்தனர்.

கெங்காதரன் தூரத்தில் இருந்து அதைப்பார்த்துக் கொண்டு நின்றான். அவனுக்குத் துக்கமாக இருந்தது. முதல்நாள் இரவு இரத்தினசிங்கம் கெங்காதரனுக்குச் சொன்னார்; ‘‘அன்னப்பிள்ளை பிடிவாதக்காரி. அவளது கணவன் இருபது வருடங்களுக்கு முன்பு இன்னொருத்தியுடன் தொடர்பு வைத்ததை அறிந்து அவனை வீட்டிலிருந்து துரத்தி விட்டாள். அதன் பின் அவன் நோய்வாய்ப்பட்டு வீதி வீதியாகப் பிச்சையெடுத்து மடத்தில் செத்தவன். செத்த வீட்டிற்குக் கூட அவள் செல்லவில்லை. அனாதைப் பிணமாகச் சுடலைக்குக் கொண்டு சென்றனர். என்னைக் கூட அவள் அங்கு செல்லவிடவில்லை. அப்படிப்பட்டவள்

பண்டிதரும் விக்னேஸ்வரமூர்த்தியும் சொன்னதால் தான் சம்மதித்தாள். அதனால் நீ அவளின் சொற்படி நட. இல்லாவிட்டால் அருமையான மாப்பிள்ளையை இழக்க வேண்டிவரும். அத்துடன் திருமணமான பின் இந்துஜா அன்னப்பிள்ளையில் வீட்டில்தான் இருப்பாள். நீ அங்கு எக்காரணங் கொண்டும் செல்லக்கூடாது. இந்துஜா உனது வீட்டுக்கு வரும்போது பார்த்துக் கொள். அத்துடன் இந்துஜாவுக்கும் உன்னைப் பிடிப்பதில்லை. அதனால் உன்னிடம் ஆசி பெறவும் விரும்பவில்லை; "அன்னப்பிள்ளை செய்தது சரி. ஒழுக்கக் கேடானவர்கள் நல்ல வீட்டிற்கு வந்தால் மூதேவி நுழைவதைப் போலிருக்கும்" என்று எனக்குச் சொன்னாள். அதனால் கவனமாக இரு. ஒவ்வொருவரும் தீய செயல்களைச் செய்யும் போது தீய விழைவுகள் வருமென்று எண்ண வேண்டும்".

"உண்மைதான். எனது நடத்தையால் அவர்களின் மானம் போய்விட்டது." என்று நினைத்தான் கெங்காதரன்.

சம்பந்தமில்லாத பலர் மணமக்களை மகிழ்வுடன் வாழ்த்திக் கொண்டிருந்தனர்; பரிசுப் பொருட்களைக் கொடுத்துக் கொண்டிருந்தனர்; தன்னால் தனது மகளையும் மருமகனையும் வாழ்த்த முடியவில்லையே" என்பதை நினைக்கக் கெங்காதரனுக்குக் துக்கமாக இருந்தது.

---

**974. ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டு ஒழுகின் உண்டு.**

---

கற்பு நெறி தவறாத மகளிரைப் போல், ஒழுக்க நெறி தவறாதவன் எப்பொழுதும் சிறந்த பெருமையை அடைவான்.

## பெருமைக்குரியவர்கள்

கனகசபாபதியின் மருமகன் வருணன், வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வந்திருந்தான். அவனுடன் அவனதுமனைவியும் பிள்ளைகளும் வந்திருந்தனர். இலக்கியப் பேரவைக்கு நிரந்தரமாக ஒரு மண்டபம் தேவையென்று தணிகாசலம் வெகு நாட்களாக நினைத்திருந்தார். அது சனசமூக நிலையத்திற்கு அருகில் அமைந்தால்தான் சிறப்பாக இருக்கும் என்றும் எண்ணிணார். சனசமூக நிலையமும் சிதம்பர சொத்துக் காணியில் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கருகில்தான் முருகையன் வாழ்ந்து வருகிறான். முன்பு சனசமூக நிலையம் கட்டுவதற்கு அவனைக் கேட்ட போது அவன் மகிழ்வுடன் அது கட்டத் தேவையான நிலத்தைக் கொடுத்தான். இப்போது மண்டபம் கட்டுவதற்கு அவனைக் கேட்க முடியாது. பாவம் அவன் மிகவும் ஏழை. அப்படிக் கேட்பதை அவர் விரும்பவில்லை. அப்படிக் கேட்பது தர்மமாகாது என்று அவர் நினைத்தார். ‘‘சனசமூக நிலையம், பாலர் பாடசாலை, தண்ணீர்ப்பந்தல் கூட்டுறவுச்சங்கம் என்பன அருகருகே அமைந்திருக்கும் இடத்தில் பொது மண்டபமும் அமைந்தால் நல்லது’’ என்று நினைத்தார் தணிகாசலம்.

‘‘கோயிலுக்குச் சிறிது தூரத்தில் சின்னத்துரை தனது பத்துப் பரப்புக் காணியை

விற்பதற்கு விரும்புகிறான். அதை வாங்க யாரும் முன்வரவில்லை. அதை வாங்கி முருகையாவுக்குக் கொடுத்தால் முருகையா குடியிருக்கும் காணியைப் பெற்று மண்டபம் கண்டலாம். அதில் மண்டம் கட்டினால் எல்லாவற்றிற்கும் பொருத்தமாக இருக்கும். அந்த நினைவுடன் ஜெயபாலனைச் சந்தித்துக் கதைத்தார் தணிகாசலம்.

“உங்களது யோசனை நல்லதுதான் அண்ணை. ஆனால்சிதம்பரக் காணிக்கும் நாம் ஏன் காசு கொடுப்பான்? முருகையனின் காணியென்றாலும் பரவாயில்லை. கோயில் காணி விட வேண்டியதுதானே” என்றான் ஜெயபாலன்.

அன்று மாலை சிவசுந்தரமூர்த்தி தணிகாசலத்தைத் தேடிவந்து சொன்னார்; “நீங்களெல்லாரும் எதை நீதியென்று கதைக்கிறியள் என்று எனக்குத் தெரியவில்லை. அது கோயிற்காணி. பொது விஷயத்திற்கென்றால் விடவேண்டியது தானே. அதுக்கு காசு கொடுக்க முடியுமே? சின்னத் துரையிடம் காணி வாங்குவதானால் பத்து இலட்சமென்றாலும் வேணும். பத்து இலட்சத்தை அவர் சும்மாய் இருந்து பெறப் போறார். கோயில்காணியை விற்க முடியாது. சின்னத்துரையின் காணியை வாங்கிக் கொடுத்தால் விற்கலாம். பிள்ளைகளுக்குச் சீதனமாக எழுதலாம். பொதுப்பிரச்சினைகளை விட்டு விட்டு தனியாருக்கு உழைப்புக் காட்டுறியள்” என்றார்.

தணிகாசலம் எதுவும் பேசவில்லை. எனினும் மண்டபமும் கட்ட வேண்டும், முருகையனுக்கும் இருக்க இடங்கொடுக்க வேண்டும்” என்று

நினைத்தவாறு தில்லை நடராசாவிடம் சென்றார். தில்லைநடராசா அவரின் ஆத்ம நண்பர். வருணனின் உறவினன்.

“வருணன் நல்லபிள்ளை. அத்துடன் அவனது தந்தையான ஆதித்தியனும் நல்லவர்.அவர்களிடம் ஏராளமான சொத்திருக்கு. கனகசபாபதியிடமும் ஏராளமான காணி பூமி இருக்கிறது. அதனால் வருணனைக் கொண்டு சின்னத்துரையின் காணியை வாங்கி முருகையனுக்குக் கொடுத்துவிட்டு, முருகையா குடியிருக்கிற நிலத்தில் மண்டபத்தைக் கட்டினால் நல்லது” என்றார் தணிகாசலம்.

“சின்னத்துரையின் காணிக்கு அருகில் ஆதித்தியனுக்குப் பத்துப் பரப்புக் காணி இருக்கிறது. அதைக் கேட்டால் என்ன?” என்று கேட்டார் தில்லை நடராசா.

“அதுவும் நல்லகாணிதான். அதைக் கேட்டுப் பார்ப்போம்” என்றார் தணிகாசலம். இருவரும் ஆதித்தியனது வீட்டுக்குச் சென்றனர்.

வருணனும் ஆதித்தியனும் இருவரையும் வரவேற்றனர்; தில்லை நடராசா தாம் வந்த விஷயத்தைச்சுருக்கமாகச் சொன்னார்.

“மாமா, என்னை நீங்கள் தூக்கி வளர்த்தனீங்கள். உங்கள் விருப்பப்படி அக்காணியைத் தருகிறேன்” என்றான் வருணன். ஆதித்தியனும் அதற்குச் சம்மதித்தார்.

நல்ல நாளில் முருகையாவுக்கு ஆதித்தியன் தனது காணியை எழுதிக் கொடுத்தார். முருகையன் தனது வீட்டைப் பிடுங்கிக் கொண்டு சிதம்பரக்காணியை விட்டான்.

அன்று பொதுமண்டபம் கட்டுவதற்காக அத்திவாரமிடப்பட்டது. விக்னேஸ்வர மூர்த்தி சொன்னார்; "பொது மண்டபம் ஒன்றை அமைக்க வேண்டுமென்ற எண்ணம் வெகுநாட்களாக எமக்கிருந்தது. ஜெயபாலன் பணம் தந்த போதும் அது கட்டுவதற்கான நிலம் கிடைக்கவில்லை. இந்த நிலம்தான்அதற்குப் பொருத்தமானது என நினைத்தேன். செய்ய முடியாத அரிய செயல்களையும் அதைச் செய்யும் முறை அறிந்து திறம்படச் செய்து முடிக்கின்ற ஆற்றல் உள்ளவர்கள்தான் பெருமைக்குரியவர்கள். இந்த நிலத்தைப் பெற்றுத் தந்த தணிகாசலமும் தில்லை நடராசாவும் மிக்க பெருமை உடையவர்கள்"

---

**975. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்.**

---

செய்ய முடியாத செயல்களையும் முறைஅறிந்து உரிய நெறியில் நின்று செய்து முடிக்க வல்லவரே பெருமையுடையவராவர்.

## இழிந்தவருக்கு இல்லை

சிவசுந்தரமூர்த்தியும் தனபாலனும் வருணனையும் ஆதித்தியனையும் சந்தித்தனர்.

‘‘ஐயா, வருணன் சின்னப்பிள்ளை. அவனுக்குப் பணத்தின் அருமை தெரியாது. தில்லை நடராசா அவனை ஏமாற்றிப் பிழைப்பு நடத்துவது போல இப்ப காணி விஷயத்திலும் ஏமாற்றிவிட்டார். அந்தக் காணிக்கு அருகில் எனது காணி இருக்கிறது. முருகையன் நீங்கள் கொடுத்த காணியில் குடியேறினால் என்னால்அக்காணியை விற்க முடியாது. முருகையனின் குடும்பம் சரியில்லை’’ என்றர் சிவசுந்தரமூர்த்தி.

‘‘தில்லை என்னுடைய சகோதரன் மாதிரி. அவன் ஒரு போதும் பிழை செய்ய மாட்டான். அவன் ஒழுக்கமுள்ளவன்; பெருமைக்குரியவன்; அவன் தனது எதிரியான கனகசபாபதியின் மகளை எனது மனைவி விரும்பியதற்காகப் பகையை மறந்து அவளை எனது மகனுக்குச் செய்து வைத்தவன். தில்லை நடராசா பகைவனைக் கூட நேசிக்கும் பண்பாளன். அவனைக் குறை சொல்வதை நான் விரும்பவில்லை’’ என்றார் ஆதித்தியன்.

‘‘தில்லை மாமாவை நான் எனது தந்தையாகவே நினைக்கிறேன். அதனால்அவர் எதைச் சொன்னாலும் நான் கேட்பேன். நிலத்தை நாங்கள் முருகையாவுக்குக் கொடுத்து விட்டேன். அத்துடன் வீடு கட்டுவதற்குப் பணமும் கொடுத்துள்ளேன். முருகையனின் தகப்பனையும் எனக்குத் தெரியும். அவர் நல்லவர். சிறுபிள்ளையாக நான் இருக்கும் போது கோயிலுக்குச் சென்றால் அவர் எனக்குக் கடலை வாங்கித் தருவார். ஏழைகள் என்றால் நீங்கள் அற்பமானவர்கள் என்றா கருதுகிறீர்கள்?. நீங்கள்

நன்மை செய்யாவிட்டாலும் நல்லவர்களாக வாழப் பழகுங்கள். அதனால் உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும். தீமை செய்பவர்களை விட நல்லதைச் செய்வதைத் தடுப்பவர்கள் தீயவர்கள். எந்தவிதமான சுயநலநோக்கமும் இல்லாமல் தர்மம் செய்பவன்தான் உண்மையான மனிதன். அதில் குற்றத்தைக் கண்டு பிடிப்பவன் பாவி. நீங்கள் கொடுத்ததைத்திருப்பிக் கேட்கச் சொல்கிறீர்களா....?'' என்று கேட்டான் வருணன்.

சிவசுந்தரமூர்த்தியால் பேசமுடியவில்லை. அதனால்எழுந்து சென்றார். அவரின் பின்னால் தனபாலன் சென்றான்.

அவர்கள் இருவரும் ஜெயபாலனது வீட்டுக்குச் சென்றனர். அப்போது ஜெயபாலனும் சிவசக்தியும் மண்டபம் கட்டப் போகும் நிலத்தைப் பார்வையிடப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். முதல்நாள் மண்டபம் கட்டுவதற்குக் காசைக் கொடுக்க வேண்டாமென்று சிவசுந்தரமூர்த்தி ஜெயபாலனுக்குச் சொன்னான்.

‘‘மண்டபம் கட்டும் பொறுப்பை எனது மனைவியின் சகோதரர்கள் எனது மனைவியிடம் விட்டு விட்டனர். அவர்களுக்குத் தகப்பனின் பெயரில் மண்டபம் கட்டுவது நல்ல விருப்பம். எனது மாமனார் அதிபராகக் கடமை புரிந்தவர். அத்துடன் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவரது ஞாபகார்த்தமாக அம்மண்டபத்தைக் கட்டி, வருடா வருடம் சிறந்த கலைஞர்களைக் கௌரவிப்பதாகவும் அவர்கள் முடிவு செய்துள்ளனர். இந்த விஷயத்தில் நான் தலையிட முடியாது. தலையிட்டாலும் எனது சொல்லை யாரும் கேட்க

மாட்டார்கள். வீணாக நான் எனது மானத்தை இழக்க வேண்டிவரும். மண்டபம்கட்டித் திறப்பு விழா நடத்திவிட்டுத்தான் நாங்கள் செல்லவுள்ளோம். மண்டபத்திறப்பு விழாவுக்கு எனது மனைவியின் சகோதரர்கள் வருகிறார்கள்''. என்றான் ஜெயபாலன்.

''சிவசுந்தரமூர்த்தி'' சிவசக்தி அழைத்தாள்.

சிவசுந்தரமூர்த்தி திகைத்துப் போனார். அவரை இதுவரை யாரும் பெயர் சொல்லி அழைத்ததில்லை.

''நீங்கள் நல்லவராக இருந்தால் ஐயா, அண்ணை என்று அழைக்கலாம். ஆனால் நீங்கள் கூடாதவர். நான் விக்னேஸ்வரமூர்த்தியை ஐயா என்று தான் அழைப்பேன். தணிகாசலம், வேலாயுதபிள்ளை போன்றவர்களை அண்ணை என்றழைப்பேன். அவர்கள் தெய்வங்கள். அப்படிப்பட்ட பெரியவர்களை விரும்பிப்போற்றும் தன்மை, அவர்களுடைய சிறப்பை உணராத சிறியோரிடம் இல்லை. உங்களுக்கு விக்னேஸ்வரமூர்த்தியின் பெருமையைப் பற்றித் தெரியுமா....? நான் நேற்று இந்தக் கிராமத்திற்கு வந்தவள். அவரோடு நான் பழகிய நாட்கள் குறைவு. ஆனால் அவரது பெருமைகளை உணர்ந்து கொண்டேன். வாழ்நாள் பூராகவும் அவரோடு பழகும் நீங்கள் ஏன் அவரது பெருமைகளைப் புரிந்து கொள்ளவில்லை?. அவரது பெருமைகளைப் புரிந்து கொள்ளாதவர்கள் இழிந்தவர்கள்'' என்றாள் சிவசக்தி.

சிவசுந்தரமூர்த்தி ஆடிப்போனார்; ‘‘அவள் சொல்வதை ஏற்காவிட்டால் அவள் உடனே தன்னைக் கப்பல் ஏற்றி விடுவாள்’’ என உணர்ந்த ஜெயபாலன் சொன்னான்; ‘‘சிவசக்தி சொன்னால் சொன்னதுதான்’’

## 976. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப் பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

பெரியவர்களை விரும்பிப் போற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கம், அவருடைய சிறப்பை உணராத சிறியோரின் உள்ளத்தில் இல்லை.

### எல்லை மீறுவோர்

ஜெயபாலனும் சிவசக்தியும் சென்ற பின்பு சிவசுந்தரமூர்த்தி ஜெயபாலனின் வீட்டை விட்டு வெளியே வந்தானர் சிவசக்தி அவரை ‘‘சிவசுந்தரமூர்த்தி’’ என்று பெயர் சொல்லி அழைத்தது அவருக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவனது மனம் ஆத்திரமடைந்தது.

‘‘அண்ணி அப்படித்தான், சரியான திமிர் பிடித்தவள். அண்ணன் ஊருக்குத்தான் சண்டியனே தவிர அண்ணிக்குச் சரியான பயம். அண்ணியை எதிர்த்து ஏதாவது சொல்லி யிருந்தால் அவரை அவள் வந்த ஊருக்கு அனுப்பிவிடுவாள். அண்ணை கைகட்டி வாய் பொத்தி வாழப் பழகி விட்டார். அண்ணியோடு அவர் ஏதாவது ஏறுமாறாகக் கதைத்தால்அண்ணி தனது சகோதரர்களுக்குச்

சொல்ல அவர்கள் வந்து அண்ணனைத் தாக்குவார்கள் என்று கேள்விப்பட்டேன். நீங்கள் எந்தப் பெரிய மனிதன். உங்களைப் பெயர் சொல்லி அழைக்கிறாள். அத்துடன் விக்னேஸ்வரமூர்த்தி பெருமை மிக்கவராம். அவருடைய பெருமைகளை இழிந்த குணமுடைய உங்களுக்குத் தெரியாதாம். இப்படி அவள் சொலலிலும் போது அண்ணா, ‘அப்படிப் பெரியவர்களைப் பற்றிக் கதைக்கக் கூடாது’ என்று சொல்லியிருக்கலாம்’’ என்றான் தனபாலன்.

‘‘எனக்கும் கவலைதான். எல்லாம் ஜெயபாலன் கொடுத்த இடம். அவள் பெரிய பணக்காரியென்றால் கண்டபடி கதைக்கலாமா...? மனைவியைப் பெரிதும் விரும்பி அவளுக்கு அடங்கி நடப்பவர்கள் சிறந்த மனிதர்களாக இருக்கவும் மாட்டார்கள், தமது கடமைகளைச் சரிவரச் செய்யவும் மாட்டார்கள். வெட்கம் கெட்ட வாழ்க்கை வாழ்வதை விடச் சாகலாம்’’ என்றார் சிவசுந்தரமூர்த்தி.

ஆத்திர மிகுதியால் சிவசுந்தரமூர்த்தி அப்படிச் சொன்ன போதும் அவரது மனம் அடங்க மறுத்தது. அவர்கள் இருவரும் சனசமூக நிலையத்திற்கு வந்த போது முருகையன் அங்கே நின்றான்.

‘‘நான் ஐயாவைத்தான் பார்த்துக் கொண்டு நிற்கிறன்.’’ என்ற முருகையன் பேசுவதை நிறுத்தி விட்டு அவரது முகத்தைப் பார்த்தான். பின் சொன்னான்; ‘‘நீங்கள் ஏழை எளியவர்களுக்குத்

தொண்டு செய்வதில் வல்லவர். ஏழைகள் துன்பப்பட்டால் பொறுக்க மாட்டாதவர்''

சிவசுந்தரமூர்த்திக்கு அவனது பேச்சுப் புரியவில்லை. எனினும் அவன்தன்னைக் கேலி செய்கிறான் என்று நினைத்தார்; ``ஆதித்தியன் ஐயாவையும் வருணனையும் சந்தித்து நான் கஷ்டப்படுவதாகக் கூறி எனக்குப் பொருளுதவி செய்யுமாறு சொன்னீர்களாம்....''

சிவசுந்தரமூர்த்திக்குக் கடுங்கோபம் வந்தது. சனசமூக நிலையத்திற்கு முன்னால் ஏராளமானவர்கள் கூடி நின்றமையால் அவர் பேசாமல் நடந்தார். முருகையன அவரின் பின்னால் வந்தான்.

``ஒவ்வொருவரும் தன்னைப் பற்றியும் தனது குடும்பத்தைப் பற்றியும் நினைத்துச் சுயநலத்துடன் வாழ்ந்தால் நாடு சிறக்குமா...? இல்லை ஏழை எளியவர்கள் வாழ்வார்களா...? உங்களால் ஒருவருக்கு உதவி செய்ய முடியாவிட்டால் பேசாமல் இருக்க வேண்டியது தானே. தான தருமம் செய்யாதவன் தான தர்மங்களைச் செய்பவனைக் குறை சொல்லாமல் இருந்தாலே புகழுடைவான். சுவாமியார் அடிக்கடி சொல்வார்; ``கடவுள் எல்லா உயிர்களுள்ளும் குடியிருக்கிறார். அவர் உயிர்களைப் பிரிந்து ஒருபோதும் இருப்பதில்லை. அப்படியிருக்க நீங்கள் ஏன் உயிர்களுக்குச் சேவை செய்யத் தயங்குகிறீர்கள். ஒவ்வொரு உயிரும் ஒவ்வொரு கடவுளல்ல. எல்லா உயிரிலும் ஒரு கடவுள்.'' என்றாரே படித்த உங்களுக்கு இது புரியவில்லையா...?

சிவசுந்தரமூர்த்தி முருகையன் கூறுபவற்றைக் கேளாதவர் போல விரைவாக நடந்தார். இருப்பினும் முருகையன் அவரைத் தொடர்ந்து விரைவாக நடந்தான்.

“இழிந்தவர்களிடம் செல்வமும் சிறப்பும் ஊழ்வினை காரணமாகச் சேர்ந்து விட்டால், அவர்கள் தம் நிலை மறந்து, தாம் கற்றதை மறந்து எல்லை மீறிச் செயற்படுவார்கள். ஊரில் எத்தனை பணக்காரர்கள் இருக்கிறார்கள்? அவர்கள் ஒருவரும் எனக்கு ஆதித்தியன் ஐயா காணி தந்ததைப் பற்றிக் கதைக்கவில்லை. அத்துடன் தணிகாசலம் அண்ணை மண்டபம் கட்ட வேண்டும் என்று நினைத்தவர். ஆனால் நான் பாதிக்கப்படக் கூடாதென்பதற்காக எனக்கு குடியிருக்கக் காணி பெற்றுத் தந்தவர். அந்த எண்ணம் ஏன் உங்களுக்கு வரவில்லை? உயர்ந்த குணங்களை உடையவர்களுக்குத் தான் பெருமைக்குரிய குணங்கள் இருக்கும். இழிந்தவர்களுக்கு இழிந்த குணம்தான் இருக்கும். ‘படித்தாலென்ன, பணக்காரனாக இருந்தாலென்ன அவரவரின் குலத்தளவுதான் குணமிருக்கும்’ என்று பெரியவர்கள் தெரியாமலா சொன்னார்கள்” என்றான் முருகையன்

**977. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்பும்தான்
சீரல் லவர்கண் படின்.**

இழிந்தவர்களிடம் செல்வமும் சிறப்புக்களும் சேர்ந்து விட்டால், அவர்கள் எல்லை மீறிச் செயற்படுவார்கள்.

## அற்பரின் செயல்

அன்று இரவு ஜெயபாலன் சிவசுந்தரமூர்த்தியின் வீட்டுக்கு வந்தான். சிவசக்தி சிவசுந்தரமூர்த்தியைப் பெயர் சொல்லி அழைத்ததும், அவருடன் கண்டபடி கதைத்ததும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அதை அவளுக்கு முன்னால் சொன்னால் அவளுக்குப் பிடியாது. பின்பு மரியாதையில்லாமல் அவள் கதைப்பாள். அதைவிடப் பேசாமல் இருப்பது மேலானது என்று நினைத்திருந்தான். எனினும் அவனது மனதில் இனம் புரியாத ஒரு வேதனை இருந்ததால் அங்கு வந்தான்.

சிவசுந்தரமூர்த்தியின் மனதில் முருகையனே விஸ்வரூபமெடுத்து நின்றான். ஜெயபாலனைக் கண்ட சிவசுந்தரமூர்த்தி சொன்னார்; "நீயெல்லாம் ஓர் ஆம்பிளை. அவள் என்ன மாதிரி வாய்க்கொழுப்பாய்க் கதைத்தாள். கதைத்தால் தான் பரவாயில்லை. அவள் முருகையன், ஆதித்தியனின் காணிக்குள் வீடுகட்டுவதற்குக் காசு கொடுத்தவளாமே... அதுவும் அவனைத் தேடிச் சென்று கொடுத்தவளாமே.... உண்மையா...?" என்று கேட்டார் சிவசுந்தரமூர்த்தி.

"வீட்டை போய்க் கொடுக்கவில்லை. அன்றைக்கு முருகையன் காணியை விட்டு விட்டுப் போனவன். நானும் சிவசக்தியும் காணியைப் பார்க்கப் போனனாங்கள். அப்ப தட்டு முட்டுச் சாமான்களை முருகையன் ஏற்றிக் கொண்டிருந்தான். அவன்ரை நிலையைப் பார்த்திட்டு கொஞ்சக் காசு கொடுத்தவள்" என்றான் ஜெயபாலன்.

“ஓர் இலட்ச ரூபா கொஞ்சக் காசே...” என்று கேட்டான் தனபாலன்.

“அவாவுக்கு அது கைச் செலவுக்கான காசு” என்றார் சிவசுந்தரமூர்த்தி.

“ம்... கைச் செலவுக்கான காசுதான்.... எங்களுக்குத் தான் ஐந்நூறு ஆயிரம் தாறது” என்றான் தனபாலன்.

“அதைவிடு. தணிகாசலமும் தில்லை நடராசாவும் ஆதித்தியனிடம் காணியும் காசும் வாங்கிக் கொடுத்திருக்கினை. உன்ரை மனிசியும் காசு கொடுத்திருக்கிறாள். அத்துடன் முருகையனின் இளைய மகனை தான் போகும் போது கூட்டிக் கொண்டு போகப் போறதாக உன்ரை மனைவி சொன்னவளாம்...”

ஜெயபாலன் எதுவும் பேசத் தோன்றாது பேசாமல் நின்றான்; “என்னிடமும் மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். நான் எவ்வளவு கஷ்டப்பர்றன். காசு தராவிட்டாலும் ஒரு பிள்ளையை என்றாலும் வெளிநாட்டுக்கு அனுப்பலாம் தானே” என்றான் தனபாலன்.

“டேய், நீ பயப்படாதை நானிருக்கிறன். நான் நினைத்தனென்றால் உன்ரை மூன்று பிள்ளைகளையும் உடனை லண்டனுக்கு அனுப்புவன். நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. முருகையன்ரை மகன் வெளிநாட்டுக்குப் போறதைப்

பார்ப்பம். மனிதனாகப் பிறந்தவன் உழைத்துச் சம்பாதிக்க வேண்டும். பிச்சை எடுத்துச் சீவிக்கிறதே..'' கோபத்துடன் சொன்னார் சிவசுந்தரமூர்த்தி.

தனபாலன் மனதுள்ச் சிரித்தான். விக்னேஸ்வரமூர்த்தி, தணிகாசலம், வேலாயுதபிள்ளை போன்றோர் தாம் செய்யும் பெரும் பெரும் செயல்களைப் பற்றி வெளியே சொல்வதில்லை. அவர்கள் செய்து தரப் போவதாகவும் கூறுவதில்லை. ஆனால் சிவசுந்தரமூர்த்தி தன்னை உயர்வாகக் கருதித் தன்னை விட உயர்ந்தவர்கள் யாரும் இல்லை என்று வியந்து சொல்வார். அதனால் தான் முருகையன் போன்ற தாழ்ந்தவர்கள் கூட அவரை மதிப்பதில்லை. எத்தனை பேரிடம் வேலை பெற்றுத் தருவதாகவும் வெளிநாட்டுக்கு அனுப்பதாகவும் கூறிப் பணம் பெற்றவர்'' என்று நினைத்தான் தனபாலன்.

''என்னடாப்பா யோசிக்கிறாய்? முருகையனின் மகனை விட உன்ரை பிள்ளைகள் குறைவே. நீ யோசிக்காதை. நான் அவனை லண்டனுக்கு அனுப்புறன். நான் எத்தனை பேரை அனுப்பினனான். என்ரை நண்பனொருவன் லண்டனிலை இருக்கிறான். அவன் வாறமாதம் லண்டனிலை இருந்து வருகிறான். போனமுறை அவன் வந்த போது பத்துப் பேரை லண்டனுக்குக் கூட்டிக் கொண்டு போனவன். நாலு பொடியளைை நான் கொடுத் தனான். நீ கடவுச் சீட்டைக் கொண்டு வந்து தா'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

பெருமூச்சுவிட்டான் தனபாலன். சிவசுந்தரமூர்த்தி சொல்வதை நினைக்க அவனுக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது.

“நீ கொஞ்சம் அடக்கமாக நடந்து கொள். சிவசக்தியை மதி. நீ முன்பு கண்டபடி எனக்கு எழுதிய கடிதங்களை வாசித்து விட்டுத்தான் அவள் உன்னுடன் அப்படி நடக்கிறாள்.” என்றான் ஜெயபாலன்.

ஜெயபாலன் சொன்னது தனபாலனுக்குச் சரியாகப் பட்டது. அவன் குடித்து விட்டு நல்லை நாதனுக்குச் சொல்ல, நல்லநாதன் அதை எழுதி விலாசமிட்டுக் கொடுப்பான். “மிகமோசமாக எழுதிவிட்டேன்” என்று நினைத்துத் துக்கப்பட்டான் தனபாலன்.

**978. பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து.**

பெருமையான பண்பாவது எக்காலத்திலும் பணிந்து வாழ்வதாகும், சிறுமையான பண்பானது தன்னைத் தானே வியந்து பாராட்டிக் கொள்வதாகும்.

**பண்பாவது**

தனபாலன் கடைசியாக எழுதிய கடிதத்தை நினைத்துப் பார்த்தான். “எனக்கு முன் பிறந்ததால் அண்ணாவென எழுத வேண்டியுள்ளது. ஆனால் உண்மையான பாசத்துடன் நான் இதை

எழுதவில்லை. நீ எங்களை விட்டுச் சென்று இருபத்தைந்து வருடங்களாகி விட்டன. நீ சென்ற புதிதில் எமக்குக் கடிதம் எழுதவில்லை. உனது நண்பர்களுக்குக் கடிதம் எழுதினாய். அவர்களிடம் நான் உனது முகவரியைப் பெற்றுத் தான் உனக்கு நான் கடிதம் எழுதினேன். உன்னைப் பெற்றவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் உனக்கிருக்கிறதா…? என்னால் உழைக்க முடியும். என்னாலை வாழ முடியும். நீ எனக்குப் பணம் அனுப்பத் தேவையில்லை. ஊரில் உள்ள சிலருக்கு நீ பணம் அனுப்பி அதை எனது மனைவிக்குக் கொடுக்கக் சொல்கிறாய். இது உனக்கு நன்றாக இருக்கிறதா….? யாராவது நீ எனது மனைவிக்குப் பணம் அனுப்பியதாகச் சொன்னால், நான் அவளிடம் சென்று கேட்பேன். நீ பணம் அனுப்பவில்லையென்று மகா கணபதி மீது சத்தியஞ் செய்வாள். நீ ஏன் ஊரில் வதந்திகளைப் பரப்புகிறாய். ஊரவர்கள் நீ எனக்கு மாதம் மாதம் பணம் அனுப்புவதாகப் பேசிக் கொள்கிறார்கள்.''

''நீ உனது மனைவிக்குப் பயந்து நடக்கிறாய். காரணமின்றி மனைவிக்குப் பயப்படுபவன் பேடி. ஆண்மையில்லாதவன். உனது மனைவிக்குப் பயந்து வாழ்வதை விட ஒரு முழக் கயிற்றில் தொங்குவது மேலானது. பெண்களுக்கு அடிமைப்பட்டவன் அறச் செயல்கள் எதையும் செய்யமாட்டான்; உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் உதவ மாட்டான்; உறவினர்களினதும் நண்பர்களினதும் குறைகளைத் தீர்க்க மாட்டான். மனைவிக்கு அடிமையாகி அவளின் சொற்படி நடப்பவனை விட இயல்பாகவே

நாணத்தை உடைய பெண்மை பெருமையுடையது. அதனால் நீ சேலையைக் கட்டிக் கொண்டிரு.''

''தனபாலா, சொல்கிறேன் என்று குறை நினைக்காதே. சிவசக்தி மிகவும் நல்லவள். நான் தான் குடித்து விட்டுத் தலைகால் புரியாமல் நடந்து கொள்வேன். அதனால் தான் அவள் என்னுடன் அப்படி நடக்கிறாள். உன்னைப் பற்றி இங்குள்ளவர்கள் எனக்கு எழுதுவார்கள். நீ குடித்து விட்டு ஊரவருடன் சண்டைக்குச் செல்வது திருடுவதெல்லாம் அவளுக்குத் தெரியும். அதனால் தான் அவள் உன்னை மதிப்பதில்லை. அத்துடன் பணத்தைத் தணிகாசலம் அண்ணைக்கு அனுப்புவாள். உனக்குத் தெரியாமல் உனது மனைவிக்கு அவள் பல இலட்ச ரூபாவை அனுப்பியுள்ளாள். அதை உனது மனைவி பிள்ளைகளின் பெயரில் வங்கியில் வைப்பிலிட்டுள்ளாள். கர்வமும் சண்டித்தனமும் இல்லாமல் வாழ்ந்தால் தான் பெருமை உண்டாகும். நல்லவர்கள் உதவுவார்கள். கர்வங் கொண்டால் நல்ல முறையில் வாழ முடியாது. முருகையன் பணம் கேட்கவில்லை. அவனது பண்பினையும் நடத்தையும் கண்டு தான் அவள் அவனுக்கு உதவி செய்தாள். அவனது மகன் இப்போது எமது வீட்டில் வேலை செய்கிறான். மிகவும் நல்லவன்; பண்பானவன்; கர்வமில்லாதவன்; பணிவுடையவன். தன்னடக்கமும் கீழ்ப்படியும் தன்மையும் தான் மற்றவர்களைக் கவரும். சிவசக்தியின் மூத்த சகோதரனின் வீட்டைக் கவனிக்க ஒரு வேலையாள்த் தேவையாக உள்ளது. நம்பிக்கையான ஆண் இருந்தால் அழைத்து வருமாறு அவளது மூத்த சகோதரன் எழுதியுள்ளான். அதனால் தான் கர்வமில்லாத

முருகையனின் மகனை அழைத்துச் செல்லவுள்ளாள்.'' என்றான் ஜெயபாலன்.

பத்து இலட்ச ரூபாவுக்கு மேல் அவனது பிள்ளைகளின் பெயரில் ஜெயபாலன் வைப்புச் செய்தது தனபாலனுக்குத் தெரியாது. அதனால்தான் அவன் மிகுந்த கர்வத்துடன் கடிதங்களை எழுதினான். ''கர்வமில்லாது பணிவுடன் நடந்திருந்தால் இன்னும் பயன் பெற்றிருக்கலாம்'' என்று நினைத்தான் தனபாலன்.

''கர்வமில்லாது வாழ்வது பெருமைக்குரியது. கர்வங்கொண்டால் அழிவது நிட்சயம். நீ கர்வங் கொண்டதால் தான் உனது மனைவி கூடப் பொய்ச்சத்தியம் செய்தாள். அதை நினைத்தாவது திருந்திவாழ்'' என்று சொல்லிவிட்டுச் சென்றான் ஜெயபாலன்.

''நீ உதை நம்பாதை. மனைவிக்குப் பயந்து தான் அவன் உன்னைத் திருப்திப் படுத்திவிட்டுப் போகிறான். அவன் மனைவிக்கு அடிமையாகிவிட்டான். இப்ப அவளுக்கு உன்னை அடிமையாக்க நினைக்கிறான்'' என்றார் சிவசுந்தரமூர்த்தி.

''நான் செய்தது பிழை. பிறகு அண்ணாவைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை'' என்றான் தனபாலன்.

**979. பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல்.**

பெருமைப் பண்பானது செருக்கு இல்லாமல் வாழ்வது; சிறுமைத் தன்மை கர்வங் கொண்டு அழிவது.

## பெருமையும் சிறுமையும்

ஜெயபாலன் அப்படிச் சொன்னபின்பு தனபாலனுக்குக் கவலையாக இருந்தது. சுவாமியார் சொல்வார்; “நீ உயர்வடைய விரும்பினால் எல்லோரிடமும் பணிவாக நடந்து கொள். பணிவுடன் நடந்து கொள்பவனைத்தான் கடவுளும் விரும்புவார். ஒருமனிதன் பணிவுடன் நடந்து கொண்டால், மனிதப் பண்புகள் யாவும் அவனிடம் தானாக வந்து சேர்ந்து விடும். அன்பு, பண்பு, விட்டுக் கொடுத்தல், கீழ்ப்படிதல், பெரியவர்களை மதித்தல் போன்றவற்றை மனிதப் பண்புகள் என்று கூறலாம். இவற்றை வாயால் கூறினால் மட்டும் போதாது. அவற்றைக் கடைப் பிடிக்கவும் வேண்டும். இவற்றைக் கடைப்பிடித்தால் அவை உன்னைப் பற்றிப் பிடித்து விடும். அதன் பின் இக்குணங்கள் உனது இயல்பான குணங்களாக மாறிவிடும். நான் நல்லவனாக, மனிதப் பண்புடையவனாக வாழ வேண்டுமென்று பலர் நினைக்கிறார்கள். இவற்றை நினைப்பதை விட நடந்து காட்டினால் தான் பெருமைக்குரியவர்கள் ஆவர். முதலில் மனிதரை மதிக்கக் கற்றுக் கொள்ளல் வேண்டும். மனித நேயமில்லாதவனையும் மதிக்கக் கற்றுக் கொண்டால், உன்னை அவனும் மதிப்பான். மதிப்பைக் கொடுத்துத்தான் மதிப்பைப் பெறுதல்

வேண்டும்'' சுவாமியாரின் அருளுரை தனபாலனின் மனதை உறுத்தியது.

அவன் தணிகாசலத்தின் வீட்டுக்குச் சென்றான். அங்கே தணிகாசலம் இருந்தார். அவரை அவன் பார்த்துக் கொண்டிருந்தான். அவர் அவனை மதிப்பவர். அவன் தீய செயல்களைச் செய்தாலும் அன்பாகத் தான் ''அச்செயல்களைச் செய்யாதே'' என்று கூறுபவர்.

''என்ன தனபாலன்? வா, வந்திரு'' என்றார்.

தனபாலன் அவரின் அருகில் சென்று அமர்ந்து கொண்டான். அவனால் உடனடியாப் பேசமுடியவில்லை.

''சொல்லு...... பயப்படாதை சொல்லு'' என்றார் தணிகாசலம்.

மீண்டும் சிலகணங்கள் தயங்கிய தனபாலன் சொன்னான்; ''அண்ணா என்னைப் பேசினவர்''

''ஜெயபாலனே..?''

''ஓம்.... நான் முன்பு குடித்து விட்டு நல்லை நாதனைக்கொண்டு அண்ணையைத் தாறுமாறாகத் திட்டிக் கடிதம் எழுதுறனான். அண்ணியை யார் என்று எனக்குத் தெரியாது. அவாதான் அண்ணனை எமக்குப் பணம் அனுப்பக் கூடாதென்று தடுத்திருக்கிறா என்று நினைத்து அவாவைக் கண்டபடி திட்டி எழுதிவிட்டேன். ஆனால் அவா நல்லவா. அண்ணாதான் அங்கு போய்க் குடித்து

விட்டு அடாவடித்தனங்களில் ஈடுபட்டுள்ளார். அதனால் தான் அண்ணியும் அண்ணியின் சகோதரர்களும் அண்ணாவை வெருட்டி வைத்திருந்தனர். அது தெரியாமல் நான்...'' அழுதான். பின் சிறிது நேரத்தின் பின் சொன்னான்; ''அண்ணி எனக்குத் தெரியாமல் எனது மனைவிக்குப் பணம் அனுப்பியிருக்கிறா...''

''உலகில் மற்றவர்கள் மீது குற்றங் காண்பதும், அக்குற்றத்தைப் பற்றி உபதேசம் செய்வதும் தான் மிகவும் இலகுவான காரியம். நீ நன்றாகச் சவர்க்காரம் போட்டு குளி. குளித்து முடித்த பின்பு தேகத்தைத் தேய்த்தாயானால் அழுக்கு இருக்கும். அதே போலக் குற்றம் குறைகள் இல்லாமல் எந்த மனிதனாலும் வாழ முடியாது. விக்னேஸ்வரமூர்த்தி செய்யும் நல்ல காரியங்கள் பலவற்றை, பலர் பிடிக்காததால் விமர்சிக்கிறார்கள். அது இயற்கை. ஆனால் அக்குற்றங்களைப் பெரிது படுத்தாது மறைப்பது பெருமையான பண்பு. தெரிந்தாலும்அதைப் பற்றிப் பலருடன் மிகக் கேவலமாக விமர்சிக்கக் கூடாது. சிலர் பிறரின் குற்றங்களைக் கூறியே வாழ்கிறார்கள். அது சிறுமைத்தனம். உனது அண்ணி மிகவும் நல்லவள். நான் அவளுடன் கதைத்த போது அதை உணர்ந்து கொண்டேன். அப்படிப்பட்ட ஒரு நல்ல பெண்ணை உனது சகோதரன் அளவுக்கதிகமாகக் கொடுமைப் படுத்தியுள்ளார். ஊருக்கு வந்த பின அவர் எத்தனை தீய செயல்களைச் செய்தார் என்று உனக்குத் தெரியும். கிருஷ்னனைக் கடத்திச் சென்று அடித்தது அவர் தானே...''

தனபாலன் யோசித்துப் பார்த்தான்; ‘‘அண்ணாவுடன் நானும் சிவசுந்தரமூர்த்தியும் சேர்ந்து எவ்வளவு தீமைகளைச் செய்தோம். பாவம் முருகையன். அவனுக்கு ஆதித்தியன் காணி கொடுப்பதை நிறுத்துவதற்காக எத்தனை திருகுதாளங்களைச் செய்தோம்...’’

‘‘என்ன யோசிக்கிறாய்? ஒருவரை மதித்தால் தான் அவரிடமிருந்து உதவிகளைப் பெறலாம். அதனால் உனது அண்ணியை மதித்து நட. அவள் நல்லவள். கட்டாயம் உனக்கு உதவி செய்வாள். நான் அவளுக்குச் சொல்கிறேன்’’ என்றார் தணிகாசலம்.

‘‘சரியண்ணை நான் வாறன்’’ என்று கூறிவிட்டு எழுந்தான் தனபாலன். அவனது மனம் நிறைந்திருந்தது.

---

**980. அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.**

---

பிறருடைய குற்றங்களை பெரிது படுத்தாமல் மறைப்பது பெருமைக்குரிய பண்பாகும். அக் குற்றங்களைப் பெரிது படுத்திக் கூறுவது சிறுமைத் தனமாகும்.